www.gnanam.info
www.gnanam.lk
ISSN 2478-0340

பெப்ரவரி 2021


# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை :
ரூபா 100/=

249

வாழ்நாள்
இதழியல் சாதனையாளர்
அமரர் டொமினிக் ஜீவா



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி : 21
சுடர் : 09
249

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506

தொ.நகல் ☞ 0094-11-2362862

இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை

மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் : ரூ 1,000/=
ஆறு வருடம் : ரூ 5,000/=
ஆயுள் சந்தா : ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்பு களின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*

*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந் தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகிய வற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*

*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*

*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

## இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**

*நியாஸ் ஏ. ஸமத்* 11
*உடப்பூர் வீரசொக்கன்* 22
*அகளங்கன்* 27
*செங்கதிரோன்* 28
*மொழிவரதன்* 36
*நாச்சியாதீவு பர்வீன்* 42
*பா.வானதி வேதா இலங்காதிலகம்* 45
*Leigh Hunt / செல்லத்தம்பி சிறீக்கந்தராசா* 46

⊙ **சிறுகதைகள்**

*கே.எஸ்.சுதாகர்* 06
*வே. தில்லைநாதன்* 15
*வி. ஜீவகுமாரன்* 23
*ஆசி. கந்தராஜா* 30
*ஏ.ஏ.ஹெச்.கே.கோரி* 37

⊙ **கட்டுரைகள்**

*பேராசிரியர் செ.யோகராசா* 12
*முனைவர் கு.சிதம்பரம்* 18
*பேராசிரியர் சபா ஜெயராசா* 34
*கனகசபை தேவகடாட்சம்* 43
*ஹிஸம் ஹிஜாஸ்* 48

⊙ **பத்தி**

*பேராசிரியர் துரை மனோகரன்* 52

⊙ **சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**

*கலாபூஷணம் கே. பொன்னுத்துரை* 54

⊙ **வாசகர் பேசுகிறார்** 55

# ஆசிரியர் பக்கம்

## வாழ்நாள் இதழியல் சாதனையாளர் டொமினிக் ஜீவா

ஈழத்து இலக்கிய உலகில் அழியாத்தடம்பதித்த டொமினிக் ஜீவா 28-01-2021இல் அமரராகிவிட்டார் என்ற செய்தி இலக்கிய உலகை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. கொரோனாவின் கொடிய கரங்கள் அவரை மீளாத்துயிலில் ஆழ்த்திவிட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவரது இழப்பு **ஈழத்து இதழியல் வரலாற்றில் நிரப்பமுடியாத வெற்றிடம்** ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

டொமினிக் ஜீவா ஒரு பொதுவுடமைவாதி, எழுத்தாளர், சிறந்த மேடைப் பேச்சாளர், சீர்திருத்தவாதி, இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியர், நூல் வெளியீட்டாளர், இலக்கியச் செயற்பாட்டாளர், தலைநிமிர்ந்த மிடுக்கோடும் சுறுசுறுப்போடும் உழைப்போடும் உலாவிவந்த சாதனையாளர். ஈழத்து இலக்கியத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட ஜீவன். யாவருக்கும் நல்ல நண்பன்.

யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 27-06-1927இல் பிறந்தவர் டொமினிக் ஜீவா. யாழ். புகையிரத நிலையத்தின் அருகே அவரது இல்லம் அமைந்திருந்தது.

> "தந்தை, அவிராம்பிள்ளை ஜோசப் யாழ் நகரில் சலூன் நடத்தியவர். 1933 காலகட்டத்தில் பஸ் வைத்து யாழ் – கீரிமலைப் பாதையில் ஓட்டியவர். நல்ல நாடகரசிகர். யாழ். தகரக் கொட்டகையில் நடைபெற்ற கூத்துக்களை ஒழுங்காகத் தரிசித்தவர். இந்திய நாடகக் குழுக்கள் இங்கு வந்தபோதெல்லாம் அவற்றின் பின்னால் நாடக வெறியுடன் அலைந்தவர். தாய் மரியம்மாவுக்கு சரவணை என்ற கிராமத்தில் போதிய வயல் நிலம் இருந்தது. அவர் நாட்டுப் பாடல்களை, அருவி வெட்டுப் பாடல்களை மிகவும் உணர்ச்சியுடன் பாடிக்காட்டுவார். பெற்றோரின் பாரம்பரியப் பேற்றிலே கலைஞானம் இருந்தது. இதனை ஜீவா பிற்காலத்தில் நேர்த்தியாக விருத்திசெய்து பல விசேஷ குணங்களைப் பெற்றிருந்தார்"
>
> – எனக் குறிப்பிட்டுள்ளார் பிரபல எழுத்தாளராக விளங்கிய டாக்டர் நந்தி.

டொமினிக் ஜீவா ஐந்தாம் வகுப்புவரை யாழ். சென்ற் மேரிஸ் பாடசாலையில் படித்தவர். இவரது இலக்கியப் பிரவேசத்திற்குக் காரணம் அவர் ஆரம்பப் பள்ளி மாணவனாக இருந்தபோது அந்தப் பிஞ்சுப் பருவத்திலே அவரது இதயத்திலே விழுந்த அடி. வகுப்பறையில் ஆசிரியர் கரும்பலகையில் போட்ட கணக்கு தவறானது என்பதைச் சுட்டிக் காட்டினார் மாணவனான ஜீவா. சகமாணவர்கள் வகுப்பறையே அதிரும்படி சிரித்துவிட்டார்கள். ஆத்திரம் கொண்ட ஆசிரியர் ஜீவாவின் கையிலிருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிடுங்கி இரண்டாகக் கிழித்து அவரது முகத்தில் எறிந்து "நீங்கள் எல்லாம் ஏண்டா படிக்க வந்தீர்கள். சிரைக்கப் போவதுதானே!" என்று ஜீவாவின் பிறப்பை, தந்தை செய்த தொழிலைச் சுட்டிக்காட்டியபோது ஜீவாவின் இதயத்தில் விழுந்த காயந்தான் கனன்று அவரது எழுத்தில் எரியத் தொடங்கியது. ஆரம்ப காலத்தில் பொதுவுடமைச் சித்தாந்த நூல்களை வாசிப்பதற்கு ஜீவாவுக்கு உதவியவர் திரு.ஆர்.ஆர். பூபாலசிங்கம். திரு. பொன் கந்தையா, கார்த்திகேசன், லிங்கன் ஆகியோரின் வழிகாட்டலில் ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டார்.

1948இல் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்ட தோழர் ப. ஜீவானந்தத்தை சந்திக்கும் வாய்ப்பு டொமினிக் ஜீவாவுக்கு ஏற்பட்டது. அச்சந்திப்பே ஜீவாவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் ஜீவாவிடம் சாதியுணர்வு மேலோங்கியிருந்தபோதிலும் வெகு விரைவிலேயே தான்வாழும் சமூகத்தின் சமூக பொருளாதார ஒடுக்குமுறைகளையும் தெரிந்து கொண்டார். மார்க்சியக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஜீவாவின் எழுத்துப்பணி பரிணமிக்க வழிகாட்டியவர் ப. ஜீவானந்தம். அவர்மீது கொண்ட பக்தியினால், **டொமினிக்**

என்ற தனது பெயருடன் **ஜீவா** என்ற பெயரையும் இணைத்துக் கொண்டு **டொமினிக்ஜீவா** என எழுத்துலகில் இவர் இயங்கத் தொடங்கினார்.

"சலூன் தொழிலாளியாகிய நான், அந்தச் சவரச்சாலையை சர்வகலாசாலையாக நினைத்தேன், மதித்தேன், படித்தேன், இயங்கினேன்", எனக் குறிப்பிட்டுள்ளார் டொமினிக்ஜீவா. சிகை அலங்கரிப்பாளராக வாழ்க்கையை ஆரம்பித்த ஜீவா பிற்பட்ட காலத்தில் முற்போக்கு இலக்கியத்திற்கு உழைப்பதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டார்.

இருபது வயதில் ஜீவா எழுதிய முதற்கதை **எழுத்தாளன்**, சுதந்திரனில் பிரசுரமாகியது. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தொட்டு கண்ணெதிரே கானும் வாழ்க்கைப் போராட்டங்களைப் படம் பிடித்துக் காட்டி வாழ்க்கையோடு ஒன்றிணைந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்தார் டொமினிக் ஜீவா.

ப. ஜீவானந்தத்தின் சந்திப்புக்குப்பின்னர் ஜீவா தனது தமிழ்நாட்டு உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டார். விஜயபாஸ்கரனின் சரஸ்வதி என்னும் இலக்கிய சஞ்சிகை டொமினிக் ஜீவாவின் சிறுகதைகளுக்கு அதிகளவில் இடம் கொடுத்தது. சரஸ்வதி 10–11–58 இதழில் ஜீவாவின் நிழற்படத்தை அட்டையில் பதித்துப் பெருமைப்படுத்தியது. தமிழக இதழான தாமரையும் ஜீவாவின் கதைகளை ஏற்றுப் பிரசுரித்தது. 1968 ஜூலையில் வெளிவந்த தாமரை சிறுகதைச் சிறப்புமலர் ஜீவாவின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்து ஈழத்து எழுத்தாளர்களுக்குக் கௌரவத்தை ஏற்படுத்தியது. ஜீவாவின் தமிழக உறவு சரஸ்வதி, தாமரை ஆகியவற்றினூடாக மலர்ந்து, அவர் தமிழகத்துக்கு அடிக்கடி பயணித்துத் தனது நூல்களை தமிழகத்திலேயே பதிப்பிக்க வழிவகுத்தது.

இதே காலப்பகுதியில் இலங்கையில் 1956இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து சமூக பொருளாதார நிலைகளால் இலங்கைத் தமிழரிடையே தேசிய உணர்ச்சி பிறந்தது. அதன்விளைவாக வர்க்க உணர்வுகள் தீவிரமடைந்தன. தேசிய விழிப்பும் வர்க்கப்போராட்டங்களும் மக்களிடையே பெரியதொரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் இலக்கியத்திலும் பிரதிபலித்தது. நாட்டின் பிரச்சினைகளை இலக்கியமாக்கவேண்டும் என்ற எண்ணக்கரு முனைப்புப் பெற்று தேசிய இலக்கியக் கொள்கை தீவிரம் அடைந்தது. இந்தப்பின்னணியை நன்கு விளங்கிக்கொண்ட பேராசிரியர் க.கைலாசபதி 1957இல், தான் பணிபுரிந்த தினகரன் வழியாக இந்த எழுச்சியைத் தூண்டி வளர்த்தார். பேராசிரியர் கா.சிவத்தம்பியும் மார்க்ஸியப் பின்னணியில் பெரும் பங்களிப்பு நல்கினார். இந்த மாற்றத்தை டொமினிக் ஜீவாவும் நன்கு உள்வாங்கிக் கொண்டார்.

1957இல் தேசிய சாஹித்திய மண்டலம் உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்திலேதான் டொமினிக் ஜீவாவின் ***தண்ணீரும் கண்ணீரும்*** என்ற முதலாவது சிறுகதைத் தொகுதியை சரஸ்வதி ஆசிரியர் வெளியிட்டார். ஈழத்தின் தமிழ் இலக்கியம் தென் இந்தியத் தமிழ் இலக்கியத்தின் பிரதியாக அமையாது ஈழத்தின் மண்வாசனையைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஜீவாவின் சிறுகதைத் தொகுதி அமைந்தது.

1960இல் இச்சிறுகதைத் தொகுதி அவ்வாண்டின் சாஹித்திய மண்டலப்பரிசினைப் பெற்றது. அதுவே இலங்கையில் **முதன்முதலில் நவீன புனைகதை இலக்கியத்திற்கான சாஹித்திய விருது பெற்ற நூலாகும்**. பரிசு பெற்றுவந்த ஜீவாவை யாழ். புகையிரத நிலையத்தில் 13–10–1961 அன்று மலர்மாலை அணிந்து வரவேற்றார் யாழ்நகரசபை முதல்வர் ரி. எஸ். துரைராசா அவர்கள்.

டொமினிக் ஜீவா பெற்ற இந்தப்பரிசு ஈழத்து மரபுவழி இலக்கியகர்த்தாக்களை சீற்றம் கொள்ள வைத்தது. பண்டித வர்க்கத்தினர் ஒன்றுசேர்ந்து பேராசிரியர் ஆ.சதாசிவம் தலைமையில் மரபுப் போராட்ட அணியொன்றை உருவாக்கினர். "சிறுகதையும் வசன கவிதையும் இலக்கியமாகா. இன்றைய சிறுகதைப்படைப்பில் இழிசினர் வழக்கு அதிகரித்துவிட்டது. பேச்சுத் தமிழுக்கு இடமளிக்கும் பொதுவுடமை வாதிகள் தமிழைக் கொலை செய்கிறார்கள்" என மரபுவாதிகள் வாதிட்டனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக உச்சமான தர்க்கமாக இந்த மரபுப் போராட்டம் அமைந்தது.

இந்தத் தர்க்கமும் போராட்டமும் டொமினிக் ஜீவாவின் நூலுக்குப் பரிசு கிடைத்ததன் பின்னணியில் எழுந்தது.

ஜீவாவும் டானியலும் இலக்கிய உலகின் இரட்டையர்கள். இலக்கிய உலகுக்குள்ளே அவர்கள் நுழைந்தபோது இரண்டு விதமான எதிர்ப்புக்கள் எழுந்தன. படித்த பண்டிதர்களும் சாதித் திமிர் பிடித்தவர்களும் இவர்களது எழுத்துக்களை நிராகரித்தனர். சமூக அந்தஸ்த்து கொடுக்க மறுத்தனர். இவற்றுக்கெதிராகப் போராட வேண்டிய நிலைமையும் அப்போது அவர்களுக்கு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் 1963இல் நடந்த சாஹித்திய விழாவில், கூழ்முட்டை எறிந்து கூட்டம் குழப்பப்பட்ட நிகழ்வுடன் இந்த மரபுப் போராட்டம் முடிவுற்றது.

இத்தகையதொரு பின்புலம், மக்களை இலகுவில் சென்றடையும் நவீன உரைநடைப்புனைவு இலக்கியத்தை ஆக்க இலக்கியமாக ஈழத்தில் அங்கீகரிக்க வைத்தது.

1970இல் சாஹித்திய மண்டல உறுப்பினர் பதவியும் ஜீவாவுக்குக் கிட்டியது. இவரது "தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதியை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் எம்.ஏ. பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. ருஷ்ய, செக்கோசிலவக்கிய, ஆங்கில, சிங்கள மொழிகளில் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

சிற்பி சரவணபவனை ஆசிரியராகக் கொண்டு, ***கலைச்செல்வி*** இதழ் 1958 முதல் 1966 வரை எட்டு ஆண்டுகள் வெளிவந்தது. கலைச்செல்வி நின்றுபோன காலகட்டத்தில், 1966 ஆகஸ்ட்டில் மல்லிகை இதழைத் தோற்றுவித்தார் ஜீவா. **மல்லிகை** இதழ் நாற்பத்தாறு ஆண்டுகள் வெளிவந்தது. வேறு எந்த ஈழத்துச் தமிழ்ச்சிற்றேடும் நாற்பத்தாறு ஆண்டுகளை எட்டிப்பிடித்ததாகச் சரித்திரம் இல்லை. இன்று மீள்நோக்கிப் பார்க்கும்போது, மல்லிகை தொடங்கப்பட்ட காலமும் அதன் நோக்கமும் அதன் வளர்ச்சிப்போக்கும் ஒரு காலகட்ட இலக்கியச் செல்நெறிக் கருத்தியலை–மார்க்ஸியக் கருத்தியலை–கூர்மைப்படுத்தி நுண்மைப்படுத்தியதை அவதானிக்க முடிகிறது. தமிழ் இலக்கியத்துறையில் சிறுகதையாளர் டொமினிக் ஜீவாவைவிட **மல்லிகை ஜீவா** ஏற்படுத்திய தாக்கம் அதிகமானது.

மல்லிகை தோன்றிய காலத்திலிருந்து அச்சடித்த பிரதிகளை எடுத்துச்சென்று எவ்வித கூச்சமுமில்லாமல் தெருவில் இறங்கி, பலரிடம் நேராகவே கையளித்து மல்லிகையின் நேசசக்திகளை மாதாமாதம் நேரிலே சந்தித்து விநியோகிப்பது மல்லிகையின் தொடர் வருகைக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது.

இந்த மண்ணில் பேனா பிடித்தவர்கள் அனைவரையுமே அவர்கள் எந்தக் கொள்கையுடையவர்களாக இருந்தாலும் சரி எந்தத் தளத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் சரி அவர்களை ஒருங்கு சேர நேசிக்கவும் அரவணைக்கவும் தெரிந்தவர் டொமினிக் ஜீவா.

பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கலாநிதிகள் பலர் மல்லிகையில் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளனர். அவை இலக்கிய உலகிற்குப் பெரிதும் உதவியுள்ளன. அதேவேளை கட்டுரையாளர்களின் பதவி உயர்வுகளுக்கும் அவை உதவியுள்ளன.

மல்லிகை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்துப் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த ஜீவா, ***மல்லிகைப் பந்தல்*** மூலம் பல தரமான நூல்களை வெளிக் கொணர்வதில் மும்முரமாக உழைத்தார். 50 நூல்கள்வரை வெளியிட்டார்.

05–02–1997 மல்லிகைக் காரியாலயம் கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் மீண்டும் மல்லிகை வெளிவரத் தொடங்கியது. கொழும்பில் உள்ள எழுத்தாளர்கள் சந்திக்கும் இடமாகவும் கொழும்புக்கு வரும் எழுத்தாளர்கள் தவறாது விஜயம் செய்யும் இடமாகவும் மல்லிகைக் காரியாலயம் இயங்கத் தொடங்கியது. டிசம்பர் 2012 வரை மல்லிகை வெளிவந்தது; காரியாலயமும் இயங்கியது.

மல்லிகை, பல பிரதேசச் சிறப்பு மலர்களை வெளியிட்டுள்ளது. அவற்றின்மூலம் பல புதிய எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டார்கள். முஸ்லிம் பிரதேச எழுத்தாளர்கள், மலையக எழுத்தாளர்கள் எனப் பலர் வெளிச்சத்துக்கு வந்தார்கள். மல்லிகை பல இலக்கிய கர்த்தாக்களின் படங்களை அட்டையில் பொறித்து அவர்கள் பற்றிய விபரங்களையும் வெளியிட்டு அவர்களைக் கௌரவித்தது. சிங்கள எழுத்தாளர் சிலரையும் அட்டையில் பொறித்துக் கௌரவித்தார் ஜீவா. சிங்கள இலக்கிய வட்டாரத்தில் அதிகம் அறியப்பட்ட தமிழ் எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் உடையுடன் காணப்படும் ஜீவா அதே உடையுடன் இந்தியப் பயணங்கள், சோவியத் யூனியன், ஐரோப்பிய நாடுகள் எனப் பல நாடுகளுக்கும் சென்று வந்ததோடு தனது பயண அனுபவங்களையும் மல்லிகையில் பதிவு செய்துள்ளார்.

**எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்** டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல். இதன் இரண்டாவது பாகம் **அச்சுத் தாளின் ஊடாக ஒர் அனுபவப் பயணம்** என்பதாகும். டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல் UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த டொமினிக் ஜீவா, பிற்பட்டகாலத்தில் அக்கட்சியில் சித்தாந்தப்பிளவு ஏற்பட்டபோது மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட்டாகச் செயற்பட்டார்.

டொமினிக் ஜீவாவின் நூல்களாக **தண்ணீரும் கண்ணீரும் (1960), பாதுகை (1962), சாலையின் திருப்பம் (1967), வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள், அனுபவ முத்திரைகள், முப்பெரும் தலைநகரில் முப்பது நாட்கள்** ஆகியவை வெளிவந்துள்ளன.

இலக்கியப் பணிக்காக டொமினிக் ஜீவா பல பரிசில்களைப் பெற்றுள்ளார். ஸ்ரீலங்கா நூல் அபிவிருத்திச் சபை, வடக்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம், சட்டக்கல்லூரித் தமிழ் மன்றம், அகில இலங்கைக் கம்பன் கழகம், நாவலர் சபை, தென்கிழக்கு இலக்கியப் பேரவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் சங்கம், எம்.எச்.எம்.எஸ். மன்றம் இப்படியாக பல மன்றங்களின் பரிசில்களைப் பெற்றுள்ளார். யாழ்.பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவுக்கு எம்.லிட். என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க முன்வந்தது. அந்தப் பட்டம் கல்வித்தகைமைசார் பட்டம் என்பதனால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜீவா மறுதலித்துவிட்டார்.

பிரதமரால் வழங்கப்படும் **தேசநேத்துரு (தேசத்தின் கண்)** என்ற விருதும் டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் அரச **சாஹித்தியரத்னா** உயர்விருது வழங்கப்பட்டது. கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது (2013) இவருக்கு 13-07-2014இல் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் வழங்கப்பட்டது.

டொமினிக் ஜீவாவின் மனைவிபெயர் புஷ்பராணி. இவர்களுக்கு சுவர்ணலதா, பிரேமலதா, திலீபன் ஆகியோர் பிள்ளைகளாவர்.

1930இலிருந்து 1960வரையான காலப்பகுதியின் ஈழத்து இலக்கியச் செல்நெறியை சமுதாய சீர்திருத்தக்காலம் எனக்குறிப்பிடுவர். 1960களில் ஈழத்து இலக்கியச் செல்நெறியில் ஒரு மடைமாற்றம் நிகழ்ந்தது. மார்க்சியக் கருத்தியலோடு ஈழத்து இலக்கியம் வீறுநடை போடத் தொடங்கியது. அந்தப் பயணத்தில் டொமினிக் ஜீவாவும் இன்னும் பலரும் தமது எழுத்துக்களால் ஈழத்து இலக்கியத்தை வளம்படுத்தினர். இவர்களுள் முக்கியமான ஒருவராக கருதப்படுபவர் டொமினிக் ஜீவா. அவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான தண்ணீரும் கண்ணீரும் முதன்முதலில் சாகித்திய விருது பெற்று வரலாறு படைத்ததும், 1966இல் அவர் மல்லிகையை வெளிக்கொணர்ந்து நீண்டகாலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு இதழியல் பணியாற்றியதும் இவரது முக்கியத்துவத்தினை முன்னிறுத்துகின்றது.

நமது நாட்டுக்குப் பல்வேறு துறைகளிலும் சிறப்புப் பணிபுரிந்த அறிஞர்களுக்கு அரசு நினைவு முத்திரை வெளியிட்டு கௌரவிப்பது வழக்கம். தமிழ் அறிஞர்கள் சிலருக்கும் நினைவு முத்திரைகள் அரசினால் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோன்று தமிழ் இலக்கியத்திற்கு பெரும்பணி ஆற்றி, அரச உயர்விருதுகளான தேசத்தின் கண், சாஹித்திய ரத்தினா ஆகிய கௌரவங்களைப் பெற்ற **டொமினிக் ஜீவா அவர்களுக்கும் அரசு நினைவு முத்திரை வெளியிட்டு கௌரவிக்கவேண்டும் என ஞானம் பரிந்துரை செய்கின்றது.**

தனித்துவம்மிக்க ஆளுமையாக விளங்கிய டொமினிக் ஜீவா ஈழத்து இலக்கியவரலாற்றிலே அழியாத்தடம் பதித்துள்ளார். ஈழத்து இலக்கியத்திற்கு உழைப்பதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டு இயங்கிய டொமினிக் ஜீவாவைப் போன்று இயங்கியவர் வேறு யாரும் இல்லை. பிறிதொருவரை ஜீவாவின் நிலையில் வைத்து நோக்க முடியாதவண்ணம் தனி அடையாளங்களுடன் வாழ்ந்து மறைந்த பெரும் மனிதர் அவர். அவரது நாமம் என்றும் நிலைத்திருக்கும். டொமினிக் ஜீவாவின் ஆத்மா சாந்தியடைவதாக!

❍❍❍

# அம்மாவின் எண்பதாவது பிறந்ததின உரை



சிறுகதை



கே. எஸ். சுதாகர்
(அவுஸ்திரேலியா)

"அண்ணா! இஞ்சை வந்துபார் அம்மாவை." வரதலிங்கத்தின் காதிற்குள் கிசுகிசுத்தான் சதாநேசன். இருவரும் பூனை போல கால்களைத் தூக்கித் தூக்கி வைத்து நடந்து, அம்மாவின் அறையை நோக்கிச் சென்றார்கள்., மறைவாக நின்று அம்மாவை எட்டிப் பார்த்தார்கள்.

அம்மா படுக்கையில் அமர்ந்தவாறு, வரதலிங்கம் சுவிஷில் இருந்து கொண்டுவந்த ஆடைகளைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் பஞ்சு போன்ற பாதங்கள் கட்டிலிலிருந்து நீண்டு அந்தரத்தில் தொங்கி ஆடிக்கொண்டிருந்தன. மனம் எங்கோ லயித்திருக்க, உதடுகள் மெல்லச் சிரிப்பதும் மூடுவதுமாக இருந்தன.

அம்மாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக இன்று காலைதான் வரதலிங்கமும் மனைவியும் சுவிஷிலிருந்து வந்திருந்தார்கள். வரதலிங்கம் ஒரு பக்திப்பழம். தனது கற்பித்தல் தவிர்ந்த நேரங்களில் - சுவிஷ் கோவில் ஒன்றில், அங்கீகரிக்கபடாத மந்திரங்கள் தெரியாத, மடைப்பள்ளி ஐயராக இருக்கின்றான். அவன் அம்மாவிற்காக சுவிஷில் இருந்து விலையுயர்ந்த ஆடைகளை வாங்கியிருந்தான். அம்மா வெள்ளை ஆடைகளை அணிவதில்லை. அதே நேரத்தில் மயிர்க்கூச்செறியும் ஆடைகளையும் தெரிவு செய்வதில்லை. மெல்லிய வர்ணங்கள்தான் அவர் விருப்பம். இதை ஏற்கனவே அறிந்திருந்த வரதலிங்கத்தின் மனைவி, அவருக்குப் பொருத்தமான ஆடைகளை வாங்கி வந்து அசத்தியிருந்தாள். வரதலிங்கத்திற்கும் சதாநேசனுக்கும் பின்னாலே நின்று தலையை நீட்டி மடக்கி அம்மாவை எட்டிப் பார்த்ததில் அவளுக்கு மூச்சிரைத்தது. உயரம் கட்டை என்பதால் துள்ளித்துள்ளி ஓசை எழுப்பியபடி அந்த அதிசயக் காட்சியைப் பார்த்தாள். அவளின் தொங்கலைப் பார்த்த இருவருக்கும் சிரிப்பு வர, அடக்க முடியாமல் போய்விட்டது. அதுவே அம்மாவின் செய்கைக்கு முற்றுபுள்ளி வைத்தது. நிமிர்ந்து அவர்களைப் பார்த்தார் அம்மா.

"அம்மா! நாளைக்கு நீங்கள் ஒரு ஸ்பீச் குடுக்க வேணும்" என்றான் சதாநேசன்.


"எடப் போடா நீ..." என்றார் அம்மா.

"எண்பதாவது பிறந்த நாள் அம்மா... சும்மாவே! எவ்வளவு காசு செலவழிச்சு, ஹோல் எடுத்து, தடல்புடலாச் செய்யுறம். அம்மாவின் பிறந்தநாளுக்காக பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டிலிருந்து வருகினம். நீங்கள் உங்கட வித்துவத்தைக் காட்டவேணும் அம்மா" என்று சதாநேசன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

ஞானம்

ஆறுதல் பரிசு

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த
சிறுகதைப் போட்டி 2020



“அம்மா! இங்கிலீசிலை ஸ்பீச் குடுக்கப் போறியளோ அல்லது தமிழிலை குடுக்கப் போறியளோ? பள்ளிக்கூடத்திலை முந்தி அம்மா இங்கிலிஸ் ரீச்சரல்லே!” என வரதலிங்கம் நக்கலடித்தான்.

“அது அப்ப... சின்ன வகுப்புகளுக்குப் படிப்பிச்சனான்தான். இப்பெல்லாம் மறந்து போச்சு” என்றார் அம்மா சிரித்துக் கொண்டே.

வரதலிங்கமும் மனைவியும் அம்மாவின் அருகில் போய் இருந்தார்கள். படுக்கையின் ஓரத்தில் ‘ஔவையார்’ என்று தலைப்பிட்ட புத்தகம் ஒன்று குப்புறமாக மடித்து வைக்கப் பட்டிருந்தது. அம்மாவின் உருவமும் ஒரு வகையில் ஔவையார் போலத்தான்.

அம்மா ஏக்கத்துடன் அவர்கள் இரு வரையும் பார்த்தார். அந்த ஏக்கத்தின் பொருள் -அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை என்பதுதான். அவர்களும் அதைப் புரிந்து கொண்டார்கள். இன்று நேற்றா இந்த நாடகம் நடக்கின்றது?

“எட வரதலிங்கம்.. சாருமதி எத்தினை மணிக்கு நாளைக்கு வருவாள்?” ஏக்கத்தை முறித்துக் கொண்டே கேட்டார் அம்மா. சாருமதி - வரதலிங்கத்திற்கும் சதாநேசனுக்கும் இடைப்பட்டவள். சாருமதி குடும்பத்தினர் இந்தப் பிறந்தநாள் விழாவிற்காக கனடாவில் இருந்து வருகின்றார்கள்.

“விடியக் காலைமை எட்டு மணிக்கு ஃபிளையிற் வரும். நானும் அண்ணாவும் போய்க் கூட்டி வருவம் அம்மா.... நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. இண்டைக்காவது கொஞ்சம் வெள்ளணவாப் படுங்கோ” என்றான் சதாநேசன்.

அம்மா, தன் கடைசி மகன் சதாநேசனுடன் அவுஸ்திரேலியாவில் இருக்கின்றார். சதாநேசன் தனது வேலை நேரம் போக, மிகுதி நேரத்தில் தமிழ்ப்பள்ளி ஒன்றில் ஈடுபடுகின்றான். அமைதியும் அடக்கமும் கொண்டவன் என்று அங்கே நன்மதிப்புப் பெற்றவன். அம்மாவின் உலகம் இப்பொழுது சதாநேசன் குடும்பத்தினருடன் கழிகின்றது. மூன்று பேரப்பிள்ளைகள். மூத்தவன் பல்கலைக்கழகம் போகின்றான். இரண்டாவது மகள் பாடசாலைக்குப் போகின்றாள். கடைசிப் பெண்குழந்தை வீட்டில். கொழுகொழுவென வளர்ந்து, கொள்ளை அழகுடன் அப்பம்மாவின் மடியில் எந்த நேரமும் துள்ளி விளையாடு கின்றாள்.

அம்மா சிலவேளைகளில் தனக்குரிய ஆடைகளையும் தானே தைத்துக் கொள்வார். நடுவிரல் நுனியில் ‘தீதாள்’ அணிந்து ஆடைகள் தைக்கும் அழகை சதாநேசனின் மூன்று பிள்ளைகளும் இமைக்காது பார்த்துக் கொண்டு நிற்பார்கள். சிலவேளைகளில் தைத்தபடியே கடைக்குட்டிக்கு தேவாரமும் சொல்லிக் குடுப்பார்.

அம்மாவுக்கு தனி அறை, பாத் றூம், ரொயிலற் என எல்லா வசதிகளும் செய்து குடுத்திருந்தான் சதாநேசன். குசினிக்குள் கூட தனி அடுப்பு, பாத்திரம் பண்டங்கள். தானே சமைத்தும் சாப்பிடுவார் அவர். மகனுக்கு இடையூறு இல்லாமல் தன்னைத் தானே பார்த்துக் கொள்வார். புத்தகங்கள் வாசிப்பார், தொலைக்காட்சி பார்ப்பார். கண்கள் இன்னமும் மங்கவில்லை.

அன்னம்போல மெது நடை. அப்படி நடக்கும்போது எழும் மெல்லிய ஓசையை வீட்டில் இருப்பவர்களைத்தவிர மற்றவர்களால் கேட்க முடியாது. கதைக்கும்போது கூட மெதுவாக கொஞ்சம் இடைவெளி விட்டே கதைப்பார். எதைக் கதைக்கின்றோம் என்பதைத் தீர்மானிக்க அந்தக் கால இடைவெளி உதவும் என்பார்.

வீடு இரவு பதினொருமணி வரையும் கலகலத்தபடி இருந்தது. ஆக்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். சதாநேசன் தன் மூத்தமகனுடன் முறுகும் சத்தம் கேட்டு கதவை நீக்கி வெளியே எட்டிப் பார்த்தார் அம்மா.

“வினோதன் யூனிவசிட்டி தமிழ்ச்சங்க கலைவிழாவுக்கு பறை அடிச்சுப் பழகப் போறான் எண்டு நாண்டுகொண்டு நிக்கிறான்.”

“அவனாவது தமிழ்ப்பிள்ளையளோடை பழகிறான் எண்டு நினைச்சு சந்தோஷப்படு.”

“என்னம்மா சொல்லுறியள்? உவன் பறை அடிச்சா எங்களைப்பற்றி என்ன சொல்லுவினம்?”

“சதா... பறை எண்டு சொல்லுறது தமிழன்ரை இசைக்கருவியளிலை ஒண்டு. அவனை விடு. பழகட்டும்.”

சதாநேசன் அம்மாவை உற்று நோக்கிப் பார்த்துவிட்டு, “சரி அம்மா” என்றான்.

நெடுநேரமாக அம்மாவின் அறை விளக்கு ஒளிர்ந்து கொண்டிருப்பதை அவதானித்த சதாநேசன் அம்மாவின் அறையை எட்டிப்

பார்த்தான். அம்மா படுக்கையில் தன் கால் களை நீட்டி அமர்ந்தபடி, தன் மடியில் தலையணையை இருத்தி ஏதோ கரிசனையாக எழுதிக் கொண்டிருந்தார். மகனைக் கண்டுவிட்ட அதிர்வில் எழுதிய பேப்பரை படுக்கை விரிப்பினுள் ஒளித்தார்.

"இஞ்சை பாரடா அம்மாவை... இரவிரவா நித்திரையும் கொள்ளாமல் நாளைக்குப் பேசப்போறதை எழுதிக் கொண்டிருக்கிறா..."

"நீ என்னண்டா நாளைக்கு என்னைப் பேசச் சொல்லிப்போட்டாய்.. திடீரெண்டு இப்பிடிச் சொன்னா?" அம்மா சிரித்துக் கொண்டே தான் எழுதியதை எடுத்து சதாநேசனிடம் நீட்டினார். சதாநேசன் அதை வாங்கிப் படித்துவிட்டு, "நல்லா இருக்கு அம்மா.. இவ்வளவும் போதும்" என திருப்திப்பட்டுக் கொண்டான்.

மறுநாள் காலை. இரண்டு மருமகள்மாரும் அம்மாவை 'ஃபியூட்டிப் பாலருக்கு'க் கூட்டிச் சென்றார்கள். அம்மா ஒருபோதும் மேக்கப் செய்ததில்லை. அதை அவர் விரும்பு வதும் இல்லை. இந்தக் கூத்துகளை அவர் தவிர்க்கவே விரும்பினார். என்ன செய்வது! இன்று எண்பதாவது பிறந்தநாள் கொண்டாட்ட மாயிற்றே!

அம்மா மேக்கப் போட்டுக்கொண்டு வீட்டிற்கு வரும்போது, வீடு களைகட்டி இருந்தது.

சாருமதி, கணவன் மற்றும் அவர்களின் மூன்று பிள்ளைகளின் குடும்பத்தினரும் வீட்டைக் கலகலப்பாக்கிக் கொண்டிருந்தார்கள். சாருமதியின் மகள் ஒரு பிலிப்பினோவைத் திருமணம் செய்திருந்தாள். இரண்டு ஆண் பிள்ளைகளும் 'லிவிங் ருகெதர்'. மூத்தவன் ஒரு வியட்நாம் பெண்ணையும், இரண்டாமவன் ஒரு சீனப்பெண்ணையும் 'லிவிங் ருகெதராக' வைத்திருக்கின்றார்கள். ஒருத்தராவது வெள்ளைக்காரரைத் திருமணம் செய்யவில்லையே என்பது சாருமதியின் கவலை. அதைவிட மூன்றுபேருக்கும் பூச்சி புழுக்கள் இல்லையென்பது அம்மாவின் பெருங்குறை. அம்மாவிற்கு எல்லாருடைய பெயரும் அத்துப்படி. ஞாபகமறதி கிடையாது.

"எல்லாரும் இஞ்சை ஓடி வாருங்கோ.. ஆரோ ஒரு புது லேடி எங்கடை வீட்டிற்கு வந்திருக்கின்றா" என்று அம்மாவைப் பார்த்துக் கிண்டலடித்தாள் சாருமதி.

எல்லோரும் ஆங்கிலத்தில்தான் கதைத் தார்கள். ஆனால் ஒவ்வொருவருடைய ஸ்ரை லும் வித்தியாசமாக இருந்தது. அவர்களின் சாப்பாட்டு முறைமைகளும் வித்தியாசமாக இருந்தன. ஒருவர் பிஷா என்றும், இன்னொருவர் கேஎவ்சி என்றும், மற்றவர் நூடில்ஸ் என்றும் சொல்வார்கள். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமான நிறங்கள். வித்தியாசமான உருவங்கள். ஒருவருக்குக் கண் மேலே இழுத்திருக்கும். மற்றவருக்குக் கீழே இழுத்திருக்கும். வித்தியாசமான ஆடைகள், வித்தியாசமான பழக்கவழக்கங்கள்.

"அவுஸ்திரேலியாவும் கனடாவும் மல்ரி கல்சரர் நாடுகள். எங்கடை மல்ரி கல்சரர் வீடு" என்பாள் சாருமதி.

சாருமதியின் மூத்த மருமகள் அழகு நிலையத்தில் வேலை செய்வதாகச் சொன்னாள். தனது பாட்டனார் வியட்நாமில் பாபர்சலூன் வைத்திருந்ததாகப் பெருமை கொண்டாள். இரண்டாமவள் 'பிஸ் அண்ட் சிப்ஸ்' கடை வைத்திருக்கின்றாள். மருமகன் தான் ஒரு 'ஃபிஸ் மாக்கெற்' கனடாவிலும், இன்னொரு 'மீன் சந்தை' பிலிப்பீன்ஸ் நாட்டிலும் வைத்திருப்பதாகச் சொன்னான். கை, தோள்ப்பட்டையெல்லாம் பச்சை குத்தியபடி, தலைமயிரை 'போனி ரெயிலாக'க் கட்டியிருந்தான் அவன்.

அம்மாவுக்கு தலை விறைத்துப் போய் விட்டது.

"சாரு.. இஞ்சை வா! இதிலை கொஞ்சம் இரு" என்று எதிரே உள்ள கதிரையைக் காட்டினார் அம்மா.

"இஞ்சை பார்.. உன்னை நான் அக்கவுண்டன்ற் ஆக்கியிருக்கிறன். வரதலிங்கத்தைப் பட்டதாரி ரீச்சர் ஆக்கியிருக்கிறன். சதாநேசனை இஞ்சினியர் ஆக்கியிருக்கிறன். நீ உன்ரை பிள்ளையளை என்னவாக ஆக்கியிருக்கிறாய்?"

சாருமதி கோபப்படவில்லை. அமைதியாகப் பதில் தந்தாள்.

"ஏன் அம்மா..? அவையளுக்கென்ன குறை. மகள் ஏஜ்கெயரில் வேலை செய்கின்றாள். மகன்மார் இரண்டுபேரும் ரியல் எஸ்ரேற்றில் வேலை செய்யினம். அவங்களுக்கு அதுதான் விருப்பம். அம்மா.. நாங்கள் இப்ப பல்லினக் கலாச்சார நாடுகளிலை இருக்கிறம். இனிமேல் இப்படித்தான் எல்லாம் இஞ்சை நடக்கும்.

அதுகள் தாங்கள் தாங்கள் விரும்பினதைத்தான் படிக்குங்கள், விரும்பினதுகளைத்தான் கலியாணம் கட்டுங்கள். எங்களாலை இனி ஒண்டும் செய்ய முடியாது.”

“ஒண்டு எப்பவும் வாயுக்குள்ளை சுவிங் கத்தைச் சப்புது... இன்னொண்டு எப்பவும் கண்ணாடியிலை முகத்தைப் பாத்து கிள்ளுது... ஒண்டு என்னண்டா மொபைல்போனை நோண்டிக் கொண்டு இருக்குது...” தனக்குள் முணு முணுத்துக் கொண்டார் அம்மா. அவருக்கு சாருமதியின் பதிலில் பெரிதாகத் திருப்தி இல்லை. இங்கிலிஷ் ரீச்சருக்கு அவை ஒன்றுமே புரியவில்லை. பழையனவற்றை நினைத்துப் பெருமூச்செறிந்தார் அவர்.

“சதாநேசன் தன்ரை மூண்டு பிள்ளையளையும் எப்பிடி வளத்து வைச்சிருக்கிறான் எண்டு பாத்தனிதானே!”

“நீங்கள் பக்கத்திலை இருக்கிறியள் அம்மா. எல்லாத்தையும் பாத்துக் கொள்ளுறியள். எப்ப கனடா வந்து என்னுடன் இருக்கப் போறியள்?” சாருமதியின் கேள்விக்கு அம்மா சிரித்தார்.

“நேரம் வரும்போது வருவேன்” என்றார்.

சாருமதி அவுஸ்திரேலியாவிற்கு முன்பும் இரண்டு தடவைகள் வந்திருக்கின்றாள். ஒவ்வொருதடவை வரும்போதும், “உனக்கு பிள்ளையளை வளக்கத் தெரியாது” என அம்மாவிடம் பேச்சு வாங்குவார்.

வீடு திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொருத்தரும் ஆடைகளை அணிந்துகொண்டு சரக்குச்சரக்கென்று நடந்தார்கள். ஒருவர் மாறி ஒருவரென அழகு காட்டினார்கள். சாருமதியின் இரண்டு மருமக்கப்பெண்களும் ஒப்பனை குலைந்துபோய் விடும் என்ற பயத்தில் ஒரு இடத்தில் பொம்மையாக அசராமல் இருந்தார்கள். யார் கதை கேட்டாலும் திரும்பிப் பாராமல் அப்படியே இருந்தபடி பதில் தந்தார்கள்.

மாலை நாலுமணிக்கு எல்லோரும் ஹோலுக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். கார்கள் வருவதும் போவதுமாக இருந்தன.

மழை வரும்போல் வானம் இருண்டு கிடந்தது. வீட்டைச் சுற்றி வெளியே எங்கும் குளிர் அப்பிக் கிடந்தது.

ஹோல் நிரம்பவே சனம் வழிந்தது. அம்மா எல்லோருக்கும் கை குலுக்கியபடியே தனது ஆசனத்தில் போய் அமர்ந்தார். சதாநேசனும், பேரப்பிள்ளைகளில் ஒருவரும், மற்றும் வந்திருந்தவர்களில் ஒருவருமென மூன்று பேர்கள் பிறந்ததின விழாவிற்கான தமது பேச்சுக்களை நிகழ்த்தினார்கள். இது நடந்து கொண்டிருக்கும்போதே, ஒவ்வொரு மேசைக்கும் சாப்பாடு மணக்க மணக்க வந்து கொண்டிருந்தது.

அம்மா ‘கேக்’ வெட்டி பிறந்தநாள் விழாவை ஆரம்பித்தார்.

‘இப்பொழுது பிறந்ததின விழாக் கொண்டாடும் நேசம் அம்மா அவர்கள் உரை யாற்றுவார்கள்’

பெரும்பாலானவர்கள் இன்றுதான் அம்மாவின் பெயரை அறிந்தார்கள். ‘பிறந்த நாள் கேக்’கில் கூட ‘அம்மா’ என்றே போட்டி ருந்தார்கள். அவர் எல்லோருக்கும் அம்மா தான். சதாநேசனின் பெண்பிள்ளைகள் இருவரும் அம்மாவை மேடைக்குக் கூட்டிச் சென்றார்கள். அம்மாவின் பிறந்ததின உரை ஆரம்பமாகியது.

**“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்ல.ஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!**

என்னுடைய பிறந்தநாள் விழாவிற்காக உங்கள் நேரத்தை ஒதுக்கி இங்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி. நீங்கள் பல பரிசுப்பொருட்களைத் தந்து இந்த நேரத்தில் என்னை மகிழ்வித்திருக்கின்றீர்கள்.

என்னைப் பற்றித் தெரியாதவர்களுக்காக சில வார்த்தைகள். நான் இலங்கையின் வடபகுதியில் கொக்குவில் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். பொற்பதி பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்துத்தான் எனது சிறுவயது வாழ்க்கை கழிந்தது. திருமணத்தின் பின்னரும் அங்கேதான் வசித்தேன். ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்தவள். அங்கு இருக்கும் வரையும் வீட்டில் மரக்கறிச்சாப்பாடுதான் சமைப்பார்கள்.”

எல்லாரும் அவரது உரையை மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். குரலில் தளர்ச்சி இல்லை. கணீரென்று நாதமெழுப்பும் குரல். சதாநேசன் சிறிது நேரம் அம்மாவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு சமையல்களத்திற்குப் போய்விட்டான்.

“காலமும் இடமும் தான் மனிதர்களின் வாழ்க்கையத் தீர்மானிக்கின்றன. இதுக்கு என் மகள் சாருமதியே சாட்சி! அன்றிருந்த வாழ்க்கை

முறைமைகளுக்கும் இன்றிருப்பவைக்கும் நிறையவே வேறுபாடுகளை நான் பார்க்கின்றேன். இத்தனை வருடங்களில் வாழ்க்கை முறை, திருமண பந்தம், கல்வி, ஆடைகள், தொழில் நுட்பம், சினிமா என எவ்வளவோ மாற்றங்கள் கண்டிருக்கின்றன.

எனது பிள்ளைகள் மிகவும் அன்பாக என்னை இங்கே பார்க்கின்றார்கள். தங்களின் பிஷியான வாழ்க்கையிலும் மனங்கோணாமல் வைத்தியரிடம் அழைத்துச் செல்கின்றார்கள் எனக்குத் தேவையானவற்றை வாங்கித் தருகின்றார்கள் கோயிலுக்குக் கூட்டிச் செல்கின்றார்கள்.

ஒவ்வொரு பிறந்தநாள் வரும்போதும் நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி, மிகவும் எளிமையாக வீட்டில் கொண்டாடுவோம். இந்தத்தடவை பிள்ளைகள் ஹோல் எடுத்து மிகவும் சிறப்பாகச் செய்கின்றார்கள்.

உலகத்திலே பிறந்த மனிதர்களில் இரண்டுவிதமான சாதியினர் தான் உள்ளார்கள். ஒருவர் அடுத்தவருக்குக் கொடுத்து உதவும் நல்ல மனம் படைத்த மேலோர் மற்றவர் தன்னிடம் உள்ளவற்றை அடுத்தவருக்குக் கொடுக்காத கீழோர். நீங்கள் எல்லோரும் மேலோராக வாழப் பழகிக் கொள்ளுங்கள். சந்தோசத்தையும் துக்கத்தையும் சமன் செய்து வாழுங்கள்.

என்னைப் போன்றவர்களுக்கு, ஒவ்வொரு நாள் விடிவதும் ஒரு 'போனஸ்' நாள் தான். நாளைக் காலை உறக்கத்தில் இருந்து எழுவது பற்றி நிட்சயம் இல்லை."

அதுவரை மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே வந்த அம்மா, திடீரெனக் கவலை கொண்டார். அவரின் குரலில் சிறிது பிசிறல் விழுந்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். கையிலே குறிப்பெழுதி வைத்திருந்த தாளை நான்காக மடித்து வைத்துக் கொண்டார். அருகே நின்ற பிள்ளைகள் இருவரும் அப்பம்மாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு குனிந்து நின்றார்கள். அவர் தனது பேச்சினைத் தொடர்ந்தார்.

"என்னுடைய கணவர் நாப்பது வருடங்களுக்கு முன்னரே எம்மை விட்டுப் போய் விட்டார். நீங்கள் எல்லாரும் நான் நூறு வயது வரை வாழவேண்டும் என்று வாழ்த்தினீர்கள். உங்களுக்கு எனது நன்றி. ஆனால் என்னுடைய ஒவ்வொரு பிறந்தநாள் வரும்போதும் என் மனதில் ஒரு பாரம் கிடந்து அழுத்துவதை யார் அறிவார்கள். அதை நான் எப்படிச் சொல்லுவது? என்னை எவ்வளவு சீக்கிரமாக எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எடுத்துக் கொள் என்றுதான் நான் தினம் தினம் ஆண்டவனை வேண்டுகின்றேன்.

எனது மூத்தமகன் புத்தி பேதலித்து, தினம்தினம் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, எப்படி நான் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்?"

எல்லாரும் வரதலிங்கத்தைத் திரும்பிப் பார்த்தார்கள். அவன் ஒன்றுமே நடவாதது போலப் பின்வரிசையில் நின்று யாருடனோ சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு நமது சாதிமுறைகளைப்பற்றித் தெரிஞ்சிருக்கும். எனது மூத்தமகன் தேவராஜன் - இங்கிருப்பவர்களில் அவன் தான் எல்லாரிற்கும் மூத்தவன் - பள்ளியில் படிக்குமோது ஒரு பெண்ணை விரும்பியிருந்தான். அவள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவள். எனக்கும் சாருமதிக்கும் சதாநேசனுக்கும், அவன் அந்தப்பெண்ணை மணம் முடிப்பதில் துளிகூட விரும்பம் இருக்கவில்லை. என்னுடைய கணவருக்கு மூத்த மகன் என்றால் கொள்ளை ஆசை. அவர் அந்தத் திருமணத்திற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். பத்துவருடங்களாக இழுபட்டுக் கொண்டே போனது. கடைசியில் அந்தப்பெண்ணிற்கு, பலவந்தமாக வேறு ஒரு ஆணை அவளின் பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் நடந்த இரண்டாம்நாள் அவள் தூக்குப் போட்டுச் செத்துவிட்டாள். அதற்குப் பிறகு எனது மூத்தமகனுக்கு இந்த நிலை, விசராக்கிப் போட்டுது.

அன்று நான் எனது மூத்தமகனுக்கு அந்தக் கலியாணத்தைச் செய்து வைத்திருந்தால், என்னை என் உடன்பிறப்புகளும் சுற்றத்தாரும் கைகழுவி விட்டிருப்பார்கள். அதாலை நான் அன்று பிடிவாதக்காரியாக இருந்துவிட்டேன். அவனையே நினைத்து நினைத்து உருகிக்கொண்டிருந்த என் கணவரும் சீக்கிரமே எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

ஊரில் இருக்கும் வரையும் நான் தான் அவனை வைத்துப் பராமரித்தேன். நாட்டு நிலமைகள் காரணமாக ஓடி ஓடி

இடம்பெயர்ந்தபோதும் நான்தான் அவனைப் பார்த்தேன். பின்பு என்னையே நான் பார்க்க முடியாத நிலை வந்தபோதுதான், இவர்கள் என்னை இங்கே கூப்பிட்டார்கள். பாவி நான், இங்கேயே வந்து தங்கிவிட்டேன். இப்போது அவனைப் பராமரிப்பது, இறந்துபோய்விட்ட அவனது காதலியின் தம்பிதான்.

எனக்கு இப்ப இருக்கின்ற கவலை என்னவெண்டா, நான் இல்லாத காலத்தில் அவனை யார் பார்ப்பார்கள்? நான் சரியாக உறங்கிப் பல வருடங்கள் ஆகிவிட்டன. ஆழ்மனதில் இருக்கும் மர்மங்கள் என் உறக்கத்தைக் கெடுத்து விடுகின்றன. இன்று எனது பாரத்தை உங்கள் முன் இறக்கி வைக் கின்றேன்."

அம்மாவின் இருண்ட பக்கங்கள், ஹோலிற் குள் ஒளிவெள்ளத்தில் நிரம்பியிருந்த எல்லோர் மனதிலும் சலனத்தை ஏற்படுத்தியது. அம்மாவின் உரை இப்படித் திசைமாறிப் போகும் என அறியாத பிள்ளைகள் ஆளுக்காள் ஓடி முழித்தார்கள்.

"கிழவி எல்லாத்தையும் உளறுது. ஓடிப் போய் ஸ்பீச்சை நிப்பாட்டு அக்கா..." சதாநேசன் சாருமதியிடம் கெஞ்சினான். அதுவே நல்லதென வரதலிங்கத்திற்கும் பட்டது.

சாருமதி மேடையை நோக்கி விரைந்தாள். அதற்குள் அம்மா கைகளைத் தூக்கி கும்பிட்டபடியே, மேடையில் இருந்தும் கீழ் இறங்கினார். பிள்ளைகள் அவரை சதாநேசன் நிற்குமிடத்திற்குக் கூட்டிச் சென்றார்கள். பின்னாலே சாருமதி விரைந்தாள்.

"இப்பிடித்தான் அம்மா கொஞ்ச நாட்களாக உளறிக்கொண்டு திரிகின்றார். அவவுக்கு இப்ப டெமென்சியா வந்திட்டுது. நேர்ஷிங்ஹோமிலை கொண்டுபோய் விடுறதுதான் நல்லதெண்டு படுகுது" சதாநேசன் தன் நண்பர்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அம்மாவிற்கு சதாநேசன் சொல்வது கேட்டிருக்க வேண்டும். அவர் தன் கைகளைப் பேரப்பிள்ளைகளிடமிருந்து, அவர்களுக்குத் தெரியாமலே விடுவித்துக் கொண்டு, சாருமதியின் கைகளைப் பிடித்தார். அந்தப் பிடிப்பில் ஒரு அழுத்தம் வேரோடுவதை சாருமதி உணர்ந்தாள்.

○○○

# புரட்சிக் கருவுள புதுக்கவி சொல்லுவேன்

**நியாஸ் ஏ ஸமத்**

கவிதை கசிந்தால் எழுதிக் கொள்வேன்
கனதியா யிடின் காட்டிக் கொள்வேன்
தவித்த மனங்களைக் கருவாய்க் கொள்வேன்
தட்டிக் கேட்டிடத் தயக்கம் காட்டிடேன்

துளிர்த்த கருவினைத் தூக்கிக் கொள்வேன்
தகுதி ஆயிடின் தொடர்ந்திடத் துணிவேன்
விளித்துக் காட்டியே வடிவம் அமைப்பேன்
விரும்பின் பகிர்ந்திட வழிகள் தேடுவேன்

வருத்திக் கவிதை வடிக்கமாட்டேன்
வடிவில் வியப்பில் வரைந்திடத் துடிப்பேன்
பொருத்தமாகப் பொருந்தியே வந்திடின்
பகிருந் தளத்தினில் பார்வைக் காக்குவேன்

எளியவர் வாழ்வினை எண்ணிக் கொள்வேன்
எழுத்தில் அவர்குறை எல்லாம் எழுதுவேன்
வழியிலாவாடும் வறுமையைத் துரத்திட
வாழ்வுசிறப்புறவழிகளைத் தேடுவேன்

துயருறும் மாந்தரின் தோல்விகள் மாய்ந்திட
தோதான வழிகளைத் தேடிநான் எழுதுவேன்
பயனுளதானதோர் பரம்பரை தோன்றிடப்
புரட்சிக் கருவுள புதுக்கவிசொல்லுவேன்

# தமிழ் உரைநடை வரலாறு : மறு மதிப்பீடு



பேராசிரியர்
செ. யோகராசா

பேராசிரியர் வி.செல்வநாயகம், சக்தி வேல், வல்லிக்கண்ணன், நா. வானமாமலை முதலானோர் வெவ்வேறு நோக்கிலும் போக்கிலும் எழுதிய தமிழ் உரைநடை வரலாறு தொடர்பாக சில நூல்களை வெளியிட்டுள்ளனர். இவை வெளிவந்த காலத்திற்குப் பின்னர் தமிழ் உரைநடை வளர்ச்சி தொடர்பாகப் புதிய விடயங்கள் பல அறியப்பட்டுள்ளன. தமிழ் உரைநடை வரலாறு மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வழி மிக முக்கியமான மூன்று விடயங்களை எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகின்றது.

## 1. கதை எழுதுவதற்கான உரைநடை

கதை எழுதுவதற்கேற்ற விதத்திலே தமிழ் உரைநடையைப் பதப்படுத்திய பெருமை வீரமாமுனிவருக்குரியதாகவே அண்மைக் காலம்வரை கருதப்பட்டு வந்தது. இந் நிலையில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலே கண்டெடுக்கப்பட்டுள்ள ஏடுகளை அடிப்படையாகக் கொண்டு **கௌமுதிக் கதைகள்** என்றொரு நூல் அச்சு வடிவில் சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்துள்ளது. இந்நூல் பற்றி, வெளியீட்டாளர் முகவுரை பின்வருமாறு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

“நீதி நெறிகளைக் கதைகள் மூலமாகப் போதிப்பதால் அவை கற்போர் உள்ளத்தில் உவகையையும் நீதிநெறித் தாக்கத்தையும் ஏற்படுத்தும். அதனால்தான் நல்ல கதைகளைச் சொல்லும் போது அதற்குத் தொடர்பான நல்ல கருத்துக்களைச் சொல்வது வழக்கம். இக்கொள்கையைக் கொண்டதே கௌமுதிக் கதைகள் என்னும் இந் நூலாகும். மேற்குறிப்பிட்ட கௌமுதிக் கதைகளின் உரைநடை மணிப்பிரவாள நடையாகும். மணிப்பிரவாள நடை என்பது, முத்தையும் பவளத்தையும் மாறி மாறி ஒரு மாலையிற் கோத்தது போல வட சொற்களையும், தமிழ்ச் சொற்களையும் சரிக்குச்சரி கலந்து எழுதிய தொடர் மொழி நடையாகும். (மணி - முத்து, பிரவாளம் - பவளம்)

இதற்கு உதாரணங்கள் கூறுகின்ற ஆய்வாளர்கள் சிலர் பல்லவர் காலத்தில் எழுந்த சிறிபுராணம், கத்திய சிந்தாமணி என்பன வற்றையே ஆதாரமாகக் குறிப்பிடுவர். ஆயினும் அவர்கள் அவற்றிலிருந்து எடுத்துக்காட்டுக்கள் தருவதில்லை. மேற்கூறிய ஆரோக்கியமற்ற சூழலில் கௌமுதிக் கதைகளில் மணிப்பிரவாள நடைக்குச் சிறந்த உதாரணங்களுள்ளன. **உ-ம்**. அவர்கள், இசுட விசய காமபோகங்களை அனுபவித்து செல்கின்ற காலத்து இந்த நகரத்த பாக்யோமானத்து (வெளியே) உலாவுகின்ற வனபாலகன் அபூர்வ மாயின சில கண்டு சொல்லுவான். சுச்க (வரண்ட) தடாகம் சம்பூரணமும் அக்காலத்தில் பல் புட்பங்களையும் பழங்களையும் ஒன்றுக் கொன்று பகைகளாயுள்ள அசுவமும் (குதிரை) மகிசமும் (எருமை) மார்சாரமும் (பூனை) எலியும் பாம்பும் கீரியும் புலியும் புலவாயு (கலைமான்) முதலியாகிய மிருகங்கள் தம்மில் பகையின்றிக் கூடியிருத்தலையும் கண்டு, இது சுபமோ அசுபமோ வென்று விசாரித்து உலாவுகின்ற வனபாலன் இந்நகரத்து பச்சிம திசையின்கண் விபலாசல பர்வத்தின் மிசை சதுர்வித தேவர்களாலும் சயசயவெனும் தேவ கோசங்களிலும் திவ்யமாகிய துந்துபி த்வனிகளாலும் விளங்கிய ஸ்ரீ வர்தமான சுவாமிகள் சமவசரணத்தைக் கண்டு... ராசாவும் எதிரெழுந்து சப்த பதம் சென்று திக்க நோக்கி நமசகரித்து வனபரிபாலர்களுக்கு மிகவும் சிறப்புச் செய்தனன்.”

ஆயினும் கௌமுதிக் கதைகள் எக்காலத்திற்குரியன என்றோ அறிய முடியாதுள்ளன. ஏடுகளில் கண்டெடுத்துப் புதுப்பித்த தஞ்சை சரசுவதி மகால் ஆய்வாளரும் அவை பற்றிக் குறிப்பிடவில்லை. ஒருவேளை திட்டவட்டமாகக் கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாதிருக்கக் கூடுமாயினும் ஊக

அடிப்படையிலாவது அவைப் பற்றிக் கூறியிருக்கலாம். (ஒருவேளை அதுவும் இயலாததாக இருந்திருக்கலாம்) எனினும் அவற்றின் காலம் எதுவாயினும் தமிழ் உரைநடை வரலாற்றிலே கௌமுதிக் கதைகள் பெறக்கூடிய இடம் முக்கியமானதென்பதில் ஐயமில்லை.

## 2. நாட்குறிப்புகள் வளர்த்த உரைநடை

புதுச்சேரியில் பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் பிரெஞ்சு ஆட்சி நிலவிய காலத்தில் துரைத்தன உத்தியோகம் பார்த்த அதிகா ரிகள் சிலர் நாட்குறிப்புகள் எழுதுகின்ற வழக்கத்தை கைக்கொண்டிருந்தனர். இவர்களுள் ஆனந்த ரங்கம்பிள்ளை, குருவப்பிள்ளை, திரவெங்கடம் பிள்ளை முதலானோர் முக்கியமானவர்கள். இவர்களது நாட்குறிப்புகளின் உரைநடை வித்தியாசமானது. தனித்துவமானது. பின்வருவன ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளில் இடம் பெற்றுள்ளவை. இவற்றை ஆழ்ந்து நோக்கும் போது இவற்றின் உரைநடையானது வெவ்வேறு நோக்கும் போக்கும் கொண்டவை என்பது புலப்படுகின்றன.

'குரோதன வருசம் ஐப்பசி மாதம் 21-ம் நாள் அடித்த புயல் பற்றிய வருணனை செத்த ஆடுகளைப் பட்டணத்துக்குள்ளே அவரவர் வாங்கி வந்த வீடுகளிலே காயப்போட்டிருக்கின்ற படியினாலே அது காய்கிறதுக்கு இடமில்லாமல் மழையிலே நனைஞ்சு பட்டணமெல்லாம் தெருவுக்கு தெரு பிணநாற்றமாய் ரெண்டு மூணு நாள் மட்டுக்கம் வீதியிலே பிறப்படக் கூடாமல் இப்படி அவத்தைப்பட்டு போச்சுது.'

"தமிழர் ஐயாயிரம் பேரும் வெகு முத்தீதாக நெருப்பு மயமாய் யிருக்கிறதிலே புதுச்சேரியார் ஆயிரம்பேர் வெள்ளைக்காறரும் மாயே சிப்பாய்களும் புறப்பட்டு வந்து பீரங்கியுடன் கொண்டு ஆட்டுக்கிடையிலே பெரியபுலி விழுந்தாற்போல நடுவிலே போய் பூத்து தீவானத்து தண்டு மேலே திரும்பினார்கள்."

"என்னைக் கண்ட உடனே கும்பிட்டு தோன்றிப் புகழொடு தோன்றுக அஃதில்லார் தோன்றலின் தோன்றாமை நன்று என்கிற திருவள்ளுவர் குறளைச் சொல்லி சுவாமி உம்முடைய சென்மம் திருவள்ளுவர் குறள் கொண்டபடிக்குப் பிறப்பித்தார்."

## மொழியியல் நோக்கில் உரைநடையில் ஏற்பட்ட மாற்றங்களுள் சில பின்வருமாறு:

அகரம் இகரமாதல் வஞ்சனை - வஞ்சினை, சில சொற்களில் வரம் அ - இ ஆக மாறுதல். குறிப்பாகத் தொடர்ந்தவரும் எழுத்து இ ஆக இருந்தால் எடுத்துக்காட்டாக பூசணி - பூசிணி,

தேவடியாள் - தேவிடியாள், வடமொழியிலிருந்து தமிழுக்குச் சொற்கள் கடன் வாங்குமிடத்து உச்சரிப்பில் அ - ஏ ஆக மாறும். புலம் - பெலம், கதி - கெதி, தண்டம் - தெண்டம், இகரம் யிகரமாக மகறுதல் : இரண்ட - யிரண்ட, இந்த - யிந்த, இடையில் வரும், இ எழுத்து அ மற்றம் உ ஆக மாறுதல். கயிறு - கயறு, குடிக்கூலி - குடக்கூலி, அடிமை - அடுமை

**உரைநடையிலெ இடம்பெற்றுள்ள பிரெஞ்சு மொழிச் சொற்களுள் சில பின்வருமாரு:**

| **தமிழ் உச்சரிப்பு** | **பிரெஞ்சு சொல்** | **பொருள்** |
|---|---|---|
| மொடுத்தியே | *Mortier* | உயர்க்கோணங்களில் குண்டுகளை அனுப்பும் பீரங்கி |
| ரசியம் | *Ratio* | பங்கீடு |
| சக்கிறத்தார் | *Secretaire* | செயலாளர், காரியதரிசி |
| ஒடுதி | *Ordre* | வரிசைக்கிரமம், உத்தரவு |
| கப்பித்துலசாம் | *Capitulation* | நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்தம் |
| மறெனர் | *Marins* | மாலுமி |
| துவான் | *Douane* | சுங்கச்சாவடி |

### 3. மெல்கொ பாதிரியாரதும் வில்லியம் நெவின்சின தும் நூல்களில் வெளிப்படும் உரைநடை

தமிழ் உரைநடை வரலாற்றாசிரியரான வி.செல்வநாயகம் வீரமாமுனிவருக்குப் பின்னர் தமிழ் உரைநடை வரலாற்றிலே ஆறுமுக நாவலரையே முக்கியப்படுத்துகின்றார். ஆயினும் அவருக்கு முன்பே ஈழத்தைச் சேர்ந்த மேற்கூறிய இருவரும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்துள்ளனர் என்று ஈழத்தின் புதியதலைமுறை ஆய்வாளரான ஞானம் பாலச்சந்திரன் அண்மையில் எடுத்துக் காட்டியுள்ளார். மெல்கோ பாதிரியாரும் வில்லியம் நெவின்சும் பல நூல்களை அச்சிற் பதிப்பித்துள்ளனர். ஆறுமுகநாவலர் தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஏற்படுத்திய முக்கிய மாற்றங்களைத் தமிழ் உரைநடையில் சந்தி பிரித்து எழுதுதல், தரிப்புக் குறிகளைப் பயன்படுத்துதல், அவருக்கு முன்பே வில்லியம் நெவின்சு கையாண்டிருக்கின்றார். பின்வரும் பகுதி வில்லியம் நெவின்சின் இலக்கிய சங்கிரகம் (தொகுப்பு நூல்,1847) நூலில் இடம்பெற்றுள்ளது.


"மூல பலச்சேனையும் அடிபட்டிறந்தது கேட்டு இராவணன் காட்டு நெருப்பிலே நெய் மழை பெய்தாற்போல மேலுமேலும் மனங்கொதித்துச் சீறித் தன்னுடைய மந்திரிகளாகிய மகோதரன், மகாபரிசுவன், விருபாட்சன் முதலானவர்களைச் சேனைகளுடனே யுத்தத்துக்குப் புறப்படச் சொல்லி உத்தரவு கொடுத்துத் தானும் போர்க்கோலங்கொண்டு.... யுத்தம் பண்ணும் பொழுது மகோதரனையும் மகாபாரிசுவனையும் மிகவும் பிரயாசமான யுத்தம் பண்ணிச் சுக்கிரவன் அடித்துக் கொன்றான். விருபாட்சனை அங்கதன் வதைத்தான். அப்படி மந்திரிமார்கள் இறந்தது கண்டு இராவணன் மகா உக்கிர கோபங்கொண்டு இராமனெங்கே எங்கேயென்று தன்னை நாடிவருகின்ற உக்கி வேகத்தைக் கண்டு இலட்சுமணன் எதிர்த்தான்"

எனினும், வில்லியம் நெவின்சிற்கு முன்னர் மெல்கொபாதிரியார் முற்குறிப்பிட்ட உரைநடை மாற்றங்களுக்கு ஓரளவு தடமமைத்துள்ளார். அன்னார் மொழிபெயர்த்துள்ள புதிய ஏற்பாடு (1759) முகவுரையிலுள்ள பின்வரும் சிறிய பகுதியை நோக்கும் போது குறியீட்டின் பயன்பாடு இடம்பெற்றிருப்பது தெரியவருகின்றது. "இனிமிஞ்சியிருக்கிறதாவது. இதற்கிடையிலெ, கடைசியிலெ" மேற்கூறியவற்றினூடே புதிய எடுத்துரைப்பு முறைக்குரியதான உரைநடையும் வெளிப்படுகின்றது. அதாவது முதன் முதலாக இணைப்புச் சொற்களின் பயன்பாடு இடம்பெற்றுள்ளது. சந்திப்பிரித்தெழுதுவதற்குப் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

மேற்கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுத்து நினைவுகூர்கின்றபோது பின்வரும் விடயங்கள் கவனத்திற்குரியன வாகின்றன. காலம் தெரியாவிடினும் சமணரது கௌமுதிக் கதைகளாக தமிழில் கதை கூறுவதற்கான உரைநடை உருவாக்கத்தின் ஆரம்ப முயற்சி வெளிப்படுகின்றது. சமணர் உரையாசிரியர்களென்ற விதத்திலே மட்டுமன்றி கதையாசிரியர்கள் என்ற விதத்திலும் தமிழ் உரைநடை வரலாற்றிலே முக்கியம் பெற்றிருப்பது புலப்படுகின்றது. கௌமுதிக் கதைகள் வெளிப்படுத்தும் மணிப்பிரவாள நடை வித்தியாசமானது அடைப்புக் குறியினுள் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழாக்கம் இடம்பெற்றிருப்பதே அதுவாகும். நூட்குறிப்புகளின் உரைநடையானது புதியதொரு இலக்கிய வகையான உரைநடைப்போக்கினை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஐரோப்பியர்களுக்கு மட்டுமன்றி சுதேசிகளான சமணருக்கும் பங்குள்ளது என்பதற்கும் இது சான்றாகவுள்ளது. மெல்கோ பாதிரியாரதும் வில்லியம் நெவின்சினதும் நூல்களில் வெளிப்படும் உரைநடையின் முக்கியத்துவம் இன்னொரு வகைப்பட்டது. அதாவது நிறுத்தக் குறியீடுகளின் பயன் பாட்டினையும் சொற்களுக்கிடையிலான இடைவெளியையும் முதன்முதலாக ஆறு முகநாவலரே கையாண்டுள்ளார் என்ற உரைநடை வரலாற்றுச் செய்தியை மறு பரி சீலனைக்குட்படுத்தியுள்ளது. ***ஈழத்தமிழரான பிலிப் டி மெல்கொ அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட (1759) தமிழ் உரைநடையில் சந்தி விகாரம் பிரித்து அச்சுப்பதிக்கும் முயற்சியானது வில்லியம் நெவின்சினால் ஆற்றுப்படுத்தப்பட்டு (1847) ஆறுமுகநாவலரால் முறையாகக் கையாளப்பட்டுள்ளது எனக் கூறுவதே பொருத்தமானதாகின்றது.*** ஆக, தமிழ் உரைநடை வரலாறு மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டிய நிலையிலுள்ளமை இதுவரை கூறியவற்றிலிருந்து அவ்விதத்தில் உறுதியாகின்றது.

❍❍❍



வே.தில்லைநாதன்

மரண அவஸ்தை என்பது இதுதானோ? மூச்சு திணறுகிறது. மாலினியைத் திகில் ஆட்டிப்படைக்கிறது. தூக்கம் தொலைத்த இரவு உடலைச் சோர்வுக்கு உள்ளாக்கியிருக்கிறது. எலும்பு முறிவின் பின்னர் படுக்கையில் இருக்கும் கணவனருகில் சோகமே உருவாக அவள் அமர்ந்திருக்கின்றாள். சிறுவனான ஒரேமகன் பிரத்தியேக வகுப்புக்குச் சென்றிருக்கிறான். வாசலில் கிரீச்சிட்டு நிற்கும் வாகனம் பொலீஸ் ஜீப்பாக இருக்குமோ! அச்சத்தின் உச்சம் மேனி படபடக்கிறது. தனக்கேதும் நடந்துவிட்டால் கணவனையும் மகனையும் யார் கவனித்துக்கொள்வார்கள்.?

"என்ன மாலினி, குழம்பிப்போய் இருக்கிறா? என்ன பிரச்சினை? உன்னிலை ஒருவித பதட்டம் தெரியுது" ஆதரவாக அவளது புஜத்தை மென்மையாகப் பிடித்தபடி கேட்கும் கணவனின் குரல் அவளது கவனத்தைத் திசைதிருப்புகிறது. "ஆ.....அப்பிடி ஒண்டுமில்லையே" அவசரமாக அவனை ஆசுவாசப்படுத்த முயல்கிறாள் மாலினி.

"உன்னை எனக்குத் தெரியாதா, மாலூ. என்னவோ இருக்கு. தயங்காமல் சொல்லு"

கணவனுக்கு ஏதாவது சொல்லியாக வேண்டுமே என மண்டையைக் குடையும் அவளது பார்வை சுவரில் சாத்தப்பட்டிருக்கும் ஊன்றுகோல்களில் பதிகிறது. கழிவறைக்குப் போகமட்டும் அவற்றைப் பயன்படுத்தி எஞ்சிய நேரங்களைப் படுக்கையிலேயே கழிக்கும் அவன் இன்னும் எத்தனை நாட்கள் படுக்கையில் இருக்கவேண்டியிருக்குமோ? தன்னையே கவனிக்க முடியாத அவரால் மகனை எப்படிக் கவனிக்க முடியும்? நான் இல்லையெண்டா அவரை யார்தான் பராமரிப்பினம்? வேலைக்கார பொம்பிளையும் வேலையை விட்டிடுவாள். கணவனின் கேள்வியை அவள் மறந்துவிட மீண்டும் கலக்கம் அவளை ஆட்கொள்கிறது.

"என்ன மாலூ, நானும் கேட்டுக் கொண்டேயிருக்கிறன், நீ ஒண்டும் சொல்லாம எங்கையோ பாத்துக் கொண்டிருக்கிறா," கணவனின் குரல் அவளை உசுப்ப, "எப்படி அதைச் சொல்லுறதெண்டுதான் யோசிக்கிறன். இரவு ஒ்.பிஸ் பாட்டிக்குப் போனன்தானே அங்கை என்ரை சினேகிதியளிலை ஒருத்தி வம்புக்கு என்ரை ட்றிங்சிலை லிக்கர் கொஞ்சம் கலந்திருக்கிறாள். அது தெரியாம அதைக் குடிச்சிட்டு நான் ஏதோ கண்டபடி உளறினனாம். அதுதான் நினைக்க நினைக்க வெக்கமாயிருக்கு. நாளைக்கு எப்பிடி ஒ்.பிஸ் ஆக்களின்ரை முகத்திலை முழிக்கிறது எண்டு நினைச்சா.......... சீ உடம்பெல்லாம் என்னவோ செய்யிது" அவனை ஆறுதல்படுத்த ஒரு பொய்யை அவிழ்த்து விடுகிறாள்.

"சா....... இது தெரிஞ்சிருந்தா நானே கொஞ்சம் கலந்து தந்து அழகு பாத்திருப்பேனே"

"அதுதானே தண்ணீலை மோட்டச் சைக்கிள் அக்சிடன்ற் பட்டுக் காலை உடைச்சிருக்கிறீர்"

"நானென்ன முடக்குடியனே பாட்டீலை கீட்டீலை கொஞ்சம் கொஞ்சம் பாவிக்கிறதுதான்"

அவளை அறியாமலே அவள் சிரித்துவிடுகிறாள். அடுத்த கணமே அந்தகாரம் தான் கைது செய்யப்பட்டுவிட்டால் எல்லாம் வெட்டவெளிச்சத்துக்கு வந்துவிடுமே. தற்காலிகமாகவேனும் தகிப்பிலிருந்து விடுபடுவதற்காக, "கொஞ்சம் சாமான் வாங்கவேண்டியிருக்கு. நான் வெளியிலை

ஒருக்காப் போயிட்டு வந்திடுறனே" என்று கூறிய அவள் பதிலுக்காகக் காத்திருக்காதுஅவசரமாக உடுப்பை மாற்றிக்கொண்டு பணிப்பெண்ணிடமும் ஏதோ கூறிவிட்டு வெளியே நடக்கிறாள்.

யாருடைய கவனத்தையும் ஈர்க்க விரும்பாது குறுக்குப் பாதைகள் வழியே கண்களை அங்குமிங்கும் அலையவிட்டவாறு பரபரப்புடன் மாலினி நடந்துகொண்டிருக்க அவளது கைபேசி கிணுகிணுக்கிறது. அதைத் தொடுவதற்குக் கூட அச்சமாக இருக்கிறது எனினும் தயக்கத்துடன் பேசுகிறாள்.

"என்னடி உன்னை ஆஸ்பத்திரிப் பக்கம் காணேல்லை?"அலுவலகத்தோழியின் குரல்.

"என்னடி சொல்லுறா?'

"உனக்கு நடந்தது ஒண்டுமே தெரியாதா? இரவு பார்ட்டி நடக்கிற நேரத்திலை எங்கடபொஸ் மாடிப்படியிலிருந்து உருண்டு விழுந்திட்டார். கொஞ்சம் மப்புப் போலை. பிரைவேற் ஹொஸ்பிட்டலிலை அட்மிட் பண்ணியிருக்கி றாங்கள்."

''அப்பிடியே? இவருக்கு ஏலாதபடியா சொல்லாமல் கொள்ளாமல் கொஞ்சம் நேரத்துக்கு நான் வெளிக்கிட்டிட்டன். அவருக்குப் பிரச்சனை ஒண்டுமில்லையே?"

"கையெலும்பிலை ஃபிறாக்ஸர். பெரிசா ஒண்டு மில்லையாம். தலையிலையும் அடிபட்டிருக்குது போலை. தனக்கு என்ன நடந்ததெண்டு ஞாபகமில்லை எண்டு சொல்லுறாராம்"

"சரி நான் பின்னேரம் போய்ப் பார்க்கிறனே" என்று கூறிய மாலினி அதிகம் பேச்சை வளர்க்க விரும்பாது மருத்துவமனை குறித்த தகவலை மட்டும் கேட்டறிந்து கொள்கிறாள்.

கொள்வனவு முடிந்து வீடுதிரும்புகிறபோது குறுக்குப் பாதையைக் கைவிட்டு பிரதான பாதையில் நேர்கொண்ட பார்வையோடு நடக்கிறாள் மாலினி. நடையிலே துள்ளல் தெரிகிறது. மனம் இலேசாக இருக்கிறது.

வாங்கிய பொருட்களை பணிப்பெண்ணிடம் கொடுத்துவிட்டு, தனக்கும் கணவனுக்குமாக தேநீர்க் கோப்பைகளை ஏந்தியவாறு கணவனிடம் செல்லும் அவளை உற்று நோக்குகிறான் அவன்.

"இப்ப உன்ரை முகம் தெளிவாயிருக்கு. காலையிலை உன்னைப் பார்த்து நான் பயந்திட்டன்,'' தேநீரை உறிஞ்சும் அவனது வார்த்தைகள் அவளது முகத்தை மேலும் பளிச்சிடவைக்கின்றன.

"அதொன்டுமில்லை. நான் செய்த அசிங் கத்தை நினைச்சு நினைச்சு இரவு ஒரே நித்திரைக் குழப்பம். இப்பவெளியிலை போய்க் கொஞ்சம் காத்துப் பட்டுதா, முகம் தெளிவா வந்திட்டுது. இன்னொரு பொய், எனினும் பொய்யை அவள் தனக்குள் நியாயப்படுத்துகிறாள். பெரும்பாலும் இனி பொய்க்கான தேவை இருக்காது என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

பேச்சுவாக்கில் அவள், "இண்டைக்குப் பின்னேரம் நான் ஹொஸ்பிட்டலுக்குப் போகவேண்டியிருக்கும், எங்கடை டிப்பாட்மெண்ட் ஹெட் ஆஸ்பத்திரியில் இருக்கிறாராம்," என்று சொல்கிறாள்.

"ஏன் அவருக்கு என்ன நடந்ததாம்?"

"சரியாத் தெரியேல்லை விழுந்து ஃபிறாக் ஸரோ என்னவோவாம். இப்பதான் காயத்திரி கோல் பண்ணினாள் நான் போகவா?"

"இதென்னம்மா கேள்வி இது? போகத்தானே வேணும்"

சாயந்தரம் நோயாளியின் அறையை விசாரித்தறிந்து மாலினி செல்கிறபோது அங்கே அவளது மேலதிகாரியைத் தவிர வேறுயாரும் தென்படவில்லை. சம்பிரதாயமாக வாங்கி வந்தவற்றை அவனருகில் வைத்துவிட்டு அங்கிருந்த நாற்காலியொன்றில் அமர்கிறாள் அவள்.

அவனைப் பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது அவளுக்கு. அலுவலகத்தில் அவன் விடும் சேட்டைகளுக்கு அளவே இல்லை. அவற்றை அவள் சாதுரியமாக தவிர்த்து வந்தாலும் அவனையும் அவனது அதிகார தோரணையையும் திமிரையும் சகித்துக் கொள்வதே அவளுக்குச் சவாலாக இருக்கிறது.

தெரியாமல் கைபடுவதுபோலத் தொடுவதும் வார்த்தைகளில் தேன் சொட்டப் பேசுவதுமாகச் சரசமாடுவது அவனுக்குக் கைவந்த கலை. உன்னால என்னசெய்ய முடியும் என்ற இளக்காரத்தை வெளிக்காட்டாது மறைப்பதிலும் அவன் கில்லாடி. "நீங்கள் எவ்வளவு வடிவாயும் அடக்கமாயும் இருக்கிறியள். என்ரை பெண்டாட்டியுமிருக்கிறாளே அவளுக்குத் தான் ஒரு பணக்காரி எண்ட திமிர். மனிசனை மனிசனா மதிக்கமாட்டாள்'' என்று அவன் ஒருநாள் கூற 'நீமட்டும் என்னவாம்?' என்று மனதில் தோன்றியதை மறைத்த மாலினி, ''அதுதான் நீங்கள் மற்றவங்களின்ரை பெண்டாட்டிகளைத் தேடி அலைகிறியளாக்கும்" என்று நக்கலாகச் சொன்னது அவனுக்கு உறைத்ததாக தெரியவில்லை.

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்த அவளை அவனது குரல் மீட்கிறது. "என்ன மாலினி, எனக்கொண்டுமே ஞாபகத்தில்

இல்லை எண்டு நான் சொன்னதை அறிந்து என்னைப் பார்க்க வந்திருக்கிறியளாக்கும். அதுநான் சும்மா ஒப்புக்குச் சொன்னது. நான் ஒண்டையுமே மறக்கேல்லை. நீங்கள் என்னை மாடிப்படியிலை தள்ளிவிட்டதை நான் எப்பவுமே மறக்கமாட்டன்.''

"நான் ஒண்டும் உங்களை மாடிப்படியிலை உருட்டி விழுத்தேல்லை. நீங்கள் செய்த ஈனத்தனமான காரியத்தைத் தடுக்க உங்கட கையைப் பலமாத் தட்டிவிட்டன், அவ்வளவுதான். அளவோடை தண்ணியைப் போட்டிருந்தா தள்ளாடி விழுந்திருக்கமாட்டியள்,'' அவளது சூடான வார்த்தைகள் அறையில் வெப்பத்தை அதிகரிக்கின்றன.

"நான் நிதானத்தை இழந்திருந்தா தப்பியிருக்கமாட்டன். நான் ஒரு விளையாட்டு வீரன், தெரியுமோ?''

"உங்க விளையாட்டுத்தான் எங்களுக்குத் தெரியுமே. விளையாட்டு வினையானால் எல்லாம் புரியும்,'' முதல் தடவையாக மாலினி அவனை எடுத்தெறிந்து பேசுகிறாள்.

அவளது துணிச்சல் அவனை வியக்க வைக்கிறது.

சிறிதுநேரம் அறையில் கனத்த மௌனம் நிலவுகிறது. அவன் போதை மயக்கத்தில் அவளது நாடியை இரு விரல்களால் இறுகப்பற்றி அவளை முத்தமிட முயன்றதும் அவள் அவனது கரத்தை அசுரவேகத்தில் தட்டிவிட்டதும் அவன் உருண்டதும் நினைவுக்கு வரவே மாலினியின் உடல் இலேசாக நடுங்குகிறது.

அதிஸ்டவசமாக அருகாமையில் யாருமே தென்படவில்லை. அவள் அவசர அவசரமாக இன்னொரு மாடிப்படிவழியே கீழிறங்கி ஸ்கூட்டியில் வீடுநோக்கிப் பறந்தது அவள் மனதில் நிழலாடுகிறது. வீதி பெருமளவு வெறிச்சோடியிருந்தது. சைக்கிள் வேகத்தைவிட மனம் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது.

மனம் நிறைந்திருந்த அச்சத்திலும் ஒருவித குரூர திருப்தி மனதில் இழையோடுவதை அவளால் தடுக்கமுடியவில்லை. வீட்டில் பணிப்பெண் மட்டுமே விழித்திருந்தாள். அவளது கேள்விகளும் காதில் சரியாக விழுந்ததாகத் தெரியவில்லை.

"உங்களுக்கு எல்லாம் தெரியுந்தானே. அம்மா. எனக்குச் சரியான தலைவலி நான் படுக்கப்போறன்,'' எனப் பட்டும்படாமலும் பதிலளித்ததும் ஞாபகத்துக்கு வருகிறது.

"கோப்பி ஏதும் போட்டுதரவா அம்மா'' என்ற கேள்விவந்ததும், "எனக்கு ஒண்டும் வேண்டாம். நீங்க படுங்கம்மா'' என்று கூறிப் படுக்கையில் விழுந்ததும் தூக்கம் எட்ட நின்று அவளை ஏளனமாகப் பார்த்ததும் கூட நினைவுக்கு வருகிறது.

அவன் இறந்திருப்பானோ அல்லது உயிர் தப்பி யார் தன்னைத் தள்ளியது என்று சொல்லியிருப்பானோ, தன்னைத் தேடிக் காவலர்கள் எந்த நிமிடமும் வரக்கூடுமோ என்றெல்லாம் அச்சத்துக்குள்ளாகி அவஸ்தையில் படுக்கையில் புரண்டதும் தற்போதைய நிம்மதியும் என மாறுபட்ட எண்ணங்களில் அவள் அல்லாடிக்கொண்டிருக்க மீண்டும் அவனது குரல் அவளை உசுப்புகிறது.

"மாலினி, நான் பயந்திட்டன் எண்டு தப்புக்கணக்கு போடவேண்டாம். நான் ஒரு விடாக்கண்டன். அது உங்களுக்குத் தெரியுமோ?''

அவனது இதழ்க்கடையில் நெளிந்த சிரிப்பு, குரலில் தொனித்த ஏளனம், அதீத நம்பிக்கை, மறைமுக அச்சுறுத்தல் என்பவற்றால் மாலினியின் மனதில் சீற்றம் பொங்குகிறது. எனினும் தனது ஆவேசத்தைச் சாதுரியமாக மறைத்து அவனது பாணியிலேயே அவனுக்குப் பதிலடி கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் தலைதூக்க நாடியில் கைபதித்து அவனை இமைகொட்டாமல் நோக்குகிறாள் அவள்.

"என்ன யோசனை, மாலினி?''

"பெரிசா ஒண்டுமில்லை. கொடாக் கண்டனுக்கு என்ன பெண்பால் என்று எண்டு யோசிக்கிறன். நான் அதுதான், சரியா? அது உங்களுக்கு விளங்கவேணும். நான் வாறன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கோ'' மாலினி விசுக்கென்று ஆசனத்திலிருந்து எழும்புகிறாள்.

அவளது சிரிப்பு அவனை அச்சுறுத்த அவன் பதிலிறுக்க முற்படுகையில் அவனது மனைவி உள்ளே நுழையவும் அவனது நா செயலிழக்கிறது.

புன்னகை மாறா வதனத்துடன் மாலினி அவனது மனைவியைப் பார்த்து "உங்கட கவனிப்பிலை சேருக்குக் கெதியா சுகம் வந்திடும்'' என்று சம்பிரதாயமான வார்த்தைகளை உதிர்த்தாலும் அடக்கி வைத்திருந்த சீற்றம் அவளைப் பிடரியில் அறைந்து வெளியே தள்ளுகிறது.

❍❍❍

# சீனர் - தமிழர் பண்பாட்டில் தேநீர்

தேநீர் இன்று உலக மக்களின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் செம்புலப்பெயல் நீர்போல இரண்டறக் கலந்துவிட்டது. பண்டைய காலம் தொட்டே குறிப்பாகச் சீனர்களின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் தேநீர் ஒன்றிவிட்டது. **சீனாவின் தேசிய பானம் தேநீர்**. சீனர்களின் அன்றாட வாழ்கைக்குத் தேவைப்படுகின்ற ஏழு அடிப்படை பொருட்களில் தேநீர் முக்கிய இடம்பெறுகின்றது. இவ்வாய்வுக் கட்டுரை தேநீரின் வரலாற்று பின்புலம், தேநீர் வகைகள் மற்றும் தயாரிப்பு முறைகள், சீனர் மற்றும் தமிழர் பண்பாட்டில் தேநீர், தேநீர் குவளைகளில் சித்திர வேலைபாடுகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை விரிவாக ஆய்கிறது.

**தேநீரின் வரலாற்று பின்புலம்:**

சீன மொழியில் சாசுய்(*cháshù*) என்று அழைக்கப்படும் தேநீர், இந்தியில் **சாய்** என்றும் மலையாளத்தில் **சாயா** என்றும் அழைக்கப்படுகிறது. சாய் என்ற சொல் சீன மொழியில் இருந்து வந்த சொல்லாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இலங்கைத் தமிழில் **தேத்தண்ணீர்** என்று அழைக்கப்படுகிறது. சீனாவில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தேநீர் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இருப்பினும், ஆங்கிலேயர்களின் பயன்பாட்டிற்கு வந்தபிறகு, பதினேழாம் நூற்றாண்டிலிருந்துதான் தேநீரின் சுவை வெளியுலக மக்களுக்கு தெரியவந்தது எனலாம். இந்தியர் பண்பாட்டிலும் மலைப் பிரதேசங்களிலும் தேயிலைச் செடி வேரூன்றியது ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்திலேயாகும்.



**முனைவர் கு.சிதம்பரம்**
உதவிப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழர் புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

தேநீர் குறித்த ஆராய்ச்சிகள் சீனாவில் பண்டைய காலத்திலேயே நடைபெற்று இருக்கின்றது. சீனாவின் தேநீர் சித்தர் என்று அழைக் கப்படுபவர் புலவர் லு யு (*Lu Yu ,733-804*). இவர் சாஜிங் என்ற ஆய்வு நூலை எழுதியவர். இந்நூல் ஆங்கிலத்தில் *"The Classic of Tea"* என்ற தலைப்பில் மொழி பெயர்க்கப்பட்டு மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் தேநீர வகைகள், தயாரிக்கும் முறைகள், தேநீரின் மருத்துவக் குணங்கள் பற்றி வரிவாக எடுத்தியம் புகிறது.

தேநீரின் தோற்றம் குறித்து சீன நாட்டுப் புறக் கதைகளும் உள்ளன. அவை:

*1.*கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கு முன் சென் நங் (*Sen Nung*) என்ற மன்னர் ஒரு மரத்தின் அடியில் அடுப்பு மூட்டி வெந்நீர் வைத்துக் கொண்டிருந்தார்.அப்போது அந்த மரத்திலிருந்து சில இலைகள் அவரின் பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்த நீரில் விழுந்தது. அந்நீர் அருந்துவதற்கு சுவையாகவும் நறுமணமாகவும் இருந்தது. அன்றிலிருந்து தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளதாக நம்பப்படுகிறது.

*2.* கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் **தருமா** என்ற புத்த பிச்சு இந்தியாவிலிருந்து சீனாவிற்கு பயணம் மேற்கொண்டார். அப்போது அவரின் ஆன்மீக நம்பிக்கையை நிரூபணம் செய்வதற்காக ஏழு ஆண்டுகள் தவம் மேற்கொண்டு வந்தார். தவமிருக்கும்போது அவரின் கண்கள் தூக்கத்தில் சொருகின. தவத்தின்போது தூக்கம் வராமலிருக்க அருகிலிருந்த செடியிலிருந்து இலைகளைப் பறித்து வெந்நீரில் போட்டு பருகிவந்தார். அதன்பிறகு அவர் தொடர்ந்து தன்னுடைய தவத்தை மேற்கொண்டார்

**தேநீர் வகைகள் மற்றும் தயாரிப்பு முறைகள்:**

கருப்புத் தேநீர் (*Black tea or brown tea*)
பச்சைத் தேநீர் (*Green tea*)
ஊலாங் தேநீர் (*Wulong tea*)
மல்லிகைத் தேநீர் (*Jasmine tea /scented tea*)
வெள்ளைத் தேநீர் (*White tea*)
ஆகியன சீனாவின் முக்கியமான தேநீர் வகைகளாகும். தேநீரின் வகைகள்








ஒவ்வொன்றும் இலைகளின் பருவம் மற்றும் பதப்படுத்தும் விதம் ஆகியவற்றிற்கேற்ப வேறுபடுகிறது. ***சீனர்களின் தேநீர் வாய்ப்பாடு: வெந்நீர் + பதப்படுத்தப்பட்ட தேயிலை ஆகும்.*** பால் மற்றும் சர்க்கரையைத் தேநீருடன் கலந்து பயன்படுத்தும் வழக்கம் சீனர்களிடம் இல்லை. ஆனால், சிறப்புத் தினங்களில் தேநீரின் சுவையைக் கூட்டுவதற்காக பேரிச்சம் பழம் தேநீருடன் சேர்ப்பது வழக்கமாக உள்ளது. மேலும் மல்லிகை சாமந்தி போன்ற பூக்களையும் தேயிலையுடன் சேர்த்து மல்லிகைத் தேநீர் தயாரிக்கப்படுகிறது. மழைநீர் அல்லது பனி நீர் கொண்டு தயாரிக்கப்படும் தேநீர் சிறந்த தேநீராகச் சீனர்களால் கருதப்படுகிறது.

தமிழர் பண்பாட்டில் தேநீர் தயாரிப்பு முறை சீன முறையிலிருந்து சற்று வேறுபட்டது. ***தமிழரின் தேநீர் வாய்ப்பாடு : தேத்தூள் + தண் ணீர் + பால் + சர்க்கரை.*** இது தேவைக் கேற்ப மாறுபடுகிறது. பால்தேநீர் (milk tea) பாலில்லாத் தேநீர்(tea with out milk), சர்க்கரை யில்லாத் தேநீர் (tea with out sugar ) எழுமிச்சைத் தேநீர் (leamon tea) என தமிழர்களின் தேநீரை வகைப்படுத்தலாம். சர்க்கரையில்லா தேநீர் பெரும்பாலும் நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டவர்களால் மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. தேநீரு டன் எழுமிச்சைசாறு சேர்த்து எழுமிச்சை தேநீர் தயாரிக்கப்படுகிறது. ஜீரண சக்தியை அதிகப்படுத்துவதற்காகத் தேநீருடன் இஞ்சி யையும் சேர்ப்பது தமிழர் பண்பாட்டில் குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் பயன்பாட்டுக்கு தேநீர் வருவதற்கு முன்பிருந்தே தமிழர் பண்பாட்டில் தேநீருக்கு இணை யான பானம் கொத்தமல்லி தண்ணீர் (coriander tea) பண்டைய காலம் தொட்டே தமிழர் பண்பாட்டில் இருந்த வருகிறது. கொத்தமல்லி +தண்ணீர் +கருப்பட்டி + இஞ்சி என்பன இதன் வாய்பாடாகும். இது சோர்வு நீக்கியாகவும், வலி நிவாரணியாகவும், ஜிரணியாகவும், செயல் ஊக்கியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.தேநீரைப் போன்றே காலை மாலை எனத் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படுகிறது.

**சீனர் மற்றும் தமிழர் பண்பாட்டில் தேநீர்:**

பல்வேறு பண்பாட்டு சூழல்களில் தேநீரைப் பயன்படுத்தும் வழக்கம் சீனர்களிடம் பண்டைய காலம் தொட்டே இருந்து வருகிறது. அதாவது மரியாதையின் குறியீடாகவும், குடும்ப உறுப்பினர்கள் சந்தித்துகொள்ளும்போதும், மன்னிப்பு கோருவதற்காகவும், திருமண நாளில் பெரியவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும், பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதற்காகவும் தேநீர் பரிமாறுவது வழக்கமாக இருந்து வருகிறது.








திருமணம் முடிந்த பிறகு திருமண நாளன்றே மணமகன் மற்றும் மணமகள் உறவினர்களை அறிமுகப்படுத்தும் விதமாக மீண்டும் தேநீர் சடங்கு நடைபெறுகிறது. சடங்கின்போது மணமகன், மணமகள் மற்றும் மணமகளின் தோழி மூவரும் இணைந்து சிவப்பு பேரிச்சை மற்றும் தாமரை இதழ்களைச் சேர்த்து தேநீர் தயாரிப்பார்கள். சிவப்பு பேரிச்சை மற்றும் தாமரை இதழ்களை தேநீரில் சேர்ப்பதன் மூலம் மணமகள் கூடிய விரைவில் திடகாத்திரமான பேரக்குழந்தைகளைப் பெறுவாள் என நம்பப்படுகிறது.

மணமக்கள் மண்டியிட்டு மணமகனின் பெற்றோர்களுக்குத் தேநீர் வழங்குவது வழக்கமாக உள்ளது. மணமகள் தன்னுடைய மாமனாரின் இடது புறமும் மணமகன் தன்னுடைய தாயின் வலதுபுறமும் சம்பிரதாயப்படி மண்டியிடவேண்டும். தேநீர் சடங்கின்போது தோழி மங்கல வாழ்த்துப்பாடல்களைப் பாடிக்கொண்டு மணமக்களுக்கு உதவியாக இருப்பாள். மணமகனின் பெற்றோருக்குத் தேநீர் வழங்கிய பிறகு, மணமகனின் உறவினர்களுக்குத் தேநீர் வழங்கப்படுகிறது. முதலில் தாத்தா பாட்டிக்கும் பிறகு அண்ணா, அக்கா, தங்கை என வயதின் அடிப்படையில் ஒவ்வொருவருக்காக வழங்கி அறிமுகப்படுத்தப்படுகிறது. அதன்பிறகு குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் மணமக்களுக்கு சிவப்பு வண்ணப் பொதியை பரிசாக அளிப்பார்கள். அப்பொதியில் பணமோ நகையோ இருக்கும்.

கால மாற்றங்களுக்கேற்ப தேநீர் வழங்கும் சடங்கிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இன்று மணமக்கள் இரு வீட்டாருக்கும் தேநீர் வழங்குகின்றனர். இச்சடங்கு, பெரிய பெரிய மண்டபங்களிலும், ஐந்து நட்சத்திர விடுதிகளிலும், திறந்த வெளிகளிலும் பல ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் வண்ணம் ஆடம்பரமாக நடைபெறுகிறது. ஆடம்பரங்கள் இருப்பினும், இச்சடங்கு இரண்டு குடும்பங்களின் ஒருங்கிணைப்பைக் கௌரவப்படுத்தும் விதமாகவே நடைபெறுகிறது.

தமிழர் பண்பாட்டுச் சூழலிலும் தேநீர் இன்று முக்கிய இடத்தை வகிக்கிறது. பெண்பார்க்கும் படலத்தின்போது மணமகனுக்கு இனிப்பு மற்றும் காரத்துடன் தேநீர் கொடுக்கப்படுகிறது. தேநீரை,

மரியாதையின் குறியீடாகவும் (as a sign of respect)சீனச் சமுதாயத்தில் இளைய தலைமுறையினர் தங்கள் மரியாதையை வெளிப்படுத்தும் விதத்தில் மூத்த தலைமுறையினருக்கு தேநீர் வழங்குகின்றனர். பெரியவர்களை விடுமுறை நாட்களில் தேநீரகத்திற்கு அழைத்துச் சென்று தேநீர் கொடுத்து உபசரிப்பது பாரம்பரிய வழக்கமாக உள்ளது. இதுவே பண்டைய காலங்களில் உயர் பதவியில் இருப்பவர்களுக்குக் கீழ்நிலையில் இருப்பவர்கள் மரியாதை நிமித்தமாக தேநீர் வழங்குவது இருந்து வந்தது. இன்று பண்பாட்டு மாற்றங்களின் விளைவாக கீழ் பதவியில் வகிப்பவர்களுக்கு உயர் பதவியில் வகிப்பவர்களும், சிறியவர்களுக்குப் பெரியவர்களும் தேநீர் ஊற்றிக் கொடுப்பதைக் காணமுடிகிறது. இருப்பினும் பண்பாட்டுச் சூழலில் இவ்வாறு எதிர்பார்க்கக்கூடாது.

தமிழர் பண்பாட்டிலும் தேநீர் இன்று மரியாதையின் குறியீடாக மாறிவிட்டது என்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. விருந்தினர்கள, உறவினர்கள், நண்பர்கள் என யார் வீட்டிற்கு வந்தாலும் தேநீர் அல்லது குழம்பி கொடுத்து உபசரிப்பது தமிழர் சமுதாயத்தில் வழக்கமாக உள்ளது.

•திருமண நாளில் பெரியவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும்(to express thanks to elders on wedding da): சீனர்களின் திருமணச் சடங்குகளில் தேநீர் முக்கிய இடத்தை வகிக்கிறது. மணமகள் திருமண நாளன்று விடியற் காலையில் திருமணத்திற்கு முன்பு தனது பெற்றோருக்கு தேநீர் ஊற்றிக் கொடுத்து தன்னை நன்றாக வளர்த்ததற்காக தன்னுடைய நன்றியைச் செலுத்துவாள்.

பெண்பார்க்க வரும் மணமகனுக்கு மணப்பெண் கையால் கொடுப்பது வழக்கமாக உள்ளது. தேநீர் பருகியபிறகு தேநீர் கோப்பையை எடுத்துச்செல்வதற்காக மீண்டும் அப்பெண் அழைக்கப்படுவாள். அப்பெண் மீண்டும் வந்து அத்தேநீர் கோப்பையை எடுத்துச்சென்றால் அப்பெண்ணுக்கு அம்மணமகனைப் பிடித்தி ருக்கு என்று பொருள். அப்பெண்ணின் தாயார் எடுத்துச் சென்றால் அப்பெண்ணுக்கு மணமகனை பிடிக்கவில்லை என்று பொருள் கொள்ளப்படுகிறது.(மணமகன் தேநீர் பருகிவிட்டு மணப்பெண்ணின் வீட்டிலிருந்து வரும் தறுவாயில் இனிப்பை சுவைத்தால் அப்பெண்ணை பிடித்திருக்கு என்று பொருள். காரத்தை தொட்டால் பிடிக்கவில்லை என்று பொருள்.) இவ்வழக்கம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. நிச்சயதார்த்தம், திருமணம் என இன்று எல்லா வகையான பண்பாட்டுச் சூழல்களிலும் தேநீர் பயன்படுத்துவதைக் காணலாம்

குடும்ப உறுப்பினர்கள் சந்தித்துக் கொள்ளும் போதும் *(for a family gathering)*: பொருளின் நிமித்தமாகவோ அல்லது திருமணம் ஆனபிறகோ பிள்ளைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்கின்றனர். மீண்டும் குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேரும்போது தேநீரகத்திற்குக் *(Tea shop)* குடும்பத்துடன் சென்று தேநீர் அருந்தி மகிழ்வது சீனர்களின் வழக்கமாக உள்ளது. சீனாவில் தேநீரகங்கள் சீனக் கட்டடக் கலை நுட்பத்துடனும் இயற்கை எழிலோடும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் குழு குழுவாக அமர்ந்து தேநீர் அருந்தும் வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கும். தேநீரகத்தில் சீனக் கலைஞர்கள் மீட்டும் இசையை மணிக்கணக்கில் கேட்டு மகிழ்ந்தவாறே தேநீர் அருந்துவது சீனர்களின் கலா ரசனையைக் காட்டுகிறது. தேநீர் அருந்தும்போது கொறிப்பதற்காக வறுத்த பூசணி, தற்பூசணி விதைகள், வேர்க்கடலை ஆகியன கொடுக்கப்படுகிறது.

•மன்னிப்புக் கோருவதற்காகவும்; *(to apologize)*: பிள்ளைகள் ஏதாவது தவறுகள் செய்துவிட்டால் தேநீர் ஊற்றிக்கொடுத்து பெற்றோர்களிடம் மன்னிப்புக்கோருவது சீனர்கள் பண்பாட்டில் காணமுடிகிறது.

•பாரம்பரியத்தை அடுத்த தலைமுறை யினருக்கு எடுத்துச் செல்வதற்காகவும் *(to pass on the tradition)*: குடும்பத்தாரும் உறவினர்களும் கூடி தேநீர் அருந்தும்போது குடும்பப் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பற்றிப் பேசிகொள்வது வழக்கம். இதன் மூலம் சீனர்களின் பண்பாடு அடுத்த தலைமுறைக்கு எடுத்தச் செல்லப்படுவதாக நம்பப்படுகிறது.

## தேநீர் குவளையில் சித்திர வேலைப்பாடுளும் சீனர்களின் நம்பிக்கைகளும்:

சீனர்கள் பயன்படுத்தும் தேநீர் கூஜாக்களும் குவளைகளும் சித்திர வேலைப்பாடுகளுடன் மிகுந்த கலை நுட்பத்தோடும் அழகியல் உணர்வோடு இதற்கென தனிவகை களிமண் மற்றும் மணல் கொண்டு தயாரிக்கப்படுகிறது. ட்ராகான், பீனிக்ஸ், குதிரை, குரங்கு, புலி, பூனை, சேவல், மீன், பன்றி, ஆமை, ஆந்தை, பல்லி, தவளை, செர்ரிமலர், தாமரை, சூரிய காந்தி மலர், அன்னாசி, பூசணி, மூங்கில், சிரிக்கும் புத்தர், குழந்தை புத்தர், ஆண்,பெண் ஆகிய வடிவங்களில் தயாரிக்கப்பட்ட அல்லது ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்ட கூஜாக்களிலிருந்து குவளையில் தேநீர் ஊற்றிக் குடிப்பதன் மூலம் அதற்கேற்ற பலன் கிடைப்பதாக நம்பப்படுகிறது.

***ட்ராகான்–பீனிக்ஸ், ஆண்–பெண்*** ஆகியவற்றின் இணைப்பில் தயாரிக்கப்படும் கூஜாக்கள் அதிகாரம் மற்றும் அழகு ஆகிய இரண்டும் கிடைப்பதாக நம்பப்படுகிறது. ***குதிரை:*** ஆளுமைப் பண்பு, நுண்ணறிவு மற்றம் நன்றியுணர்வு. ***புலி:*** வீரம் மற்றும் தீய சக்திகளுக்கு எதிராகச் சண்டையிடும் குணம். ***பூனை:***நல்லது நடக்கும். ***சேவல்:***விடியற் காலையில் நல்ல செய்தியைக் கொண்டு வருதல், ***மீன் மற்றும் பன்றி:***செழுமை மற்றும் வளம். ***குரங்கு:*** ஆற்றல். ***ஆமை மற்றும்***





***பல்லி:***நீண்ட ஆயுள். ***தவளை:***எதிர்வரும் ஆபத்தை அறியச் செய்வது. ***வண்ணத்துப்பூச்சி:***மாறாத காதல் மற்றும் முருகியல். ***செர்ரிமலர்:***அழகு மற்றும் செல்வம். ***தாமரை:***எதிர்பார்ப்பு இல்லாத நட்பு மற்றும் காதல். ***சூரியகாந்தி மலர்:***நம்பிக்கை. ***அன்னாசி:***அர்ப்பணிப்பு மற்றும் நற்குணம், ***பூசணி:*** நல்ல பலன். ***மூங்கில்:***உயர் பண்பு மற்றும் உயர்வு. ***குழந்தை மற்றும் சிரிக்கும் புத்தர்:***மகிழ்ச்சி,அமைதி மற்றும் அன்பு. இத்தகைய கலை நுட்பத்துடன் கூடிய கோப்பைகள் பத்தாம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது.

தேநீர் பருகுவது சீனர்கள் பண்பாட்டில் உள்ளது போல் வழக்கமாக இல்லாமல் பழக்கமாகத் தமிழர் சமுதாயத்தில் கருதப் படினும், தமிழர் பண்பாட்டில் தேநீர் இரண்டறக் கலந்துவிட்டது என்பது தெளிவாகிறது தமிழகத்தில் தேநீரகங்கள் இன்று கிராமங்களில்கூட தெருக்கள்தோறும் காணப்படுகின்றன. தேநீரகங்கள் அரசியல் மற்றும் சமூக விவாத களங்களாகவும் உள்ளன. தினமலர் நாளிதல் "டி கடை பெஞ்சு" என்ற தலைப்பில் தினந்தோறும் அன்றாட அரசியல் மட்டும் சமூக சிக்கல்களை அலசுகின்றது. திரைப்பட பாடல்களில்கூட தேநீர் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கல்யாணப் பரிசு என்ற படத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய. "டீ...டீ....டீ... பாட்டாளியாய் இருக்கும் தோழனுக்கு கூட்டாளியாய் இருப்பது டீ...." என்ற பாடல் வரிகள் குறிப்பிடத்தக்கது. பாட்டாளிகளுக்காகவே அறிமுகப்படுத்தப்பட்ட தேநீர் இன்று அனைத்து தரப்பு மக்களின் சிந்தனையைத் தூண்டும் பானமாகவும் சோர்வு நீக்கியாகவும் உள்ளது.

**அடிக்குறிப்பு**

நான் சீனாவில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியபோது சீன நண்பர்களின் திருமண நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோதும் அவர்களிடம் கலந்துரையாடிய போதும் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் சில இணையத் தளங்களில் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

○○○

## அவன் தான் இவன்

**உடப்பூர் வீரசொக்கன்**

நரிக் குணம் போல்
திரிந்தவன் தான் - இவன்
நாசஎண்ணமும் நாவாபழக்கமும்
நாளும் தந்தவன் அவன்

நான் பழக்கம் போல்
தெரிந்தவன் - இவன்
நாவாநாக்கும் நீழாகையும்
நட்புடன் தந்தவன் அவன்

நல் ஒழுக்கம்போல்
தெரிந்தவன் தான் - இவன்
ஊத்தபேச்சும் ஊதாகுணமும்
உணர்வுதந்தவன் அவன்

நல் உள்ளம் போல்
நடக்கதெரிந்தவன் - இவன்
நரிபார்வையும் நயவஞ்சகமும்
நாளும் தந்தவன் அவன்

பாசஅணைப்புபோல்
நடக்கத் தெரிந்தவன் - இவன்
பாராமுகமும் பலி இறக்கமும்
பாங்குடன் தந்தஅவன்

நட்புநடத்தைபோல்
நடிக்கதெரிந்தவன் - இவன்
நச்சரிப்பும் நாவாநாக்கும்
நயப்புடன் தந்தவன் அவன்

அன்புஅரம் போல்
அரவணைக்கதெரிந்தவன் - இவன்
ஆவாஆசையும் ஆணவசெருக்கும்
அறிந்துஉணர்ந்தவன் அவன்

வாழ்க்கையைவசந்தம் போல்
வகுக்கதெரிந்தவன் - இவன்
வாழாவெட்டியாய் வரும் துயரை
வகுத்துதந்தவன் அவன்

காதல் உணர்வுபோல்
கனவுகண்டவன் இவன்
கல் நேஞ்சமும் கழுத்தரிக்கும்
காரியம் செய்பவன் அவன்

அன்றுபழகியபோல்
இன்றுதெரிந்த இவன்
ஊதாரிபேச்சும் ஒவ்வாகொள்கையும்
ஊரில் வாழதகுதியற்றவன் அவன்

# கடைக்குட்டியன்

"ஐயோ"

நிலம் நன்கு வெளிக்காத அந்த அதிகாலைப் பொழுதில் கனகம் அலறிய பொழுது ஊரே கூடியது.

கிணற்றினுள் கணபதியின் உயிர் போய் உடல் மிதந்து கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்தவர் அந்தக் காலைப் பொழுதில் கனகத்தின் குரல் கேட்டு முன் - பின் வளவு வேலிக்கதியால்களை விலத்தியும் தள்ளியும் கொண்டு உள்ளே வந்து அவனை கிணற்றினுள் இருந்து தூக்கி வெளியில் கொண்டு வந்தார்கள்.

சந்தையில் இருந்து கிழக்காகச் செல்லும் ஒழுங்கைப் பக்கத்தில் இருந்து யாரோ ஒருவரின் இழவுச் செய்தியை இரு இளைஞர்கள் சைக்கிளில் தம் அவலக் குரலில் மாறி மாறிச் சொல்லிக் கொண்டு போய்க் கொண்டு இருந்தது தெளிவாகக் கேட்டது.

"எங்கடை சுடலை சனிக்கிழமை எடுக்கத் தொடங்கினால் ஏழுபேரை எடுத்துப் போட்டுதான் போகும்" முணுமுணுத்தார்கள் கூடி நின்றவர்கள்.

பொலிசுக்கும் தகவல் போக அடுத்த அரை மணியாலத்துள் ஜீப் வண்டி சீறிக் கொண்டு வந்து ஒழுங்கை முகப்பில் நின்றது.

கணபதியின் உடலைச் சுற்றி நின்ற அனைவரும் பொலிசைக் கண்டதும் விலத்தி விலத்திப் போய் எட்டவாக நிற்று கொண்டார்கள் - அவனின் முகத்தில் மொய்த்துக் கொண்டு இருந்த இலையான்கள் போல.

கனகமும் நான்கு பிள்ளைகளும் வீட்டின் தாழ்வாரத்தில் நடுங்கிக் கொண்டும் அழுது கொண்டும் நின்றார்கள்.

கூரையில் காகங்கள் வேறு கரைந்து கொண்டும் கத்திக் கொண்டு இருந்தன.

நாய்கள் அமைதியின்றி அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தன.

கணபதியின் வீமன் மட்டும் அவனைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தது.

கணபதி தற்சமயமாக கிணற்றினுள் விழுந்தானா?


கணபதி கிணற்றினுள் குதித்து தற்கொலை செய்து கொண்டானா??

கணபதியை யாரும் கொலை செய்து விட்டு கிணற்றினுள் போட்டார்களா???

மூத்தது ஆண் பிள்ளை என்று கூரைதட்டி ஊர் எல்லாம் சொல்லி.... மானிப்பாய் மருதடிப் பிள்ளையாரை நினைத்து கணபதிப்பிள்ளை என ஆசையுடன்தான் பெயர் வைத்தார்கள் சந்தையில் தரகு செய்யும் செல்லையாவும் மரக்கறி விற்கும் செல்லம்மாவும்.



சிறுகதை



வி. ஜீவகுமாரன்
(டென்மார்க்)

சின்ன வயதிலேயே தாய்க்கும் தகப்பனுக்கும் பின்னால் சந்தைக்குப் போய் வந்த கணபதிபிள்ளையின் கவனம் முழுக்க சந்தையடிச் சண்டித்தனத்தில் ஐக்கியமாகிய பொழுது பள்ளிக்கூடம் என்பது எந்த விதத்திலும் அவனைக் கவரவில்லை.

பள்ளிக்கூடத்தில் தையலக்கா அடிக்க ஓங்கிய பிரம்பை தன் கையால் பிடுங்கிக் கொண்டு நேரடியாக சந்தைக்கு ஓடி வந்து தகப்பனுக்கு பின்னால் ஒளிந்து கொண்டதுடன் அவனின் பள்ளிக்கூட அத்தியாயம் முற்றுப் பெற்று விட்டது.

பின்பென்ன?

சந்தையடி.... சண்டித்தனம்.... தரகு....

கணபதிப்பிள்ளை என்ற பெயரில் 'பிள்ளை' என்ற வால் அற்றுப் போக 'சண்டியன்' என்ற முடி வந்து அமர்ந்து விட்டது.

'சண்டியன் கணபதி' ஆகினான்.

சண்டித்தனத்துடனும் குடியும் கைகோர்த்துக் கொண்ட பொழுதும் கணபதி நல்லவன் நேர்மையானவன் என்ற அபிப்பிராயமே சந்தையடி முழுக்க நிலவி இருந்தது.

தரகு மட்டுமல்ல... சந்தையடியில் வரும் பஞ்சாயத்துகள் அனைத்தையும் அவனே தீர்த்து வைப்பான். கந்து வட்டி.. ஏலப் பிரச்சனைகள்.. வாடகைக்கடைக்களின் பாக்கி வசூல்கள்.. இத்தியாதி... இத்தியாதி... எல்லாம்.

கை மடித்து விடப்பட்ட அரைக்கைச் சேட்டு... முழங்காலுக்கு மேலாக தூக்கிக்கட்டிய சரக்கட்டு... வாய் முழுக்க வெற்றிலை... காவி படிந்த பற்கள்.... முற்றாக சவரம் செய்யாத மோவாய்....

அவனுக்கு கிட்டவாக எவரும் வராமலே விலத்தி விலத்திச் சென்று கொண்டிருந்த பொழுது அவன் கண்கள் மட்டும் பக்கத்தே உள்ள கலவன் பாடசாலைக்கு சென்று வந்து கொண்டிருந்த கனகவள்ளிமீது விழுந்தது. மரக்கறிச் சந்தைக்கும் மீன் சந்தைக்கும் நடுவே தேநீர் விற்கும் தகப்பனிடம் காசு வாங்கிச் செல்லும் பொழுதெல்லாம் அவளைஅவனின் கால்கள் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தன.

ஆரம்பத்தில் முகத்தைச் சுழித்து அவனைத் தவிர்த்து வந்த கனகவள்ளி முன்னேயும் பின்னேயும் வந்து கொண்டிருந்த கணபதியனைப் பார்த்து ஒரு நாள் புன்முறுவல்காட்டி விட்டாள்.

சுனாமி வந்து மூன்றாம் வருடதிருவிழாவின் கொடி இறக்கியதுக்கு அடுத்த நாள் இருவருக்கும் பூதாக்கலாச்சோறு கொடுத்து குடிசைக்குள் விட்ட பொழுது கனகவள்ளி கணபதிக்கு கனகம் ஆனாள்.

❖❖❖

"என்னதான் குடித்துப் போட்டு அவளை அடித்து ஆக்கினைப் படுத்தினாலும் அவளிலை அவன் அவ்வளவு அன்பு"

"அவளை அடிச்சாலும் கொன்றாலும் ஒரு வேளை கூட பிள்ளையளை அவன் பட்டினி போட்டதில்லை... ஒருவேளை கூட ஒரு நேரச் சாப்பாட்டுக்கு யாரிடமும் கை நீட்ட விட்டதில்லை"

"பிள்ளைகளிலை அவ்வளவு உயிர்"

"மூன்று பெட்டைகள் பிறந்த பிறகு இனி ஒரு பொடியன் பிறந்தால் அவனுக்கு கூடாது என்று அராலிச் சாத்திரியும் சொன்னவராம். இவன் கேட்டால் தானே?. சாத்திரியையும் தூஷணத்தாலை பேசிப் போட்டு அடுத்தது பொடியனைப் பெத்துப் போட்டவன்....

"இப்ப கனகத்தையும் அந்த நாலு குஞ்சுகளையும் அநாதைகளாய் விட்டுட்டு போய்விட்டான்....." ஆளுக்கொரு அபிப்பிராயம்.

அவனை உடற்கூறு செய்து மரணத்திற்கான காரணத்தை கண்டறிய வேண்டும் என பொலிஸ் இன்ஸ்பெக்டர் அம்புலன்ஸை வரச் சொல்லி அழைப்புக் கொடுத்தார்.

❖❖❖

போர் மேகங்கள் குவிந்தும் கலைந்தும் சென்ற பொழுது சண்டியன் கணபதியின் சண்டித்தனமும் கிட்ட தட்ட முடிவுக்கு வந்து விட்டது.

எட்ட எட்டவாக இருந்த சின்ன சின்ன சந்தைகள் பக்கத்து ஊரில் உள்ள பெரிய சந்தையுடன் தன்னை இணைத்துக் கொள்ள கணபதியின் இந்த ஊர்ச் சந்தை மெலிந்து விட்டது.

இப்போது மட்டுப்படுத்தப்பட்ட தரகும் மட்டுப்படுத்தப்படாத குடியும் மட்டும்தான்.

ஊரையே அடித்த கை கனகத்தை மட்டும் வெறியில் அடிக்கத் தொடங்கியிருந்தது.

பொதுவாக மாலைச் செக்கல் பரவும் பொழுது கணபதி வெறியில் ஆடி ஆடி அந்த ஒழுங்கையுள் வருவதும்... வேலிக்கதியால்களை

அதிக நேரம் பிடித்துக் கொண்டு நிற்பதுவும்... சிலவேளை அவ்வாறே சிறுநீர் கழிப்பதும்... யார் யாரையோ திட்டுவதும்...அவன் செல்ல மாக வளர்த்த நாயை உதைப்பதும்...அவனை அமைதிப்படுத்த முயற்சிக்கும் கனகத்தை போட்டு அடிப்பதும் என அவர்கள் ஒழுங்கையில் முதலில் மாதத்துக்கொரு முறையும்... பின் கிழமைக்கு ஒரு முறையும்... பின் நாளாந்தம் நிகழும் ஒரு நிகழ்வாக மாறி விட்டிருந்தது.

அவன் குரல் ஓங்கும் பொழுது ஒழுங்கையில் இருந்த மற்றைய குடும்பங்களுக்குள் ஒரு பதட்டம் நிலவும்.

பின்னேரவேளை நெருங்கி வர வர.... இன்று என்ன சண்டையோ... குடித்து விட்டு வந்து அம்மாவை அடிச்சு என்ன ஆக்கினைப் படுத்தப் போறாரோ என்ற பதைபதைப்பு அவன் நான்கு பிள்ளைகளுக்கும் தொற்றிக் கொள்ளும். மூத்தவளுக்கு 14. அடுத்தடுத்த மருதடி கோயில் கொடியேற்றங்களுக்கு ஒவ்வொன்றாக ஒன்றாக இரண்டு பெண்கள். கடைக்குட்டியனுக்கு 10.

மூத்தவளுக்கு குப்பைத் தண்ணி வார்த்தது போன மாதம்தான்.

அதனுடன் ஆவது கணபதி திருந்துவான் என ஊர் எதிர்பார்த்தது.

அது நடக்கவில்லை.

தாய்-தகப்பன் பாசம் என்பது பிள்ளைகளுக்கு தாய்ப்பாசம் மட்டும் என்றாகியது.

கடைக்குட்டியனின் உலகமே கனகம்தான்.

அவ்வாறே அவளின் உயிரே அவன்தான்.

கணபதி குடித்து விட்டு தாயைஅடிக்கப் போகும் பொழுது மூன்று பெண் பிள்ளைகளும் நடுங்கிக் கொண்டு நின்றாலும் கடைக்குட்டி முன்னே நின்று தடுப்பான்.

ஒரு நாள் கணபதி கனகத்தை அடிக்க கை ஓங்க கல் ஒன்றை எடுத்து எடுத்து தகப்பனை நோக்கி எறியப்போக கனகமே கண்டித்து அவனைத் தடுத்தாள்.

"அப்பாவுக்கு நீ கையை ஓங்க கூடாது"

"உன்னை மட்டும் அவர் அடிக்கலாமா?"

"என் கலி தீர்க்க வந்த தெய்வம் நீ" என்று அவனைக் கட்டிக் கொண்டு அழத் தொடங் கினாள்.

அவனும் அன்று நித்திரையாகும்வரை அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு இருந்தான்.

கணபதியின் குடியும் அதிகரிக்க அதிகரிக்க நான்கு பிள்ளைகளும் அவனிடமிருந்து இருந்து விலத்தி விலத்திப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

அதுவும் கனகத்திற்கு வேதனையாக இருந்தது.

குடியையும் கெட்ட வார்த்தைகளையும் சேர்த்து அவனை கனகம் ஏற்றுக் கொண்ட அளவிற்கு நான்கு பிள்ளைகளாலும் அவனை ஏற்க முடியவில்லை.

அவன் வீட்டில் இல்லாத வேளைகளில் வீடு ஊரடங்குச் சட்டம் இல்லாத ஊர் போல கலகலப்பாக இருக்கும். அவன் வீட்டை வந்ததும் ஆமி றவுண் அப் பண்ணும் வீதி போல அமைதியாகும்.

தனியே தாயும் பிள்ளைகளும் இருக்கும் பொழுது கடைக்குட்டியன் தன் வயதுக்கு மீறிய கதைகள் சொல்லி கனகத்தை அதிசயிக்க வைப்பான்.

"என் கலிதீர்க்க வந்து பிள்ளை.... என் அம்மாளாச்சி தந்த சொத்து" என அவனைக் கனகம்கட்டி அணைத்துக் கொஞ்சுவாள்.

"அம்மா ஏனம்மா ஐயா உன்னை குடிச்சுப் போட்டு அடிக்கிறவர்?"

"தெரியாதடா..."

"ஏன் அம்மா ஐயா உன்னை தூஷணத்தால் பேசுறவர்"

"எனக்குத் தெரியாது குஞ்சு"

நீண்ட ஒரு மௌனத்திற்குப் பின், "அம்மா நான் கட்டப் போற பொம்பிளையை இப்பிடிப் பேச மாட்டன்.. இப்பிடிப் போட்டு அடிக்க மாட்டன்... நீ ஐயாக்கு பதிலாக என்னைப் போல ஒருத்தனை கலியாணம் செய்திருக்க வேணும்" அந்த சிறிய வாய் சொல்லி முடிக்கு முதல் அவனைத் தாவி தன் நெஞ்சுடன் அணைத்துக் கொண்ட கனகத்தின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடத் தொடங்கியது.

அன்று அவன் அப்படியே தூங்கி விட்டான்.

அந்த நான்கு பிள்ளைகளுக்கும் சரி... அந்த ஒழுங்கையில் வசித்தவர்களுக்கும் புரியாமல் இருந்த ஒரே புதிர் மாலையில் இடி மின்னல் சூறாவளி வந்தது போல அதிரும் கணபதி வீட்டு முற்றமும்... வீடும்.. அடுத்த நாள் எதுவும் நடக்காதது போல அமைதியாக கடற்கரை போல விளங்குவதுதான்.

அதிகாலையில் எதுவும் நடக்காதது போல அவன் சந்தைக்கு செல்கின்றான் என்பதும்... அதேபோல் கனகமும் அவன் பின்னே அமைதியாகப் போகின்றாள் என்பதுதான்.

❖❖❖

அன்றும்அப்படித்தான்!

போயா தினம் ஆதலால் தவறணைகள் பூட்டு. எனவே வீடுகளில் கள்ளு மலிவு விற்பனையில்.

நிறை வெறியில் அதிகமாக கனகத்தை கிணற்றடியில் வைத்து அடிக்கவும் உதைக்கவும் தொடங்கி விட்டான்.

பயம் ஒரு புறம்.. மரியாதை ஒரு புறம் என ஒதுங்கி ஒதுங்கி இருந்த அயல்வீட்டவர்கள் வந்து மறிக்க அது கை கலப்பாகி விட்டது.

அவனின் கோபம் மேலும் கனகத்தின் மேலே திரும்பி அவளை மேலும் மேலும் அடிக்கத் தொடங்கினான்.

மூன்று பெண் பிள்ளைகளும் கனகத்தை கட்டிக் கொண்டு கணபதியின் அடியில் இருந்து காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருந்த பொழுது குசினிக்குள் இருந்து ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு கடைக்குட்டியன் ஓடிவர அனைவரும் அதிர்ந்து விட்டார்கள்.

இதனை சற்றும் எதிர்பாராத கணபதியின் தலைக்கேறியிருந்த வெறி கீழே இறங்கிக் கொண்டிருந்தது.

கனகம் தாவி ஓடிச் சென்று மகனைக் கட்டிக் கொண்டு அழத்தொடங்கினாள்.

கத்தி நிலத்தில் விழுந்தது.

அக்கம் பக்கம் மெதுவாக கலையத் தொடங்கியது.

கடைக்குட்டியனின் படபடப்பு குறைய அதிக நேரமாகியது.

இரவு நடுச்சாமத்தை தாண்டிக் கொண்டு இருந்தது.

சாக்குத் துணியே கதவான மண் அறையுள் பெண் பிள்ளைகள் தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

வழமைபோல வெளி விறாந்தையில் கணபதி - கனகம் - கடைக்குட்டியன்.

கடைக்குட்டியனுக்கு தாய் அனுங்குவது போலச் சத்தம் கேட்டது.

அம்மா அழுகின்றாவா?

மெதுவாக கண் திறந்து பார்த்தான்.

இருட்டில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

அம்மாவை ஐயா தன் கைகளால் நெரிக்கின் றாரா?

'அம்மா... 'அம்மா.... கடைக்குட்டியனின் மனம் படபடத்தது.

அம்மாவின் மீதேறி ஐயா கொலை செய்யப்பார்க்கின்றாரா?

அம்மா ஏன் நெளிகின்றா?

அம்மாவின் குரல் ஏன் கேட்கவில்லை??

படுக்கையில் இருந்து எழுந்து குரல் தர ஏனோ பயமாய்.....பார்த்துக் கொண்டே இருந்தான்.

என் அம்மா....

என் அம்மாவை...

ஐயாவை விட நன்றாக நான் பார்த்துக் கொள்ள விரும்புகின்ற அம்மாவை...

பகலில் அடித்தும்.... பேசியும் துன்புறுத் துவது போதாது என்று இப்போ இரவில் ஏறி இருந்து கழுத்தை நெரித்தும்... அம்மாவை நசித்தும்....

ஏன் அம்மா குழறவில்லை?

அம்மாவும் அவரின் கழுத்தை நெரிக்கின் றாவா??

'கொல் அம்மா'

'அப்படியே ஐயாவின் கழுத்தை நெரித்துக் கொல் அம்மா'

அம்மாக்கு மூச்சு வாங்கின்றது போலும்.....

ஐயாக்கும் மூச்சு வாங்கின்றது போலும்....

இருவருமே சண்டை பிடிக்கின்றார்களா?...

'கொல்லு அம்மா'.... கொல்லு அம்மா'....

கடைக்குட்டியனுக்கும் மூச்சு வாங்கத் தொடங்க அவர்கள் இருவரின் மூச்சும் கொஞ்சம் கொஞ்சமாக அமைதியாகத் தொடங்கியது போலும்.

கணபதி எழுந்து கிணற்றடிப் பக்கம் போனான்.

கனகம் பிணம் போல படுத்திருந்தாள்.

கடைக்குட்டியன் மெதுவாக எழுந்து தாழ்வாரத்தில் நின்று நிலவு வெளிச்சத்தில் பார்த்தான்.

கணபதி கிணற்றில் தண்ணி மொண்டு கொண்டு நின்றான்.

மெதுவாக பின்னே சென்று கணபதிக்கு பின்னால் நின்று கொண்டான்.

கணபதி தண்ணி வாளியை துலாக்கயிற்றில் இருந்து குனிந்து எடுத்த அந்த தருணத்தில்...

'துலைஞ்சு போ'

ஒரே தள்ளல்.

அந்த இரவில் கணபதி கிணற்றுள் விழுந்த சத்தமோ... தத்தளிப்போ... யாருக்கும் கேட்கவில்லை.

மெதுவாக தாயை வந்து அணைத்துக் கொண்டு படுத்துக் கொண்டான்.

தாய் கனகமும் அவனை அணைத்தபடி தூங்கிவிட்டாள்.

❖❖❖

“வெறியில் கணபதி கிணற்றினுள் தவறி விழுந்திருக்க வேண்டும் அல்லது தற்கொலை செய்திருக்க வேண்டும்” என வைத்திய அதிகாரியும் பொலிசும் கணபதியின் பைலை முடித்துக் கொண்டார்கள்.

வீட்டின் பின்புறம் நின்றிருந்த பெரிய பூவரசு நெஞ்சாங்கட்டைக்காக தறித்து வீழ்த்தப்பட்டது.

முன் தட்டிப் படலைக்கு பக்கத்தே இருந்த வேலியையும் பிரிக்கத் தொடங்கினார்கள்.

அவலச்சாவு என்பதால் கற்பூரத்தை கொளுத்தி ஒரு தேவாரத்தைப் பாடி ஈமக்கிரியை களை சுருக்கமாக முடித்துக் கொண்டார்கள்.

இறுதியாக கொள்ளிக் குடத்தை தூக்கி கடைக்குட்டியனின் தோளில் வைத்த பொழுது கனகம் தன் தலையில் அடித்து குழறியது அங்கிருந்த அனைவரையும் கலங்க வைத்தது.

“ஐயாவை கொண்டு போறியோடா என்னைப் பெத்தவனே”

❖❖❖

சுடலையின் நடுக்கட்டத்தில் அடுக்கப் பட்டிருந்த விறகு கட்டைகள் மீது சவப்பெட்டியை இறக்கி வைத்தார்கள்.

தோளில் கொள்ளிக் குடத்தை வைத்து... கொள்ளியை புறங்கையில் பிடித்தபடி விறைப்பாக நின்றிருந்தான் கடைக்குட்டியன். பக்கத்தே ஒருவர் அவனை ஆதரவாக அவனை அணைத்தபடி.

மற்றவர்கள் பெட்டியின் மூடியினைத் திறந்து கணபதியின் நெஞ்சின் மீது நெஞ்சாங்கட்டையை வைத்த பொழுது கடைக்குட்டியன் முதல் தடவையாக கதறி அழுதான்.

○○○

# மயான நெருப்பு

சுதந்திரத்தின் முன்----
மலையகத்து இந்துக்களின்
மரணித்த உடல்களை
எரிக்கவிடவில்லை
அன்னியர்களான வெள்ளையர்கள்.

எரித்தால்----
தேயிலைத் தோட்டம்
கருகிப் போகும்.
சேதம் விளையும்,
நட்டம் ஏற்படும்.

புதைத்தால்
பசளையாகி
தேயிலைக்கு உரமாகும்
என்று காரணங் காட்டி
எரிப்பதைத் தடுத்தனர்.

அது இந்துக்களின்
மரபுகளுக்கெதிரான
பொருளாதார அடக்குமுறை.

சுதந்திரத்தின் பின்?----
இன்று---
இந்நாட்டு இஸ்லாமியர்களின்
இறந்த உடல்களை
புதைக்க விடவில்லை.
எரிக்கிறார்கள்
கொரோனாவைக் காரணம் காட்டி.

இது இஸ்லாமியர்களின்
மரபுகளுக்கெதிரான
அரசியல் அடக்குமுறை.

புதைக்கப்பட்ட உடலுக்கு
விசாரணை உண்டு மார்க்கப்படி.
எரிக்கப்பட்ட உடலுக்கு
விசாரணை இல்லை.
ஆனால்-----
எரித்தவர்களுக்கு விசாரணை உண்டு.

– அகளங்கன்


# தோழர் டொமினிக் ஜீவா! துலங்கும் உன் நாமம்!

மல்லிகை ஜீவா! மாண்புறு மனிதன் நீ! - இன்றுனை
மண்ணில் நாம் இழந்தோம்!

இலக்கிய உலகு எங்கணும் சோகம்!
ஈடுசெய்ய முடியாதுன் இழப்பு!

எண்பத்தியேழில் இலக்கிய உலகு
எடுத்தது மணிவிழா!-பின்னர் உன்
பவளவிழாவும் பார்த்துக் களித்தோம்!
அகவை எண்பதை அடைந்த போதினில்
மிகவும் உனைநாம் மெச்சி மகிழ்ந்தோம்!
தொண்ணூறு வயதைத் தாண்டியபோதும்
துவளாஉந்தன் துணிவைப் புகழ்ந்தோம்!
நூறுவயதை அடைவதற்கின்னும்
ஆறு ஆண்டுகள் இருக்கும் போதிலே
ஐயோ! உந்தன் ஆவி பிரிந்ததே!

'சுதந்திரன்' இல் - உன் எழுத்து
சூல் இனைக் கொண்டதும்
கணேசலிங்கன் அதற்குக் கால்ஆய் அமைந்ததும்,
'எஸ்.பொ. எழுத்து நண்பராய் ஆனதும்
பின்னர் 'டானியல்' பிணைப்பு நிகழ்ந்ததும்
சென்னையில் வெளிவரும் சிற்றிதழ் ஒன்றினில்
'சிலுவை' என்றஉன் சிறுகதை வந்ததால்
சிலாகித்துஅதனைச் சிந்தையில் கொண்டவர்
'ஏ.ஜே.' எனும்நல் இலக்கிய நண்பரோ
தேடிவந்துன்னுடன் தோழமை பூண்டதும்
தமிழ்நாடும் உன்தகுதி அறிந்ததால்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தி எட்டிலே
அட்டைப்படத்தில் உன் அழகிய முகமலர்
தாங்கியதாகச் 'சரஸ்வதி' - சஞ்சிகை(யை)
விஜயபாஸ்கரன் வெளியிட்டு வைத்ததும்
சென்னை 'சரஸ்வதி' - உன்
சிறுகதைத் தொகுதியைத்
'தண்ணீரும் கண்ணீரும்'தலைப்பில் கொணர்ந்ததும்
அறுபதாம் ஆண்டிலே அந்தப் புத்தகம்
சாகித்ய மண்டலப் பரிசுக்குரியதாய்
ஆகித் தமிழில் சிறுகதை இலக்கியம்
ஆக்குமுன் ஆற்றலை அளவிட வைத்ததும்
இலக்கிய உலகினில் ஏற்றமுற நீ
எடுத்து வைத்தநல் இனிய தடம்களாம்!



'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்'
ஈழமண்ணில் எழுந்த வேளையில்
விளங்கினாய் யாழ்கிளைச் செயல் ஆளனாய்! - அதன்
வெற்றி தோல்வியில் பங்கு கொண்டதால் - நீ
கற்றுக் கொண்டவை காலத்தின் பதிவுகள்.


கார்த்திகேசன் மாஸ்ரரில் 'மார்க்ஸிசம்'
நேர்த்தியாய்க் கற்று நெஞ்சில் மானுட
நேயம் வளர்த்த டொமினிக் ஜீவா!
'பஞ்சமர்' தம்மைப் பழித்திடுவோரை
வெஞ்சினம் கொண்டு வீழ்த்திய வீரன்!
அஞ்சினன் அல்லன்! அத்தகையோரை

– செங்கதிரோன்

எத்தகை உயர்ந்த இடத்தினரேனும்
பொத்திவாய்ப்புறம் போகவைத்தவன்!


‘கந்தபுராணக் கலாசாரம்’ என்றெலாம்
கணக்கிலாதபல கதைகளைக் கட்டியும்
சொந்தமண்ணின் சுதந்திர மாந்தரைச்
சோடை போனவர் என்று சுரண்டியும்
முந்தமுனைந்த மூடரை எழுத்தினால்
முதுகுகாட்டி ஓடி மூலையில்
ஒளிக்க வைத்தவன்! - நெஞ்சில்
ஓர்மம் படைத்தவன்!

‘இழிசனர் இலக்கியம்’ என்றிவர் எழுத்தினை
‘இலக்கியக் கொம்புகள்’ இயம்பிய வேளையில்
கிழிகிழியெனக் கிழித்தவர் கிண்டலைக்
கீழ்த்தரமானவை என்று நிறுவியே
விழிபிதுங்கிஅவ் வீணர்கள் விலகிட
வீறுகொண்டு நல்வினை விதைத்தவன்.




அறுபத்திஆறு ஆகஸ்ட் பதினைந்தில்
ஆமாம்! அந்த அரங்கேற்றம் நிகழ்ந்தது.
சிகை அலங்காரச் சிறுகடையொன்றினுள்
சிறியமூலையில் சிற்றிதழ் ‘மல்லிகை’
முகை அவிழ்ந்தது! - இம்மூத்த சஞ்சிகை
நாற்பத்தியெட்டு ஆண்டுகள் தொடர்ச்சியாய்
நடை பயின்றதோர் நல்ல சஞ்சிகை.
‘மல்லிகை’ யெனும்இம் மாசிகை வரவினால்
‘மல்லிகை ஜீவா! - என
மதிக்கப்பட்டவர்!

வெள்ளை வேட்டியும் வெள்ளை ‘நெஸனலும்’
வெளியில் எங்கும் வேறுடை தரியா - உன்
உள்ளத்தனையது உடையின் வெண்ணிறம்.
கொள்ளை அழகு - உந்தன்
கொடுப்புச் சிரிப்பு!




கொண்ட கொள்கையில் கோணாப் போக்கும்
துண்டை எவர்க்கும் தூக்கா மிடுக்கும்
குன்றின் வைரக் கொள்கைப் பிடிப்பும்
என்றும் இலங்கும் இளமைத் துடிப்பும்
என்றும் உன்னை இளமையாய்க் காட்டுமே!

இலக்கியம் எங்கோ அங்கெலாம் ஏகி
களைப்பிலாதெங்கும் ஏறி இறங்கி
இளைஞனைப் போலவே எதிலிலும் துடிப்பாய்
எண்ணித் துணிந்து கருமங்கள் இயற்றி
உழைப்புஒன்றே உயர்ந்ததென்றெண்ணி
ஊதியம் தன்னை ஒருபுறம் தள்ளி
ஊறுகள் விளையினும் உடைத்துத் தகர்த்து
உன்னதமான கொள்கைகள் நெஞ்சில்
உள்ளதால் என்றும் உலகு அளாவிய
உழைக்கும் மாந்தரை உயர்வெனப் போற்றிய
தோழர் டொமினிக் ஜீவா! - உன் நாமம்
துலங்கும்! உலகில் துலங்கும்!! துலங்கும்!!!

சிறுகதை

# “அசைல்”

ஆசி கந்தராஜா





இன்று இலங்கை அகதிகளுக்கான விசாரணை நாள். குடிவரவு அதிகாரிகளினால் நடத்தப்படும் இந்த முதலாவது நேர்காணலில், அகதி அந்தஸ்துப் பெறுவோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இப்பொழுதெல்லாம் நிலமை முந்தினமாதிரிஇல்லை, சொன்னதையெல்லாம் அப்படியே நம்புவதற்கு அந்தந்த நாடுகளின் அரசியல் பிரச்சனைகளை, ஆதியோடந்தமாக விசாரணை அதிகாரிகள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது விசாரணையில் வெற்றி பெறாதவர்கள் கீழ் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என, மாறிமாறி மனுச் செய்து காலத்தைக் கடத்துவார்கள். அதற்குள் உழைப்பதை உழைத்து, ஊரில் போய்ச் செட்டிலாகிவிடலாம் என்ற பொருளாதார மனக்கணக்கு இவர்களுக்கு. இதற்காகவே நீதிமன்றங்களில் அப்பீல் செய்ய, பெருவாரியான வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். நம்மவர்கள் உட்பட!

காத்திருப்போர் அறையில் தமிழர்கள் மட்டுமல்ல, ஒருசில சிங்களவர்களும் விசாரணைக்காகக் காத்திருக்கிறார்கள். தங்கள் பக்க நியாயங்களை எடுத்துச் சொல்ல, ஒருசிலர் வழக்கறிஞர்களுடன் வந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் இங்குள்ள தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உறவினர்கள், நண்பர்களைக் கூட்டிவந்திருக்கிறார்கள். மொத்தத்தில், இவர்கள் எல்லோரும் தமிழ் சிங்கள தேசிய முரண்பாட்டுப் பின்புலத்தை மையமாக வைத்து, அகதி அந்தஸ்துக் கோர வந்தவர்கள். இவர்கள் மத்தியில் தமிழரசி தன்னந்தனியே விசாரணைக்காகக் காத்திருக்கிறாள். முப்பது ஆண்டுகால ஈழப் போராட்டம் தன் கண்முன்னே வீழ்ந்த கொடூரம், தாளாத துயரமாக மனதை அழுத்த, அவள் அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறாள். அவளுடைய நினைவில் அலை அலையாக போர்க்காலச் சம்பவங்கள் வந்துவந்து மறைந்தன. இந்த நாட்டுக்கு அவள் தானாக விரும்பி வந்தவளல்ல. மாறாக கூட்டிவரப்பட்டவள்.

தமிழரசி என்பது, அவளுக்கு இயக்கம் வைத்த பெயர். அதுவே இன்றுவரை நிரந்தரமாக நிலைத்துவிட்டது. நீண்ட காலத்தின் பின்னர், அவள் அகதி அந்தஸ்துக் கோரும் விண்ணப்பத்தை நிரப்பியபோதே அபிராமி என்று தன் உண்மையான பெயரை எழுதினாள். பெயர் விஷயத்தில்கூட காலம் தன்னை எப்படிக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பதை நினைத்து, தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

காத்திருப்போர் அறை, நடைபாதையைப் போலச் சற்றுக் குறுகி நீண்டிருந்தது. இதனால் எதிரும் புதிருமாக இரண்டு வரிசைகளில் கதிரைகளை அடுக்கியிருந்தார்கள். அறையின் ஒரு பக்க அந்தலைச் சுவரில் மாட்டப்பட்ட தகவல் பலகையிலே, உலக அகதிகள் பற்றிய, ஜெனீவா உடன்படிக்கைச் சரத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

தமிழரசிக்கு நேரெதிரே இன்னமும் மீசை முளைக்காத தமிழ்ப்பெடியன் ஒருவன், தனக்கும் இலங்கையில் அரசியல் பிரச்சனை இருக்கென நிரூபிக்க, திகிலடித்த முகத்துடன் காத்திருக்கிறான்.

அவனுக்கு வசதியுள்ள உறவினர்கள் இந்த நாட்டில் இருக்கவேண்டும். இல்லையேல் பசைப்பிடிப்புள்ள பின்புலம் இருக்கவேண்டும். ஒரு தமிழ் லோயரைத் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறான். இருவரும் குரலைத் தாழ்த்தி மெதுவாகப் பேசினாலும் லோயரின் தடித்த குரல், முன்னால் இருந்த தமிழரசிக்குத் தெளி வாகக் கேட்கிறது.

"இலங்கையை விட்டு வெளியேற, உன்னை நிர்ப்பந்தித்த "இறுதி"க் காரணத்தை மட்டும், விளக்கமாகச் சொல்லு" என விசாரணையில் சொல்ல வேண்டியதை நினைவுபடுத்தினார் லோயர்.

"முந்தின பிரச்சனைகளைச் சொல்ல வேண் டாமோ"?

பெடியனின் கதையைக்கேட்டு, லோயர் டென்ஷனானார். தமிழரசி மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

"முந்தின பிரச்சனைகள் அவங்களுக்குத் தேவையில்லாதது. அந்தப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் உன்னால் அங்கு வாழ முடிந்தி ருக்கிறது, என அதிகாரிகள் நினைப்பார்கள்".

"ம்"

"இந்த நாட்டில் அகதி அந்தஸ்துப் பெற வேண்டுமென்றால், ஊரிலிருந்து வெளியேற உன்னை நிர்ப்பந்தித்த, வலுவான காரணத்தைச் சொல்லவேண்டும். அந்தக் காரணம், இலங்கை யில் உன்னால்தொடர்ந்து வாழமுடியாத நிலைக்குத் தள்ளியிருக்கவேண்டும்".

லோயர் சொன்ன லாஜிக் விளங்காமல் "நே" என விழித்தான் பெடியன்

லோயரால் இதற்கு மேலும் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. "நான் சொல்லித்தந்ததை மாத்திரம், விசாரணையில் சொல்" என்றார் காட்டமாக.

சற்றுநேரம் அமைதி காத்த பெடியன், ஜாக்கெட் பாக்கெட்டில் பத்திரப் படுத்தி வைத்திருந்த, கடித உறையை வெளியில் எடுத்தான். பின்னர் குரலை வெகுவாகத் தாழ்த்தி, "ஊரிலை நான் இயக்கத்திலை இருந்தனானெண்டு கிராம சேவகர் தந்த கடிதத்தைக் கொடுக்க வேண்டாமோ"? எனக் கேட்டான்.

தமிழரசிக்கு உடம்பில் உஷ்ணம் பரவி சட்டெனத் தலைக்கேறியது. காதைப் பொத்தி பெடியனுக்கு இரண்டு "அறை" குடுக்கவேணும் போல இருந்தது. கஷ்டப்பட்டு உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டாள்.

"அந்தக் கடிதத்தை உள்ளே வை. இந்த நாட்டுச் சட்டப்படி, இயக்கம் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பு. அடுத்த பிளேனிலை உன்னைத் திருப்பி அனுப்புவாங்கள், விருப்பமோ"? எனச் சீறியவரின் செல்போன் சிணுங்கவே, எடுத்துக் காதில்வைத்தபடி வெளியே போனார் லோயர்.

பெடியன் தயாவுக்கு ஒரே குழப்பமாகவும் பயமாகவும் இருந்தது. அவனுக்குப் பக்கத்தி லிருந்த சிவா இறுகிய முகத்துடன் "காக்க காக்க கனகவேல் காக்க" என, மனதுக்குள் முணுமுணுத்தபடி இருந்தான். இருவரும் இலங்கையில் இருந்து ஒரு ஏஜென்சி மூலமாகத்தான் இந்த நாட்டுக்குள் வந்தவர்கள். சிவாவுக்கு லோயர் வைக்க காசில்லை. ஒன்று விட்ட தமையனின் தயவில் இங்கு வந்தவன். பத்து வருடங்களுக்கு முன்னர் தமையனும் இந்த நாட்டுக்கு ஈழப் போராட்டத்தை முன்வைத்து வந்தவன்தான். இப்போதுள்ள கடுமை முன்னர் இல்லாததால், சீக்கிரம் விசா கிடைத்துக் காலூன்றிவிட்டான். இவன் மட்டுமல்ல, இங்கு அகதியாக வந்து இப்பொழுது பிரமுகர் களாகவும் செல்வந்தர்களாகவும் வாழும் பெரும்பாலானோர், இந்த வழியாக நாட்டுக்குள் நுழைந்தவர்கள்தான்.

நான்கு அறைகளிலும் மொழிபெயர்ப் பாளர்களின் உதவியுடன் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஒருசிலர் மட்டும் நீண்ட நேரம் விசாரிக்கப்படுகிறார்கள். பேயறைந்த முகத்துடன் பலர் விசாரணை முடிந்து வெளியே வருவதால், காத்திருப்போர் அறையில் ஒருவகை அச்சம் கலந்த அமைதி நிலவுகிறது. வெளியே வந்தவர்களிடம் உள்ளே நடப்பதைக் கேட்டறிய முடியாதபடி பாதுகாப்பு அதிகாரிகள் குறுக்கும் மறுக்குமாக விறாந்தையில் நடந்து திரிகிறார்கள்.

குழந்தைகளுடன் வந்திருந்த இளம் தம்பதிகள், தாங்கள் கொண்டுவந்த வீபூதியைப் பூசி, ஆஞ்சநேயர் படத்தைக் கண்களில் ஒத்தி, பயபக்தியுடன் பிரார்திக்கிறார்கள். இடையி டையே சிலுவைக் குறியிடுகிறார்கள். ஆஞ்சநேயருக்கும் வீபூதிக்கும் சிலுவைக் குறிக்குமான முரண் அவர்களுக்குத் தேவை யற்றது. வந்த விஷயம் ஒப்பேறவேண்டும். அதற்காக எதையும் சொல்லத் துணிந்தவர் களாகவே விசாரணைக்கு வந்திருக்கிறார்கள்.

இலங்கையில் நீண்டகாலம் நடந்த விடுதலைப்போர், பலரை மரணத்தில் தள்ளி, எஞ்சியவர்களின் உணர்வைச் சிதைத்து, மனச்சாட்சியை மழுங்கடித்து இறுதியில் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது என்ற எண்ணம் தமிழரசியைத் துரத்தியடித்தது. அத்துடன் நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருந்ததால், அவளின் பாதிப்படைந்த தண்டுவடம் வலித்தது. எழுந்து சிறிது தூரம் நடந்தாள்.

"நீ என்ன சொல்லப்போறாய்"? என சிவாவுக்கு நூல்விட்டுப்பாத்தான் தயா.

"கட்டாய ஆள்சேர்ப்பில் இயக்கம் என்னைப் பிடிச்சுக்கொண்டுபோய் வைச்சிருந்ததாய், அண்ணை சொல்லச்சொன்னவர்" என்ற சிவா, பின்னர் உஷாராகி, பேச்சை மேலும் வளர்க்க விரும்பாது ரொயிலெற்றை நோக்கி நடந்தான்.

இந்த நாட்டில் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்பது உண்மைதான். ஆனாலும் அந்த இயக்கம் முன்னெடுத்த விடுதலைப் போராட்டமே அனைவரையும் இந்த நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்ததென்பது அதைவிடவும் பெரிய உண்மை. இதைத் தெரிந்துகொண்டும் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தவும் குற்றம் சொல்லவும் தயாராகவே பலர் விசாரணைக்கு வந்திருக்கிறார்கள். அகதி விசாவுக்காகவும் அதனால் கிடைக்கப்போகும் வசதியான வாழ்க்கைக்காவும் எப்படி இவர்களால் சட்டென்று மாறமுடிகிறது? என்ற கேள்வி தமிழரசியின் மனதைக்கிளற, அவள் வெகுவாக ஆத்திரப்பட்டாள்.

தமிழரசி விடுதலை இயக்கத்தில் நீண்ட காலம் இருந்தவள். முன் அரங்குகளில் நின்று வீரத்துடன் போர்புரிந்தவள். ஈழப் போராட்டம் தோற்கவில்லை என்று இன்னமும் நம்புவள். போரின் இறுதிக் கட்டத்தில் களமுனையில் படுகாயமுற்று நீண்டகாலம், வெளிநாட்டு உதவியுடன் இயங்கிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவள். பின்னர் புலம்பெயர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் இந்த நாட்டுக்கு வந்தவள். இன்றும் போர்க்கால நினைவுகளுடன் வாழ்பவள்.

நீண்ட நேர காத்திருப்புக்குப் பின்னர், தமிழரசியின் முறை வரவே விசாரணைக்கு அழைக்கப்பட்டாள். உள்ளே ஒரு பெண் அதிகாரி மொழிபெயர்ப்பாளருடன் அமர்ந்திருந்தார். அதிகாரியின் முதலாவது கேள்வி, அவளது முகத்திலும் கழுத்திலும் துலக்கமாகத் தெரிந்த தழும்புகள் பற்றியது.

அவை "விழுப்புண்கள்" என்றாள் சுருக்கமாக. அது சரியாக மொழி பெயர்க்கப் படாததால் தமிழரசி அதற்குரிய ஆங்கில வார்த்தையைச் சொன்னாள். அவள் பன்னிரண்டாம் வகுப்புவரை ஆங்கில மொழியில் படித்ததால், அவளால் சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் முடியும். இதனால் சொற்களைக் கவனமாகத் தெரிந்தெடுத்து, ஆங்கிலத்தில் மேலே தொடர்ந்தாள்.

"நான் களமுனையில் நின்று போராடியவள்" என மொட்டையாக நிறுத்தியவள், சற்று நிதானித்து "ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு பயங்கரவாதச் செயற்பாடென நீங்கள் நினைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அது அப்படியல்ல" என்றவள், விசாரணை அதிகாரியின் ரெஸ்போன் ஸுக்காகக் காத்திருந்தாள்.

உஷாரான அதிகாரி, மேலே சொல்லு என்னும் பாவனையில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"எனக்கும் அப்போது படித்துப் பெரியாளாக வேண்டுமென்ற ஆசை இருந்தது. என்னைப்போலவே பலருக்கும் அந்த ஆசை இருந்தது. நாங்கள் தங்கியிருந்த கோவிலின் மேலே கொத்துக் கொத்தாக குண்டுகளை வீசி, அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்தபோதுதான் நான் அவர்களுக்கெதிராக போராட முடிவெடுத்தேன். என் கண் முன்னாலேயே எனது மூன்று வயது தம்பி வயிறு பிளந்து, குடல் வெளியே வந்து இறந்து கிடந்தான். இரண்டு நாட்களின் பின் அம்மாவின் உடல், இடிபாடுகளின் கீழே கண்டெடுக்கப்பட்டது. அப்பா சித்தப்பிரமை பிடித்தவராக சில காலம் வாழ்ந்தவர் திடீரென தற்கொலை செய்து கொண்டார்.

நெஞ்சு நிறையக் கோபம், தனித்து நின்று என்னால் எதுவும் செய்யமுடியாதென்ற இயலாமை. மனதில் சிதறிக்கிடந்த கோப நெருப்பைக் குவிக்க எனக்கு ஒரு மையம் தேவைப்பட்டது. நெஞ்சிலே குமுறிக்கனன்று கொண்டிருந்த நெருப்பை ஒன்றுசேர்க்க எனக்கு ஒரு அமைப்புத் தேவைப்பட்டது".

"கொலைக்குக் கொலை தீர்வாக இருக்கமுடியாது தமிழரசி. நீ சார்ந்த இயக்கமும்

சிங்களப் பிரதேசங்களில் பல பொதுமக்களைக் கொலை செய்தார்களே, அதை எப்படி நியாயப்படுத்துகிறாய்"?

"யாருடைய உயிராக இருந்தாலும் அது எல்லாவற்றையும் விட மேலானது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அதைவிடவும் பெரியது, எமது இனத்தின்விடுதலை என நான் சார்ந்திருந்த இயக்கம் முழுமையாக நம்பியது. களமுனையின் முன் அரங்குகளில் நின்று போராடிய பல ஆயிரம் போராளிகளில் நானும் ஒருத்தி. என்னால் எப்படித் தலமையை எதிர்த்துக் கேள்வி கேட்கமுடியும்? நீண்டகாலம் களமுனையில் நின்று போராடியதாலோ என்னவோ, ஒரு நிலையில் எங்களால் போர் வெற்றியைத் தவிர வேறு எதையும் சிந்திக்க முடியவில்லை".

"நீ சார்ந்திருந்த இயக்கம் இந்த நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பது உனக்குத் தெரியுமா தமிழரசி"?

"நன்றாகவே தெரியும். எனக்கு நடந்த துன்பியல் சம்பவங்களை உங்களுக்கு ஏற்றமாதிரி என்னால் மாற்றியும் திரித்தும் சொல்ல முடியம். இன விடுதலைக்காக சகலதையும் இழந்தவள் நான். இந்த நாட்டில் கிடைக்கலாம் என்ற சுகபோக வாழ்க்கைக்காக, எப்படி நான் துவக்குத் தூக்கிப் போராடவில்லையென மனச்சாட்சிக்கு மாறாகச் சொல்லமுடியும்"?

தமிழரசி உணர்ச்சி வசப்பட்டதால் அவளால் தொடர்ந்து பேசமுடியவில்லை. கொண்டு வந்திருந்த மருத்துவ அறிக்கையை அதிகாரியிடம் கொடுத்து விட்டு, யன்னலூடாக வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அதிகாரி மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. தமிழரசி கொடுத்த மருத்துவ ஆவணங்களைக் கவனமாக வாசித்தபின், விரைவில் முடிவைத் தெரிவிப்போம் எனச் சொல்லி விடைகொடுத்தார்.

தமிழரசிக்கு முதுகுத் தண்டுவடம் தொடர்ந்து பிரச்சனை கொடுத்தது. முறையான "விசா" இன்றி, தகுந்த சிகிச்சை பெற முடியாத நிலையில், வலியுடன் நகர்ந்து கொண்டிருந்தது காலம். மனிதர்கள் எதிர்பாத்துக் காத்திருப்பது பலநேரங்களில் நடப்பதில்லை. ஆனால் காத்திருந்ததை விடவும் அழகான விஷயங்கள் சிலநேரங்களில் நடந்து விடுகின்றன. தமிழரசிக்கும் அது நடந்தது. எதிர்பாராதவிதமாக அவளுக்கு குடிவரவு இலாகாவிலிருந்து கடிதம் வந்திருந்தது. அரச மருத்துவ இலாகாவைத் தொடர்பு கொண்டு, தண்டுவட சிகிச்சையைச் செய்யுமாறும் அதற்குரிய அனைத்துச் செலவுகளையும் கொடுப்பனவுகளையும் அரசே ஏற்றுக் கொள்ளுமென்றும், கடிதத்தில் சொல்லப் பட்டிருந்தது.

வீதியோர தபால்பெட்டிக்கு வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்த கடிதத்தை அன்று மாலையே தமிழரசி பார்த்தாள். எல்லாம் நல்லபடியாக முடியவேண்டுமென முருகன் கோவிலுக்குப் போய் அருச்சனை செய்ய வேண்டும்போல இருந்தது. அன்று ஐப்பசி வெள்ளி. திருவிளக்குப் பூசை வேறு. கோவில் மண்டபம் நிரம்பி வழிந்தது. சனம் கொஞ்சம் குறையட்டுமென தமிழரசி வெளியே நின்றாள். தூரத்தில் இருந்து தமிழரசியைக் கண்ட தயாவும் சிவாவும் ஆக்களை இடித்துத் தள்ளாத குறையாக விரைந்து வந்தார்கள்.

"ஞாபகமிருக்கா அக்கா, விசாரணையில் சந்திச்சனாங்கள்" எனத் தங்களை அறிமுகப் படுத்தினான் சிவா.

கூடநின்ற தயா தொடர்ந்தான். "ஒட்டு மொத்தமாய் எல்லாருக்கும் றிஜெக்ட் பண்ணிப்போட்டாங்கள், ஒருதருக்கும் 'விசா' கிடைக்கேல்லை. இனிக் கீழ்க்கோட்டிலை அப்பீல் பண்ணவேணும். ஊரிலை திரும்பவும் பிரச்சினை துவங்கினால்தான் அப்பீல் வழக்கிலை வெல்லலாம்".

"நீங்கள் முந்தி இயக்கத்திலை இருந்தனீங்கள்தானே அக்கா. நிலமை இப்ப என்னமாதிரி? சண்டை திரும்ப வருமோ?" எனக் கேட்டு அவளின் சாதகமான பதிலுக்காகக் காத்திருந்தான் சிவா. அவன் இருபது இலட்சம் இலங்கை ரூபாக்கள் ஏஜென்சிக்கு, வட்டிக்கு கடன் வாங்கிக் குடுத்து வந்தவன். குறைந்த பட்சம் அந்தக் காசையாவது உழைக்க வேண்டுமென்ற கவலை அவனுக்கு.

தமிழரசி..!

கனவுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் அலைந்து திரியும் உண்மைப் போராளிகளில் அவளும் ஒருத்தி. அவளால் இவர்களுக்கான பதிலை எப்படிச் சொல்லமுடியும்?

❍❍❍

# எதிர்க்கதையம்



பேராசிரியர்
சபா ஜெயராசா

திறனாய்வு நிலையில் எதிர்க்கதையம் (Counternarrative) என்பது முக்கிய கருத்தாடற் பொருளாக மேலெழுந்துள்ளது.

மார்க்சியம் மற்றும் போலோ பிரேரியின், 'ஒடுக்கு முறைக்கான ஆசிரியம்' முதலாம் சிந்தனை களை அடியொற்றி, விடுதலை உளவியல், விடுதலை அரங்கு, விடுதலை இறையியல், விடுதலை இலக்கியம், முதலியவை மேலெழுந்தன. அவற்றின் பின்புலத்தின் 'எதிர்க் கதையம்' என்பது ஒரு கருத்தாடல் வடிவமாக மேற்கிளம்பியது.

எதிர்கதைய அழகியல் ஆக்கம் நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டது. ஒடுக்குமுறைக்கு எதிரான கலை வடிவங்களின் நீட்சியோடு அதன் முக்கியத்துவம் மேலும் மீள வலியுறுத்தலுக்கு உள்ளானது.

கல்வி நிலையில் அது ஒரு பிரயோக வடிவமாகவும் எழுகை கொண்டது. அதாவது பாடசாலை மாணவருக்கும் கற்பித்தற் பொருளாக அது ஏற்றம் பெறும் நிலையை, ஒடுக்கு முறைக்கு எதிரான செயற்பாட்டாளர் முன்னெடுத்தனர். மாணவரின் அறிகை நிலையை வலுப்படுத்த அது துணைசெய்யும் என நம்பப் படுகின்றது.

சமூகத்தின் சமனற்ற வளர்ச்சியோடு இணைந்தாக ஒடுக்கு முறையும் மேலெழத் தொடங்கியது. பொருண்மிய பலமும், அதி காரமும் இணைந்த நிலையில் மேலோங்கி யோர், விளிம்பு நிலை மக்கள் மீது உழைப்புச் சுரண்டலோடு இணைந்த மேலாதிக்கக் கதைகள், கலைகள், ஒழுக்க விதிகள் சடங்குகள் வாயி லாக நிலைநாட்டத் தொடங்கினர்.

சமூக வரலாறு என்பது வர்க்கங்களின் வரலாறாகவே இருந்து வந்துள்ளது. அதன் பின் புலத்திலேதான் கதைகளும் கலையாக்கங்களும் நிகழ்ந்து வந்துள்ளன.

ஒடுக்குவோர் தமது அதிகாரத் திணிப்புக்கு கலை இலக்கியங்களை அழகியல் பூசிய கருத்தேற்ற வடிவங்களாக்கினர். அவர்களின் ஆக்கங்களில் காதலும், பாலியல் சார்ந்த கூறுகளும் பிரதான பரிமாணங்களாக அமைந்தன. அரசர்களும் வள்ளல்களுமே பொருளாக்கப்பட்டனர். 'சீவக சிந்தாமணி'யில் சீவகன் எட்டு மங்கையரை மணந்தான். என்பது உயர் குடியினரது அழகியற் சுவையை வெளிப்படுத்தியது. 'மண நூல்' என்றே சீவக சிந்தாமணி அடையாளப்படுத்தப்படுகின்றது. இறுதியில் அவன் துறவுபூண்டமை உயர் குடியினது வாழ்க்கையில் சமணத் துறவிகள் மேற் கொண்ட ஊடுநிகழ்த்துகையை (Inter vention) வெளிப்படுத்தும்.

மரபு நிலையில் எழுத்து வழியான இலக்கியங்கள் அரசர்களுக்கும் பிரபுக் களுக்குமுள்ள சுவைகளை அடியொற்றியே எழுதப்பட்டன. மேலாதிக்கத்தை வளர்க்கும் உளப்பாங்கு அவற்றில் உட்பொதியப்பட் டிருந்தது. அக்காலத்தில் எழுத்தறிவு என்பது உயர் குடியினருக்குரிய தனியுரிமையாக அமைந்தது. அடிநிலை மக்களுக்கு அது நிராகரிக்கப்பட்டிருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே பொதுமக்களுக்குரிய எழுத்தறிவு மெல்ல மெல்ல விரிவடையத் தொடங்கியது.

மேலோங்கிய பெரும் கதையத்தின் தர்க்க விசைகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்டோரின் எதிர்க்கதையம் மேலெழத் தொடங்கியது. அடிநிலை மாந்தர் வாய்மொழி வடிவில் எதிர்க்கதையங்களைப் புனையத் தொடங்கினர். எழுத்தறிவற்ற நிலையில் வாய்மொழி ஊடகமே அவர்களிடத்து மேலோங்கியிருந்தது. ஒடுக்கு வோரை 'கொடும்பாவி'யாக்கி கதைப்பாடல் புனைதலும் இடம்பெற்றன.

அரசர்கள் மற்றும் பிரபுக்களின் இயல்பு களையும் நடத்தைகளையும் கிண்டல் செய்து புனையப் பெற்ற எதிர்க்கதையங்கள் வாய் மொழி மரபிலே தோற்றம் பெற்றன.

பேசப்படாதவற்றைப் பேசுதல், நிராகரிக்கப் பட்டவற்றை விரித்துரைத்தல், புறக்கணிக்கப்பட்ட தமது அடையாளத்தை நிறுவிக் கொள்ளல், தமது உழைப்பின் மேன்மையை ஒடுக்கு வோருக்கு எடுத்துரைத்தல், முதலியவை எதிர்க்கதையத்தில் இடம் பெற்றன.

கருமை இன மக்கள் தம்மீது திணிக்கப்படும் மேலாதிக்க அழுத்தங்களை நிராகரித்துப் புனையும் எதிர்க் கதைவடிவங்கள் அவர்களிடத்து வினைப்பாடுகளை மேலெழச்செய்யும் வலிமை யான சாதனங்களாகவுள்ளன. தமது இனத்துக் குரிய அடையாளத்தை, வலிதாக்கிக் கொள் வதற்குரிய விசையாக அவை தொழிற்படு கின்றன.

மேலோங்கி அதிகாரம் செலுத்தும் கருத்து வினைப்பாடுகளைப் பலமிழக்கச் செய்தல் எதிர்க் கதையத்தின் சிறப்புப் பண்பாகக் கருதப்ப டுகின்றது.

காலனித்துவம், குடியேற்ற வாதம், இனம் மற்றும் மொழி மேலாதிக்கம் சமவுரிமை நிரா கரிப்பு, சிறுபான்மைத் தேசிய இனங்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தல், பாரபட்சம் காட்டுதல், முதலியவற்றைச் சாடுவதற்கும் மாற்று வழிமுறைகளை முன்னெடுப்பதற்கும் எதிர்க்கதையங்களின் பலம் மேலெழுதலைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

நவீன எதிர்க்கதைய உருவாக்கத்துக்குரிய உளவியற் பின்புலமாக அமைவது 'விடுதலை உளவியல்' இக்னாசியோ மாட்டின் பரோ (1942 -1989) விடுதலை உளவியல் உருவாக்கத்தில் முக்கியமான பங்கை வகித்தவர். பிரதான உளவியல் நீரோட்டம் சமூகத்தின் ஒடுக்கு முறைகளைக் கண்டறியாது, தனிமனித நடத்தைகளை விளக்க முயன்றுள்ளது என்பது அவரது கருத்து. அதேவேளை மார்க்சியப் பின்புலத்தில் வந்த உளவியலாளர் பரோவின் கருத்துக்கு வலிமை சேர்த்தனர்.

இக்னாசியோ மாட்டின், பரோ, போலோபி ரேரியின் சிந்தனைகளில் ஆழ வேரூன்றி நின்றார். அவரது உளவியல் சிந்தனைகளுள் 'மனச்சான்று எழுகை' (Conscientization) என்ற எண்ணக்கரு முதற்கண் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அந்தக்கருத்து வடிவத்தை அவர் போலோ பிரேரியிடமிருந்து பெற்றுக் கொண்டார். அதாவது, ஒடுக்குமுறை யின் சமூக அரசியல் கட்டுமானத்தின் பின்புலத்தை விளங்கி, ஒவ்வொருவரும் வினைப்படும் மனோநிலைக்கு உள்ளாதலை அந்தக் கருத்துவடிவம் புலப்படுத்தும். ஒடுக்கு முறையை ஒழிக்கும் செயற்பாடு, அவர்களிடமிருந்தே எழுச்சி கொள்ளல் வேண்டும் அவர்களுக்காக அல்ல அவர் களாலேயே என்பது எழு பொருளாயிற்று.

விடுதலை உளவியல் முன்மொழிந்த இன்னொரு முக்கியமான கருத்து வடிவம் 'நடப்பியல் உற்றறிகை' (Realismo -Critico). நடைமுறையில் உள்ள கோட்பாடுகளுள் எது விடுதலைக்கு வழிவகுக்கும் வலிமைகொண்டது என்பதைத் திறனாய்வு வழியாகத் தெரிந்து கொள்ளலை அக்கருத்தாக்கம் விளக்குகின்றது. ஒடுக்கு முறையின் அழுத்தங்கள் அவற்றை அழிப்பதற்குரிய கோட்டைப் பிறப்பித்தவண்ணம் இருக்கும் என அவர்கள் விளக்கினர்.

நடப்பியல் தொடர்பான ஆதிக்கக் கருத்தி யலை நீக்கம் செய்தலும், விடுதலை உளவியலில் முன்வைக்கப்படும் பிறிதொரு முன்மொழிவு. சமூக நடப்பியலை விளக்குவதில் வெளிப்படைத்தன்மை இருத்தல் வேண்டுமென மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

சமூக இருப்பின் வழியாகவும் சமூகத் தொடர்புகள் வழியாகவுமே தனிமனித உருவாக்கம் நிகழ்கிறது என்ற மார்க்சியக் கருத்தை விடுதலை உளவியல் மீள வலியுறுத்தி நிற்கின்றது. மனிதருக்குரிய உளப்பிரச்சனைகள் ஒடுக்கு முறையின் அழுத்தங்கள் காரண மாகவே தோற்றம் பெறுகின்றன என்ற விடுதலை உளவியலின் கருத்து எதிர்க்கதையாக் கங்களினால் மேலும் வலுவூட்டப்படுகின்றது.

பல்வேறு வடிவங்களில் மேலோங்கி நிற்கும் ஒடுக்கு முறையின் அழுத்தங்களில் இருந்து மனித மனத்தை விடுவிக்க கலை முயற்சியாக எதிர்க்கதையமும் விடுதலை அரங்கும் செயற்பட்டு வருகின்றன. அவை, மனித மனங்களை விடுவிப்பதுடன் மட்டும் நின்று விடாது, மனிதரைச் செயலூக்கம் மிக்கவர்களாக மாறச்செய்யும் விசையையும் ஊட்டுகின்றன.

கருமை இனத்தவர்களது எதிர்க்கதையங்களில் அந்த மக்களைத் தூண்டி எழச் செய்யும் வலிமை இருத்தல் ஒரு சிறப்புப் பண்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. விடுதலைப் போராளிகளின் எதிர்க்கதையங்களிலும், தீவிரப் பெண்ணியச் சிந்தனையுடன் தொடர்புடைய எழுத்தாளர்களின் எதிர்க்கதையங்களிலும், தூண்டி எழுந்து வினைப்படச் செய்யும் ஆக்க விசை உட்பொதிந்திருத்தலைக் காண முடியும்.

'எதிர்க்கதையம்' என்பது ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டவடிவங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. நவீன உலகில் கட்புலனாகா ஒடுக்குமுறை என்ற வடிவம் மேலோங்கி வருதலைக் குறிப்பிடவேண்டியுள்ளது. அதனைத் தகர்க்கும் பணியையும் எதிர்க்கதையம் முன்னெடுக்கின்றது.

பொருளாதார பலம்மிக்க பல்தேசிய நிறுவனங்கள் உலகம் தழுவிய பொருளாதார வலையமைப்பால் மறைமுகமான மேலாதிக்கத்தையும், நாடுகளில் தலையீடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. நாடுகளின் பொருண்மியத் தீர்மானங்களிலும் கல்விச் செயல் முறைகளிலும் அவை செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றால் விளிம்பு நிலையினரும் ஓரங்கட்டப்பட்டவர்களுமே பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அத்தகைய மேலாதிக்கத்தையும் மறைமுகமான ஒடுக்கு முறையையும் திறனாய்வு செய்யும் எதிர்க்கதையங்கள் புனையப்படுகின்றன.

ஒடுக்க முறைகள் பல வடிவங்களில் மேலெழும்பும் பொழுது, அவற்றை எதிர் கொள்வதற்குரிய வலிமையான கருத்தியலைத் தேடுதலும், கலையாக்கங்கள் மேலெழுதலும் உலக வரலாற்றில் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

மேலாதிக்கம் பற்றிய விமர்சனத்தை உள்ளடக்கி சமூக வினைப்பாடுகளைத் தூண்டும் வலிமையான அழகியல் வடிவமாக விளங்குவதுதான், 'எதிர்க்கதையம்'

அதேவேளை அதற்குச் சுருங்கியவரை விலக்கணமும் கொடுக்கப்படுகின்றது. நிலைபேறு கொண்ட கதையங்கள் மற்றும் கதைகூறும் முறைமை ஆகியவற்றுக்கு மாறுபாடான வகையில் இயக்கப்படுவது 'எதிர்க்கதையம்' என்ற வரைவிலக்கணமும் உண்டு. அங்கு உருவப் பிரச்சினையே முதன்மைப் படுத்தப் படுகின்றது. எடுத்துக்காட்டாக, 'எதிர் நாவல்' எதிர்க்கதையமாகக் குறிப்பிடப்படுகின்றது.

பின்நவீனத்துவவாதிகள் பெருங்கதையாடலுக்கு (Grandnarratives) எதிரானது 'எதிர்க் கதையம்' என்று அடையாளப் படுத்துகின்றனர்

அவரவர் நோக்கில் எதிர்க்கதையம் பற்றிய பொருள் கோடல், மாறுபட்டு நீட்சி கொள்கின்றது.

❍❍❍

# தனிமைச்சிறையும் – சுமையும்

– மொழிவரதன் –

தனிமைச் சிறை என்னைப் பிடித்து
தனக்குள் ஆட்கொள்கின்ற
வேளைகளிலெல்லாம் உனது ஏக்கம்
எனும் மேகம் சூழ்ந்தவதனம்
என்னுள் தோன்றி எனைக்
கொல்லாமலில்லை
கண்ணுறங்க மறுக்கும் காம இரவுகளில்
கவிதை கண்களில் கற்பனையில்
என்னையறியாது நானுன்னை
எண்ணி ஏங்குகின்றேன்
என்னைப் போலவேநீயும் இதோ
இந்த இரவிலும் இரவுப் பூச்சி
எழுப்பும் இதயநாதத்தில்
எனது இதயத்துடிப்பை
உணர்ந்துநெகிழ்வாய் என்பதை
உணர்வேன் கண்ணே!
எனது குடும்ப உறவுகளை சுமக்கும்
கடமைவீரன் நானன்றோ?
சுமக்கமுடியா சுமையை சிரமத்துடன்
சுமந்துசெல்லும் ஓர் சாதாரண
கூலிகளுள் நானுமொருவன்
எனது வாழ்வில் நீ இணைந்தால்
சுமை தூக்கிஆவாயா
அல்லது இன்னும் ஓர் சுமை ஆவாயா?

ஏ.ஏ.ஹேச்.கே.கோரி



சிறுகதை



# சுகமானதொரு சுமை

நூற்றியோராவது முறையாக அந்தக் கவிதையை வாசித்து அவள் நெடுமூச்செறிந்து கொண்டிருந்தபோது அந்த அறைக்குள்ளே பிரவேசித்த தோழி, “இதை விட்டால் உனக்கு வேற வேலையே இல்லை தலைவி, இதுவரைக்கும் எத்தனை தடவை வாசிச்சி ருப்பினம் உன்ர தலைவனுடைய அந்தக் காதல் கவிதையை?” என்று சிரித்தாள்.

“தலைவி தலைவியண்டு பகிடி பண்ணாதையடி தோழி”, என்று செல்லமாய்க் கோபித்துக் கொண்டாள் இவள்.

“என்ரை பெயர் உனக்கு மறந்தா போச்சுது?”

“பெயரொண்டும் மறக்கேல்லை தலைவி, நான் உனக்குத் தோழியண்டால் நீ எனக்குத் தலைவிதானே! சரி, அந்தக் கவிதைக் கடதாசியைக் கொஞ்சம் கொடேன் ஒருக்கா நானும் வாசிச்சிப் பாக்கிறன். சும்மா கொடு தலைவி, உன்ரை மச்சாண்ட கவிதையை நான் தொட்டால் ஒண்டும் தீட்டுப்பட்டுப் போகாது.”

அவளிடமிருந்து அந்தக் காகிதத்தைக் கைப்பற்றி மனதுக்குள் வாசித்தவள், கவிதையின் ஒரு பகுதியை மட்டும் உரக்க வாசித்தாள்:

**“யாழ்ப்பாண நூலகத்தில்**
**அருகருகே அமர்ந்திருந்தோம்**
**பருத்தித்துறைக் கடற்கரையில்**
**நிலவொளியில் தனித்திருந்தோம்**
**திரையரங்கின் இருட்டினிலே**
**நெருங்கியிருந்த இறுக்கத்திலும்**
**மங்கையுந்தன் பொன்னுடலை**
**மனதாலும் தீண்டவில்லை.”**

கவிதை வரிகளைத் தோழி உரக்க வாசிக்க, இமைகளை மூடி, அந்தத் தனிமையையும் நெருக்கத்தையும் நம்முடைய கதாநாயகி மீண்டுமொருமுறை வாழ்ந்து கொண்டிருந்தபோது, தோழியுடைய விமர்சனம் அந்த இனிமையைக் குலைத்தது.

“ஆமா, பெரிய உலக உத்தமர் இவரு! மங்கையுந்தன் பொன்னுடலை மனதாலும் தீண்டவில்லையாம்! ஏன், தீண்டினா என்ன, என்ரை தலைவி மறுப்பா சொல்லப்ப போகினம்? அப்பிடித் தீண்டியிருந்தா, தலைவி, இப்ப உன்னை இப்பிடித் தனியாத் தவிக்க விட்டிட்டு சொல்லாம கொள்ளாமக் கண்காணாத சீமைக்கிக் காணாமப் போயிருக்க மாட்டினம், என்ன?”

ஆமாம். அவன் காணாமல்தான் போய்விட்டான். கண் காணாத சீமைக்குத்தான் போய்விட்டான். இவளைத் தனியாய்த் தவிக்கவிட்டுத்தான் போய்விட்டான். இலங்கைத் தீவுக்குள்ளே அவன் இருந்திருந்தால் இவள் எப்படியாவது, எப்பாடு பட்டாவது வலைவீசிப் பிடித்திருப்பாள். ஆனால் அவன் ஏதோவொரு வெளிநாட்டுக்குத்தான் போய்விட்டான் என்பது உறுதியாய்த் தெரிந்தது. எந்த நாடு என்பதுதான் உறுதியாய்த் தெரியவில்லை.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து போய், அவுஸ்திரேலியா, டென்மார்க், கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளில் குடியேறியிருக்கிற யாழ்ப்பாணத்து உறவுகளைத் தேடிப்பிடித்துத் தொடர்பு கொண்டு பார்த்ததில், சாதகமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. மை போட்டுப் பார்க்கலாம் என்று முன்வைக்கப்பட்ட கருத்தில், இந்த இருவருக்குமே உடன்பாடில்லை. நல்லூர் முருகன் கோவிலில் பூப்போட்டுப் பார்த்ததில், தமிழ்நாடு என்று வந்ததைப் பார்க்க இந்த இருவருக்கும் வலுசந்தோசமாய் இருந்தது.

தமிழ்நாடு என்று வராமல், கனடா என்றோ அவுஸ்திரேலியா என்றோ, அல்லது வேறு ஐரோப்பிய நாடோ வந்திருந்தால் இவர்கள்

திக்குமுக்காடிப் போயிருப்பார்கள். அவனைத் தேடி அந்த நாடுகளுக்கெல்லாம் இவர்கள் பயணப்படுவதென்பது சாத்தியமேயில்லை. தமிழ்நாட்டில் ஓர் அகதி முகாமில் இருப்பான். ஆனால் தமிழ்நாட்டில், 112 அகதி முகாம்கள் இருக்கின்றன என்று அறிய வந்தபோது கொஞ்சம் தடுமாறினார்கள். இவர்களுக்குத் தெரிந்த சில தமிழ்நாட்டு முகாம்களான மண்டபம், மதுரை, திருச்சி, சென்னை என்று பூப்போட்டுப் பார்த்தபோது, சென்னை என்று வந்தது.

"கிளம்பு தலைவி, சென்னை கைக்கெட்டுகிற தொலைவுதான், கெதியாய்க் கிளம்பு," என்று தோழி உற்சாகமடைய, அந்த உற்சாகத்தைப் பிரதிபலிக்காமல் தலைவி சோகமயமானாள்.

"சரியாய்த்தான் சொன்னனி, நீ, தோழி, சென்னை கைக்கெட்டுகிற தொலைவுதான். காலுக்கெட்டுகிற தொலைவு இல்லை. காலுக்கெட்டுகிற தொலைவு எண்டால் நான் என்ரை ஒரேயொரு காலைக் கொண்டு அங்காலைக் காலூண்ட ஏலாது." என்று தன்னுடைய சோகத்துக்கு சொல் வடிவம் தந்த தலைவி, "என்ரை மச்சான் நாட்டிலில்லாத நேரம் நான் நொண்டியாய்ப் போயிட்டேனேடீ தோழீ" என்று உடைந்துபோய் அழுதாள்.

ஊன்றுகோல்களின் உறுதுணையோடு நின்றுகொண்டிருந்தவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டாள் தோழி.

"இஞ்ச பார், என்னை வைச்சுக்கொண்டு இப்பிடியல்லாம் விசர்த்தனமாய்க் கதைக்கக் கூடாதெண்டு எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கிறன்! கண்ணைத் தொடச்சிக் கொள். நாளைக்கே கொழும்புக்குப் போவோம். அங்கை இண்டியன் எம்பஸியிலை விஸாவுக்கு மனுப்போடுவோம். காலையில மனுப்போட்டால் விஸா பின்னேரம் கிடைச்சிடுமெண்டுதான் சொன்னனாங்கள். பேந்து, பிளேன் ரிக்கற் இங்கை யாழ்ப்பாணத்திலையே போடலா மெண்டு கதைச்சவை."

"உது எல்லாம் சரிதான் தோழி, மச்சான் இங்கை இருக்கேக்குள்ளை நான் ரெண்டு காலோடு இருந்தனான். எனக்குக் கால் போன கதை மச்சானுக்குத் தெரியாது. கால் இல்லாத காதலிமேலே மச்சானுக்கு இன்னும் காதல் இருக்குமே? காதலுக்குக் கண் இல்லை எண்டுதான் சொன்னவங்கள். காதலுக்குக் கால் இல்லை எண்டு ஆருமே சொல்லேல்லை."

"தப்பு தலைவி. காதலுக்குக் கண் இல்லை எண்டதே பிழை. காதலுக்குக் கை கால்தான் இல்லை. காதலுக்கு இருக்கிறது கண் ஒண்டுதான். அண்ணலும் நோக்கி, அவளும் நோக்கித்தானே அங்கை அந்த தெய்வீகக் காதல் மலர்ந்தது! நாங்கள் சென்னைக்குப் போவோம், உன்ரை மச்சானைக் கண்டுபிடிப்போம். கண்ணைத் துடைச்சுக்கொள் தலைவி, சென்னையிலை உன்ரை கண்களுக்கு நெடுக வேலையிருக்கு!"

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் செக் இன் கவுன்ற்றரில் ஒரு சிரமம் இவர்களுக்காகக் காத்திருந்தது. பெட்டிகள் கொஞ்சம் அதிகமாயிருந்தன. கனமாயும். இவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட முப்பது முப்பது கிலோவுக்கு மேலாக எட்டு கிலோ அதிகமாயிருப்பதாகவும், அதற்கு மேலதிகக் கட்டணமாக இலங்கை ரூபாய் ஒன்பதாயிரம் கட்டவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இவர்கள் இரண்டு பேருடைய உடமைகளையன்றி, காதலனைப் பார்க்க வெறுங்கையோடு போகக்கூடாது என்று, காதல் கவிஞனுடைய சேமிப்பிலிருந்த புத்தகங்களை இரண்டு அட்டைப் பெட்டிகளில் அடைத்துக் கொண்டு வந்திருந்ததுதான் அதிகப்படியான எட்டு கிலோ. புத்தகப் பெட்டிகளை இங்கேயே விட்டுப்போக வேண்டும், அல்லது ஒன்பதாயிரம் ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என்கிற இக்கட்டிலிருந்தபோது, 'ஏயர்ப்போட் மேனேஜர்' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்த அறை தலைவிக்கு ஒரு நம்பிக்கை தந்தது. விமான நிலைய மேலாளரிடம் ஒரு விண்ணப்பம் வைத்துப் பார்த்தாலென்ன?

ஊன்றுகோல்களில் ஊசலாடியபடி இளம் பெண்ணொருத்தி தன்னுடைய அறையை நெருங்கி வருவதை அவதானித்த மேலாளர், தன்னுடைய ஆசனத்திலிருந்து எழுந்து வந்து கண்ணாடிக்கதவைத் திறந்தார்.

"நான் உங்களுக்கு உதவி செய்யலாமா சகோதரி? என்ன வேண்டும், உள்ளே வாருங்கள், அமருங்கள்" என்று புன்னகையோடு ஆங்கிலத்தில் வரவேற்றவருடைய கனிவு இவளுக்கொரு நம்பிக்கையைத் தந்தது. அவருடைய சட்டைக்கு மேலாய் மார்புப் பகுதியில், **அப்துர் ரஹீம்** என்று பொறித்திருந்த அவருடைய பெயர், நம்பிக்கையை மேலும் மேம்படுத்தியது. சிங்களவரில்லை. முஸ்லிம்

மேலாளர். இவரிட்டை தமிழிலேயே கதைக்க லாம்; கதைத்தாள்.

"அட்டைப் பெட்டிகளை விட்டிட்டுப் போகேலாதே, ஸிஸ்டர்?"

"இல்லை சேர். என்ரை அவரோடை புஸ்தகங்கள் உள்ளே இருக்கு. அவருக்குக் கையளிக்கக் கொண்டு போறன்."

"கல்யாணம் முடிச்சிக் கனகாலமே?"

"இல்லை சேர். இனித்தான் கல்யாணம்."

"ஓ, வாழ்த்துக்கள் தங்கச்சி."

"நன்றி அண்ணை. எட்டு கிலோவுக்கு ஒம்பதாயிரம் ரூபா அதிகம் எண்டு படுகுது. அதைக் கொஞ்சம் கொறைக்க முடிஞ்சா நல்லம்."

"ஆனால், நான் வேறே மாதிரி யோசிக் கிறன் தங்கச்சி. நீங்கள் ஒருசதம்கூடக் கட்டாமல் விமானமேற முடியும். பிழையாய் நினையாதேயுங்கோ தங்கச்சி, நீங்கள் உடல் ஊனமுற்ற பயணி எண்டு, உங்களுக்கு பிஸினஸ் க்ளாஸிலை ஸீற் தர எனக்கு அதிகாரமிருக்கு. பிஸினஸ் க்ளாஸண்டா உங்களுக்கு நாப்பது கிலோ அனுமதி. எல்லாப் பெட்டிகளும் நீங்கள் கொண்டு போகலாம். சரி, இந்த ஸிஸ்டர்?"

"இது திலகா, திலோ. என்ரை தோழி, அண்ணை."

"தோழியெண்டால் ...."

"தோழியெண்டால், என்னுயிர்த் தோழி."

"ஆனால் உங்கட என்னுயிர்த் தோழி பிஸினஸ் க்ளாஸிலை உங்களோட வரேலாது."

"ஏனெண்டால் அவ என்னைப்போல ஊனமில்லை. ஊனத்துக்குத்தான் உங்கட அதிகாரம் செல்லும். பரவாயில்லை சேர், நாங்கள் ஒம்பதாயிரம் கட்டுவோம். எங்களாலை தனித்தனியாய் இருக்கேலாது."

"கோபிச்சுக் கொள்ளாதீங்க தங்கச்சி. கொஞ்சம் இருங்க, நான் கவுன்ற்றர் வரைக்கும் போய்ட்டு வாறன்."

கவுன்ற்றருக்குப் போய்த் திரும்பி வந்தவர் ஒரு சாதகமான பதிலோடு வந்தார்.

"ஒண்டும் பிரச்சனையில்லை தங்கச்சி, நீங்கள் ரெண்டு பேரும் சேந்தே போகலாம், பிஸினஸ் க்ளாஸிலை. நான் ஏற்பாடு பண்ணிட் டன்."

"ஓ, ரொம்ப நன்றி அண்ணை. அண்ணை, நான் உங்களின்ரை நாகரீகமில்லாமக் கதைச் சிட்டன் எண்டு திலோ திட்டுறவ. கொஞ்சம் நிதானமிழந்துட்டன். மன்னியுங்கோ அண்ணை."

"அல்லா, மன்னிக்க ஒண்டுமில்லை தங்கச்சி. உங்க மேலே எனக்கு வருத்தமொண்டுமே இல்லை. ஏனெண்டா, உங்களைப் போலவே எனக்கும் ஒரு தங்கச்சி உண்டு."

"என்னைப் போலவே, நொண்டியே?"

"ஓ.... இது, வந்து, நான் அதைச் சொல லேல்லை, உங்களைப் போலவே வடிவா, உங்களைப் போலவே கல்யாண வயசிலை."

"உங்கட தங்கச்சிக்கி எங்கட சலாம் சொல்லுங்கள் அண்ணை. அப்ப நாங்கள் கவுன்ற்றருக்குப் போகலாம் தானே ?"

"ஒரு அஞ்சு நிமிசம். நானே உங்களைக் கூட்டிக்கொண்டு போறன். அதுக்குமுந்தி, திரும்பவும், நீங்கள் பிழையாய் நினைக்க மாட்டீங்களெண்டால் ஒரு கேள்வி. இந்தக் கால் ஊனமாகிப் போனது உள்நாட்டுப் போரிலையே, தங்கச்சி?"

"இல்லை அண்ணை. போரிலை செல்லடி பட்டு அப்பா அம்மா அண்ணன் எல்லாம் போயிட்டினம். அவையளோடை நானும் போயிருக்கலாம், போகேல்லை. இந்தக் கால் அப்ப போயிருந்தா, இந்தத் தாய் மண்ணுக்காக அவையள் உயிரைக் கொடுத்தினம், நான் காலைக் கொடுத்தன் எண்டாவது திருப்திப் பட்டிருக்கலாம். போன வருசம் ஒரு விபத்திலைதான் இந்தக் கால் போச்சுது. இந்தத் திலகா, என்னுயிர்த் தோழி இல்லாமல் நான் இப்ப எங்கையும் வெளிக்கிட ஏலாது."

"திலகாவோட பேரைச் சொன்னனீங்கள், உங்கட பேரை நீங்கள் சொல்லவேயில்லை, தங்கச்சி."

"சரோஜினி."

"வடிவான பேர். சரோஜினி எண்டு ஒரு கவிஞை இந்தியாவிலை இருந்தவ. சரோஜினி எண்டு ஒரு பின்னணிப் பாடகியும் உண்டு"

"தெரியும் அண்ணை, ஆனால் நான் அந்த சரோஜினி இல்லை. சரோஜினியெண்டு ஒரு மேயர் யாழ்ப்பாணத்திலை இருந்தவ."

"ஓமப்பா. அவவை சுட்டுக் கொண்டு போட்டினம்"

"கொண்டு போட்டினம். மே பதினேழு, 1998. அண்டைக்குத்தான் நான் பிறந்தன். ஆகையாலே எனக்கு சரோஜினி எண்டு பேர் வைச்சிட்டினம்."

"எப்பிடியோ தங்கச்சி, இண்டைக்கி திலகாவையும் சரோஜினியையும் சந்திச்சதிலை எனக்கு வலுசந்தோம். வாங்கோ, கவுன்ற் றருக்குப் போவோம்." கவுன்ற்றரில் செக் இன் முடிந்து, அந்த இஸ்லாமிய அண்ணன் இந்த சைவ சகோதரிகள் இருவருக்கும் விடை கொடுத்து அனுப்பிவைத்தபோது இவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை, திலகாவுடைய பிஸினஸ் வகுப்பு டிக்கட்டுக்கான மேலதிகத் தொகையை அவர் தன்னுடைய கையிலிருந்து செலுத்தியிருக்கிறாரென்பது. விமானத்துக்குள்ளே, பக்கத்து ஆசனத்தில், கண்மூடி சரிந்திருந்த திலகாவுக்குத் தெரியாமல் சரோஜினி, கைப்பையைத் திறந்து அந்தக் காதல் கவிதையை எடுத்து வாசித்தாள், நூற்றியிரண்டாவது முறையாக.

**.... மான் விழியால் மயக்கியென்னை**
**வான்வெளியில் மிதக்கவிட்ட**
**தேன்மொழியாள் நீ எனக்கு**
**சிநேகிதியும் காதலியும் ....**

சிநேகிதியும் இவள்தானாம், காதலியும் இவளே தானாம். காலொண்டு இல்லாத காதலி. காதலுக்குக் கால் முக்கியமில்லையாம், கண்தான் முக்கியமாம். திலகா சொன்னவள். கண்களுக்கு நெடுக வேலையிருக்கிறது என்றும் திலகா சொன்னவள். பாவம், அந்தக் கண்களுக்கு இப்போது கொஞ்சம் ஓய்வு கொடுப்போம் என்று, கண்களை மூடி ஆசனத்தில் சரிந்தாள்.

சென்னை விமான நிலையத்தில், இலங்கை அகதி முகாமுக்கு விமான நிலைய வாடகைக் காரில் இரண்டாயிரம் ரூபாய் ஆகும் என்று இவர்களைக் கலவரப் படுத்தினார்கள். இந்திய ரூபாய் இரண்டாயிரம் என்றால், இலங்கை சல்லிக்கு ஐயாயிரத்துக்கும் மேலே! வேண்டவே வேண்டாம் என்றாள் திலகா. குளிரூட்டப்பட்ட பிரதேசத்திலிருந்து வெளியே வந்தால் மலிவாய் டாக்ஸி கிடைக்கும்.

"இடம் கூட எங்களுக்கு சரியாய்த் தெரியாது. தைரியமாய் வா. நல்ல கார்ச் சாரதியொருத்தர் கிடைப்பினம். கதிர்காமர் எங்களைக் கைவிடவே மாட்டினம்."

திலகா சொல்லி வாயை மூடும்முன் எதிரே ஓர் ஆண்குரல் கேட்டது.

"அம்மா, சிறிலங்கன் ஃப்ளைற்றிலை வந்தனீங்களே? நீங்கள் யாழ்ப்பாணமே?"

"ஓமண்ணை, நாங்கள் யாழ்ப்பாணம்தான்."

**நீங்கள் பிழையாய் நினைக்க மாட்டீங்களெண்டால் ஒரு கேள்வி. இந்தக் கால் ஊனமாகிப் போனது உள்நாட்டுப் போரிலையே, தங்கச்சி?"**

**"இல்லை அண்ணை. போரிலை செல்லடி பட்டு அப்பா அம்மா அண்ணன் எல்லாம் போயிட்டினம். அவையளோடை நானும் போயிருக்கலாம், போகேல்லை. இந்தக் கால் அப்ப போயிருந்தா, இந்தத் தாய் மண்ணுக்காக அவையள் உயிரைக் கொடுத்தினம், நான் காலைக் கொடுத்தன் எண்டாவது திருப்திப் பட்டிருக்கலாம். போன வருசம் ஒரு விபத்திலைதான் இந்தக் கால் போச்சுது. இந்தத் திலகா, என்னுயிர்த் தோழி இல்லாமல் நான் இப்ப எங்கையும் வெளிக்கிட ஏலாது."**

"நான் வவுனியா அம்மா, எங்கை போக வேணும் ? வண்டியிலை ஏறுங்கோ எங்கையெண்டாலும் நான் கொண்டு போய் விடுறன்"

"இலங்கை அகதி முகாமுக்குத்தான் போக வேணும் அண்ணை, கனதூரமே?"

"தூரம்தான். புழல் ஜெயில் தாண்டி, காவாங்கரைக்கிப் போக வேணும். சரி அதுக்கென்ன, நீங்கள் ஏறுங்கோ, நான் கொண்டுபோறன்."

"வந்து, அண்ணை, சல்லி எவ்வளவு எடுப்பீங்கள் ?"

"அதை விடுமன் தங்கச்சி, அந்த ஊண்டு கோல் ரெண்டையும் இப்பிடிக் கொடுங்கோ நான் மேலே கேரியரிலை வைக்கிறன்."

வாடகைக் கார் அமைதியாய் விரைந்து கொண்டிருந்தபோது, திலகா பேச்சுக் கொடுத்தாள் கார்ச்சாரதியிடம்.

"அண்ணை, நீங்கள் இந்தியா வந்து கனகாலமே?"

"ஓம் தங்கச்சி, மண்டபம் முகாமிலை நிண்டன். இப்ப மெட்ராஸுக்கு வந்து மூண்டு வரும். இங்கை முகாமிலை இல்லை, வெளியாலைதான் நிக்கிறன். உங்களின்ரை சனம் இங்கை முகாமிலையே?"

“சனம் இல்லை அண்ணை, ஒரேயொரு ஆள்தான். இவவுடைய மனிசன்.”

“கல்யாணம் கட்டினவரே?”

“கல்யாணம் இனிதான், அண்ணை.”

“ஓ, வாழ்த்துக்கள் தங்கச்சி”

“நன்றி அண்ணை.”

“இது .... தங்கச்சிக்கிக் கால் எப்பிடி .... ?”

“அது ஒரு ஆக்ஸிடென்ற் அண்ணை. ஒரு வருஷம் ஆச்சு கஷ்டம்தான் அண்ணை.”

“கஷ்டமேயில்லை தங்கச்சி. சின்னப் பின்னடைவுதான் இது. தன்னம்பிக்கையாலும் மனவுறுதியாலும் ஜெயிக்கலாம். சுதா சந்திரன் தெரியுந்தானே? அவவும் ஒரு விபத்திலை ஒரு காலைக் கொடுத்தவ. பேந்து, பரத நாட்டி யத்திலை சிகரம் தொட்டவ.”

கார்ச் சாரதியுடைய உற்சாக வசனங்கள் சரோஜினிக்குப் புத்துணர்ச்சியையும் புதுத் தெம்பையும் அளித்தன.

புழல் காவாங்கரை இலங்கை அகதிகள் முகாமின் முகப்பில் வாகனம் நின்றது. வாயிலை அடுத்திருந்த ஐயப்பன் கோவிலடியில் இவர்களுடைய பொருட்களை இறக்கி வைத்த கார்ச் சாரதியிடம், “அண்ணை எவ்வளவு, சொல்லுங்கோ” என்று திலகா கேட்டதற்கு, “ஒண்டுமே வேண்டாம் தங்கச்சி” என்று சிரித்தான் அந்த வவுனியா இளைஞன்.

“என்ரை தாய் மண்ணிலையிருந்து கஷ்டப்பட்டு வந்து சேந்திருக்கிற யாழ்ப்பாணத்துத் தங்கச்சிமாருக்கு இந்த வவுனியா அண்ணை இந்தச் சின்ன உதவிகூடச் செய்யக் கூடாதே?”

“ஆனால், அண்ணை, ஒரு ஐநூறு ரூபாயாவது நீங்கள் எடுத்தால்தான் எங்களுக்கு சந்தோசம்” என்று ஓர் ஐநூறு ரூபாய்த்தாளை அவனை நோக்கி நீட்டிய சரோஜினியை அவன் மறுத்தான்.

“எனக்கு எது சந்தோஷம் எண்டு தெரியுமே தங்கச்சி? உங்கட கல்யாணத்துக்கு வந்து உங்களை நேரில் வாழ்த்த வேணும், அதுதான் எனக்கு சந்தோம். இந்தக் கார்டிலை என்ரை பேர், விலாசம் இருக்கு, அழைப்பு அனுப்புங்கோ, என்ன?” என்று அவன் நீட்டிய அட்டையைப் பனித்த விழிகளோடு பெற்றுக் கொண்டாள் சரோஜினி.

அவன் கையளித்த அட்டையில் அவனுடைய பெயர், ‘கதிர்காமர்’ என்று இருந்தது.

ஐயப்பன் கோவிலுக்கு முன்னால் ஒரு கதிரையில் அமர்ந்தபடி இவர்களுடைய வருகையை அவதானித்துக்கொண்டிருந்த பெரியவர், கதிரையிலிருந்து எழுந்துகொண்டு, “பிள்ளையள், ஈழத்திலையிருந்து வர்றீங்களே?” என்று வரவேற்றார்.

“இப்பத்தான் நீங்கள் ப்ளேன் புடிச்சி வருகினம். நீங்களெல்லாம் பிறக்குமுந்தியே நான் கள்ளத்தோணியிலை வெளிக்கிட்டு இங்காலை வந்து சேர்ந்திட்டன். கடவுச் சீட்டு, விஸா ஒண்டுமே கிடையாது. இந்த முகாமிலை மூத்த குடிமகன்” என்று அவர் சுய அறிமுகத்தை முடித்துவிட்டு, “இங்கை யாரைப் பார்க்க வேணும் பிள்ளை?” என்று கேட்க, இவர்கள் இரண்டு பேரும் ஒருசேர அவனுடைய பெயரை உச்சரித்தார்கள்.

“ஓ, அந்தப் பெடியனே? நீங்கள் வருவினமெண்டு சொல்லேல்லையே!”

“மச்சானுக்குத் தெரியாது ஐயா. நாங்கள் தொடர்பே இல்லாமல்தான் இருந்தம்.”

“மச்சானே?”

“மச்சான்தான். எனக்கு இல்லை, இவவுக்குத் தான்” என்று திலகா சரோஜினியுடைய கன்னத்தை நிமிண்டி, அவளுடைய முகத்தில் நாணத்தை வரவழைத்தாள்.

“பெடியன் வேலைக்கிப் போயிருக்கிறவன், மகள். இங்காலை பக்கத்திலைதான். ஃபோனிலை கூப்புடறன். நீங்கள் கதிரையிலை இருங்கோ பிள்ளையள்”

இவர்களுக்காக இரண்டு நாற்காலிகளை இழுத்துப் போட்ட பெரியவர், கைபேசியில் அவனோடு கதைத்து விஷயத்தைச் சொல்லி விட்டு இவர்களை நோக்கிப் புன்னகைத்தார்.

“உவன் வந்துகொண்டே இருக்கிறவன், அம்மா.”

“ஐயா, மச்சான் என்ன வேலை செய்து கொண்டிருக்கினம் ஐயா?”

“வேறென்ன வேலை மகள், நான் செஞ்ச அதே வேலைதான். கூலிவேலை. மூட்டை சுமக்கிற வேலை. இங்காலை பாரிய மீன் சந்தையொண்டு இருக்குது. மூட்டை சுமக்கிற வேலை இல்லையெண்டால் மீன் கூடை சுமக்கிற வேலை.”

“மூட்டையும் மீன் கூடையும் சுமக்கிற வேலையே!”

“அதிலொண்டும் கேவலமில்லை மகள், கனத்தை சுமந்து சுமந்து எங்களின்ரை

உடம்பெல்லாம் முறுக்கேறிப் போய்க் கிடக்குது. மனசும்தான். உவன் சுறுசுறுப்பான பெடியன். நிச்சயம் மேலுக்கு வருவான்.”

“வரட்டும் ஐயா, வரட்டும்.”

வந்தான்.

முகமெல்லாம் மலர்ச்சியோடும், உள்ள மெல்லாம் பூரிப்போடும் வந்தவன், அவனைக் கண்டு எழுந்து நின்ற சரோஜினியுடைய ஊன்றுகோல் கோலத்தைக் கண்டு நிலை குலைந்தான்.

“சரோ, என்ன இது, இது எப்பிடி சரோ?” என்று கண்கலங்கி நின்றவனை ஊன்றுகோல்களோடு நெருங்கிய சரோஜினி, ஊன்றுகோல்களைத் திலோவிடம் ஒப்படைத்துவிட்டு, பெரியவர் பார்த்திருப்பதையும் பொருட்படுத்தாமல் அவனுடைய மார்பில் சாய்ந்தாள்.

“காதலுக்குக் கால் முக்கியமில்லை மச்சான். காலமெல்லாம் நீங்கள் என்னைத் தூக்கிச் சுமப்பீங்களெண்டால் எனக்குக் காலெதுக்கு மச்சான். நீங்கள் என்னைத் தூக்கிச் சுமப்பியள் தானே ?”

“சுமப்பன் சரோ. காலமெல்லாம் உம்மைத் தூக்கிச் சுமப்பன். தினம் தினம் மூட்டைகளை சுமக்கிறவன் என்ரை சரோஜினியைத் தூக்கிச் சுமக்க மாட்டனே!”

அவனோடு இணைந்தபடி சரோஜினி அவனுடைய காதில் கிசுகிசுத்தாள் :

“அதைத் திரும்பவும் சொல்லுங்கள் மச்சான், அதை ஒரு கவிதையாய்ச் சொல்லுங்கள் மச்சான்.”

அவளுடைய மச்சான் அவளை ஆதரவாய் அணைத்தபடி அவளுடைய செவிகளில் ஆசையாய்க் கிசுகிசுத்தான்.

காதலாய்க் கிசுகிசுத்தான்.

கவிதையாய்க் கிசுகிசுத்தான் :

**“தினம் தினம் மீனைச் சுமக்கிறவன்**
**இனி இந்த மானைச் சுமக்க மாட்டேனா!”**

○○○

# நானும் ஒரு பறவையாகிறேன்

– நாச்சியாதீவு பர்வீன் –

முடக்கப்பட்ட சிறகை
முதற்தடவையாக
விரித்திருக்கிறேன்
இனி இந்தப்பறவை
எந்த வேடந்தாங்கலிலும்
தங்காது...

அடைக்கப்பட்ட
கூட்டிலிருந்து
விசாலமான காட்டை நோக்கி
பறந்து கொண்டிருக்கிறேன்

தடைவிதிக்கப்பட்டிருந்த
தனித்து பறத்தலுக்கு
விடை கொடுத்து
பறந்து கொண்டிருக்கிறேன்

காற்று வெளியெங்கிலும்
இடைவிடாத பறத்தலில்
பார்வைப் புலன்களால்
பருகிக்கொண்டே பறக்கிறேன்

அற்புதங்கள் நிறைந்த
இந்த பூமிபந்தில்
ரசிப்பதற்கு ஏராளம் இருப்பதை
அடைபட்டுக்கிடந்ததினால்
அறியாமலே இருந்திருக்கிறேன்

எழுச்சியிசை பாடும்
அருவிகளின் ஆர்ப்பாட்டம்
வசைபாடாத வாழ்க்கை
காட்டு மரங்களின் கரகோஷம்
கூட்டு வாழ்க்கையின் குதூகலம்
இத்தியாதி இத்தியாதி

இலைகளின் தாலாட்டில்
தலைவைத்து தூங்கும்
அன்றாடங்களை
அதிசயிக்கிறேன்

கானம்பாடி சுற்றிவரும்
காட்டின் வாழ்கை
தனிசுகம் தான்

கட்டிப்போட்டு
காவல் காக்கும்
காட்டம் நிறைந்த
வாழ்க்கை இனி இல்லை

கட்டுக்கடங்கா
வெட்டவெளியில்
கவிதை பாடி
நானும் ஒரு பறவையாகி
பறக்கப்போகிறேன்.

# சிங்கள பௌத்தம் மேல் ஒரு துளைப் பார்வை



கனகசபை
தேவகடாட்சம்

நேரிய அறவழிகளில் செயற்படுவது முட்டாள் தனமாகவும் பயந்த செயலாகவும், கொடூரத்தை வீரமாகவும் கருதிக் கொள்ளும் கருத்துக்களை மக்கள் மத்தியில் இறைமொழி யெனக் கூறி மக்களை திசை திருப்பும் வழிகளை மதம் சார்ந்த புனித நூல்களின் ஏதோ ஒரு மூலையில் கருவாக தொக்கி நிற்பதைக் காணலாம். இதன் அடிப்படையில் சகல மதங்களும் ஒரு குடையின் கீழ் வருவதை அவதானிக்கலாம். இதுவே இனங் களுக்கிடையே மேலோங்கி நிற்பதை இலங்கை யில் இலகுவாக அடையாளப்படுத்தக் கூடிய தாக உள்ளது.

உதாரணத்திற்கு,

அனுராதபுரியின் பாண்டிய அரசு தமிழ் அரச பரம்பரையினரையும், பௌத்த மதத்தை தழுவினராகவும் இருந்தனர் என்பது வெளிப்படுகிறது. அக்காலத்து கல்வெட்டுக்களில் தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாக இருந்தனர் என்பது அறிந்து கொள்ள முடிகிறது. புராதன கல்வெட்டுக்களில் இருந்து பௌத்த மடாலாயர்களுக்கும், ஆச்சிரமங்களுக்கும் தமிழ் ஆட்சியாளர்கள் வழங்கிய நன்கொடைகள் பற்றி வரலாற்று ஆசிரியரான C.W.நிக்கொலாஸ் கூறுகிறார். கதிர்காம கிரிவிகாரையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் 5ஆவது தமிழ் மன்னனாகிய தாதியன் பௌத்த விகாரைக்கு வழங்கிய நன்கொடை பற்றி பதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மன்னர்கள் சிங்கள மொழியில் ஓலைச் சுவடிகளை எழுதினார்கள். 'தமிழர் களைக் கொன்று குவித்து' (தெமழ மரா) என்னும் வசனம் மகாவம்சத்தில் இரண்டு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்து இனத்திற்கு எதிரானதல்ல.

சிங்கள மக்களுடனே சமித்துப் சமிபட்டுப் போன தமிழர்களும், தமிழருள் சமிபட்டுப் போன சிங்கள மக்களும், தமது பூர்வீக இனத்துப் பண்பாடுகளை மீளவும் புதுப்பிக்க முயலமாட்டார்கள். தேசியவாதம் உருவாவதற்கு மூலகாரணம் மொழி என்பது புரிகிறது. சமூக தடைக்கல்லாக மொழியே மூலகாரணம் என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

நாகவணக்கத்திற்கும் பௌத்தத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

கபிலவஸ்து அரசனால் அழிக்கப்பட்ட போது, சாக்கிய வீரர்களின் நினைவுச் சின்னங்களின் கீழ் ஒரு நாக வடிவம் இருந்தது. (1890ல் புதைபொருள் ஆய்வாளர்கள் நினைவுச் சின்னங்களை திறந்து பார்த்த போது நாகமடங்கிய பேழை ஒன்றினுள் தங்க நாகத்தின் மீது **மகாநாமன்** என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.)

கௌதம புத்தர் அரசைத் துறந்து வந்தவர். எனவே புத்தர் ஒரு நாக இனத்தைச் சேர்ந்தவர். இலங்கையின் புத்தமதம் தேவநம்பிய தீசன் காலத்தில் பரவியதென வரலாறு கூறுகிறது. இவனும் நாக இனமே. இவன் தம்பியின் பெயர் 'மகாநாகன்' இவன் சிவ நாக வழிபாட்டுக்காரனாக இருந்து பௌத்தனானவன்.

இலங்கையில் ஆரம்பத்தில் பௌத்தத்தை தழுவியவர்கள் நாகரும் இயக்கருமே. ஆனால் இரு பிரிவினரும் திராவிடர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அப்போது பூர்வீகக் குடிகள் யாராக இருக்க வேண்டும் என்ற கேள்விக்குப் பதில் வெளிக்கிறது.

விஜயன் வருமுன்னரே இலங்கை முழுவதும் தமிழரின் ஆட்சி இருந்தது. வடபகுதி தொடங்கி கதிர்காமம் வரை தெற்கு, மத்தி முழுவதுமென சைவமும் தமிழும் ஆட்சியில் இருந்தது. அக்கால கட்டத்தில் சிங்களவர் என்ற இனம் இருக்கவேயில்லை. இருக்க வாய்ப்பும் இல்லை. வளவகங்கை பகுதி (தெற்கு கரை), கதிரவெளி (கிழக்கு), பொன்னரிப்பு (மாந்தை), மேற்குக் கரை வல்லிபுரம் வவுனியா (வடக்கு), அனுராதபுரம் போன்ற இடங்களில்

முதுமொழி தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. (அண்மையில் திருகோணமலை நகராட்சி மன்ற வளாகத்தினுள்ளும் தாழி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது). இவை திராவிட பண்பாட்டு சின்னங்களாகும்.

பாண்டுவாஸ் ரிவர, மாந்தை, கந்தப்பளை, புதுமட்டவாலி போன்ற தென்னிலங்கை பகுதி களில் தமிழ் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப் பட்டன. இவை ஒவ்வொன்றையும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பு கி.மு 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலும் இந்தியாவிலும் வழிபாட்டுக்கு ஐந்து சிவத்தலங்கள் இருந்தன என்பதை சிங்கள வரலாற்று அறிஞர் கலாநிதி பீரிஸ் உறுதிசெய்கின்றார். இதன்படி ஆதியில் இருந்தவர்கள் சைவரும் தமிழர்களும்தான் என்பதிலிருந்து பூர்வீக குடிகள் தமிழர்கள் என்பது உறுதியாகின்றது. இந்த உண்மைகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் பண்பும் வரலாற்று ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உள்ளதா என்பதுதான் கேள்வி. **சேர். வில்லியம் ஜோன் கூறுவார், இலங்கையிலுள்ள மொழி, மதம், எழுத்து ஆகியவை பல்லினத்தன்மை கொண்டிருந்ததாகவும் மிகப் பழைமை வாய்வர்களாக சைவசமய மக்களே வாழ்ந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்**. எனவே சிங்கள, பௌத்தம் இங்கு எடுபடவில்லை பூர்வீக குடிகள் சைவத் தமிழர்கள்.

மேலும் இப்போதும் தமிழ் சிங்கள மொழி பேசும் இனத்தவர் அன்றே இயக்கர் நாயக வழித்தோன்றல்கள் என 'பல்கலைகழக வரலாறு' என்ற நூலில் அறிஞர் S.பரணவிதான கூறியுள்ளதை ஆழமாக நோக்கின் தமிழர்களின் தொன்மையை விளக்க வாய்ப்புண்டு. கலிங்கம் என்பது அப்போது தமிழ் நாடு. கலிங்க மன்னர் யாவரும் தமிழர்களே.

## விஜயன்

கி.மு 4ஆம் நூற்றாண்டில் 70 ஆண்டுகள் ஆட்சி செய்த மன்னன் பண்டுகாபயன் ஒரு சிவ வழிபாட்டுக்காரனாக இருந்துள்ளதன் காரணமாக தன் மகனுக்கு மூத்த சிவன் எனப் பெயரிட்டுள்ளான். விஜயனும் தோழர்களும் சைவர்கள். அவர்கள் இங்கு வரும்போது இலங்கையில் சைவசமயமே இருந்தது என அறிஞர் C.பிரிட்டோ கூறுகிறார்.

இதனால் சிங்களவரின் மூதாதையர் விஜயன் அல்ல. அவன் கலிங்கத்தைச் சேர்ந்த சைவசமய திராவிடன் தமிழன். இறக்கும்வரை சைவனாகவே இருந்தான். விஜயன் இலங்கையைச் சேர்ந்த இரு மனைவிமார்களிலே ஒருவர் இலங்கையை சேர்ந்த குவேனி மற்றவர் மாந்தையை ஆண்ட நாககுல இளவரசி. இவருடன் 1000 நாகர் குடும்பங்கள் இருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. ஆகவே விஜயன் மூலம் சிங்கள இனம் தோன்றியதாகக் கூறுவது வரலாற்றுத் திரிபு.

கண்டி மன்னன் 2ஆம் இராஜசிங்கன் இறந்த பின்பு அடுத்த மன்னனாக எந்தச் சிங்களவரும் வரவில்லை. மக்கள் அதனை ஏற்கவில்லை. கண்ணுசாமி என்ற தமிழனை ஸ்ரீ விக்ரமசிங்கனாக மாற்றி அரசனாக்கினார்கள். கலிங்கத்திலிருந்து வந்த தமிழனாக கஜபாகு, விக்ரமபாகு, மானாபரணனாகன், புவனேகபாகு, பராக்கிரமபாகு ஆகியோர் மன்னர்கள் ஆனார்கள். தீசன் பரம்பரை நாக இனத்தைச் சார்ந்த அரச பரம்பரை. துட்டகைமுனு நாக பரம்பரையைச் சேர்ந்தவன். தேவநம்பியதீசன் ஒரு நாகன். தாய் மாந்தையை ஆண்ட ஒவியநாக பரம்பரையைச் சேர்ந்தவள். தேவநம்பியதீசன் காலத்தில் சிங்களம் வளர்ச்சி அடைந்ததாகக் கூறுவார்கள். 14ஆம் நூற்றாண்டளவில் சிங்கள மொழியில் 4000 தமிழ்மொழிச் சொற்கள் இருந்ததாக தாவூது அடிகள் கூறுகிறார். எனவே சிங்களவர்க்கும் சிங்களத்திற்கும் முந்திய இலங்கையின் தொன்மையான பூர்வீகக் குடிகள் தமிழர்களே! தேவநம்பியதீசன் பிறப்பால் தமிழன் பௌத்தத்தை ஏற்கும் முன் தமிழன். இவனின் தம்பி வழிப்பேரனே துட்டகைமுனு. இவரின் தந்தை நாகவழி காக்வண்ணதீசன் ஆவான். தாய் விகாரமகாதேவி. கலியாணி நகர் (களனி). நாக அரசன் களனிதீசனின் மகள். சிங்களக் கலப்பில்லாத நாக பரம்பரையைச் சேர்ந்தவன். உக்கிர சிங்கன் (கி.பி.795). விஜயனுக்கு இரத்த உறவுடையவன்.

இவன் மாருதபுரவீரவல்லியைத் திரு மணம் செய்தான். கீரிமலை, மாவிட்டபுரம், கதிரமலைகளில் குடியிருப்புக்களை அமர்த் தினான். அதிலிருந்து புரிவது யாதெனில் கலிங்கம் அப்போது தமிழ் நாடு. கலிங்க மன்னர்கள் தமிழர்களே. இலங்கையின் முதல் மன்னரும் இறுதி மன்னரும் நாகரே. இடையில் திராவிட மன்னர்கள் ஆண்டனர். இன்றைய சிங்கள மன்னர்களின் மூதாதையர் நாகர்களே. நாகர்களுக்கு இடையே ஏற்பட்ட

சிம்மாசன பிரச்சினையை தீர்ப்பதற்கும் மதமாற்றம் செய்வதற்கும் இயக்கர்களின் நல்வழிபடுத்தலுக்கும் புத்தமகான் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்ததாகக் கூறுப்படுகிறது.

நாகர்கள் உலகில் பல பாகங்களில் வாழ்ந்ததற்கு அடையாளமாக பாம்பு வழிபாடு இருந்துள்ளது.

கி.பி. 800களில் நாகபட்டன் அரசனாக இருந்தான். இந்தியாவானது மகதம், நாகதீபம், குப்தம் என மூன்று பிரிவுகளாக இருந்துள்ளது. தென்னிந்தியாவில் பெரும் பகுதி நாகதீபம் யோகாவதியைத் தலைநகராகக் கொண்டிருந்தது. காலப்போக்கில் பல பிரிவுகளாகப் பிரிந்து கடலால் பிரிக்கப்பட்ட பகுதியே இலங்கையாகும். அதுவே நாக தீபம் என்ற பெயர் நிலைத்தது.

எனவே இதை ஆராயும்போது ஓரளவு தெளிவிற்கு வரலாம். இலங்கையின் ஆதிகுடிகள் தமிழர்கள் என்பதில் எந்த ஐயமும் இருக்காது. இறுதியாக ஒன்றைமட்டும் கட்டுரையாளனால் வலியுறுத்த விரும்புவது

இலங்கையின் தொன்மையையும் வரலாற்றையும் யார் எடுத்துக் கூற விரும்பினாலும் இலங்கையில் ஆதிகுடிகளான தமிழர்கள் வரலாறு பற்றிக் கூறாமல் இலங்கையின் வரலாற்றின் ஆரம்பப் புள்ளியைக்கூட இடமுடியாது. தமிழரின் வரலாற்றை மறைக்க, சிதைக்க முடிந்தால் அதில் பாதிக்கப்படுவது இலங்கை வரலாறும் சிங்கள பௌத்த வரலாறும்தான் என்பதை உணர்ந்து கொண்டால் புனைவுகள் இன்றி உண்மை வரலாற்றை உலகிற்கு எடுத்துக் கூறி உலக வரைபடத்தில் புராதன தேசமாகப் பிரகாசித்து தெரியும். இல்லையெனில் பத்தோடு பதினொன்றாக உலகில் வெறும் குடியேற்ற காலனித்துவ நாடாகவே தெரியும். தொன்மையும், நாகரீகமும், பெருமையும் புகழும் வெளிப்பட்டு ஆதிகால நாகரீகம் செழித்த புராதன தேசமாக உலகில் தலை நிமிர்ந்து இலங்கை மிளிர வேண்டும் என்பது சிங்கள ஆய்வாளர்கள், அரசியல் வாதிகளின் கைகளிலே முழுமையாக உள்ளது என்பது யதார்த்தபூர்வ உண்மையாகும்.

தமிழர்களை தவிர்த்து வரலாறு படைக்க முனைவது நெருப்புக் கொள்ளியால் தலை சொறிவதற்கு ஒப்பானதாகும் என்பதே. எனவே தமிழரின் வரலாற்றை திரிபின்றி, பக்கச் சார்பின்றி சொல்லப்படுவதிலேதான் இலங்கையின் தொன்மை தங்கியுள்ளது என்ற யதார்த்த பூர்வ உண்மையை விளங்கிக் கொள்ளல் அவசியமாகிறது. இது சிங்களத்தின் கைகளிலேயே முழுமையாகவுள்ளது என்பது யதார்த்தபூர்வ உண்மை.

(கட்டுரையாளன் மேற்காட்டிய விடயங்களுக்கு பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன், N.K.S.திருச்செல்வம் போன்றோரின் கருத்துக்களை உசாத்துணையாகக் கொண்டதை நன்றியுடன் நினைவுகொள்ளத்தக்கது.)

❍❍❍

## ஒன்றுபட்டால் நமக்கு ஒளி

ஒன்றுபடுதலால் உண்டு வாழ்வு
அன்றேல் அண்டும் கேடான தாழ்வு
நன்றே கூட்டுமுயற்சியாலில்லை வீழ்வு
வென்றே பண்போடு நடத்துவோம் வாழ்வு

கங்கை நதியருகு கோதுமைக்கு அன்று
காவிரி வெற்றிலை மாறுகொண்டு
சிங்கமராட்டியர் கவிதைக்கு சேரத்துத் தந்தங்கள்
பரிசளித்த பண்டமாற்று நல்லொற்றுமை

நேர்மையாம் நல்ல ஆயுதம் கொண்டால்
ஆர்வமுடன் வாழ்வு நேராகச் செல்லும்
பார் போற்றக் கள்ளமற்ற சிந்தனையுண்டானால்
பேர் சொல்ல ஒன்றுமையாய் வாழலாம்

குழந்தை மனதிருந்து நஞ்சு விதைக்காது
முழங்கும் மதம் சாதி பேதமின்றி
வழங்கினால் சகோதரத்துவம்
சமுதாய ஒற்றுமையை
புழங்கும் ஒன்றுபடலால் இன்பம் பெருக்கலாம்.

தீர்மானங்களின் தெளிவு நல்ல தலைமைத்துவம்
சேர்த்தணைக்கும் உலகில் நன்மையாம்
ஒருமைப்பாட்டை
வார்த்திடுங்கள் ஒன்றாகி உலகினை. ஒரு
சார்பற்ற அன்பு இன்பக் கேணியாக

**பா வானதி வேதா.**
இலங்காதிலகம். டென்மார்க்.

# "The Plate of Gold"


by
**Leigh Hunt**
(1784-1859)



வாரண ஆசி விசுவன் கோயிலின்
தோரண வாயிலின் முன்றிலில் ஒருநாள்
ஊரார் வியப்புறப் பொற்கலம் ஒன்று
வானில் இருந்து வந்து விழுந்தது
விழுந்த அக்கலத்தில் இருந்ததோர் வாசகம் –
**"ஒப்பிலா ஒப்புர வாளனுக் கிக்கலம்**
**தப்பிலா வானோன் தந்திடும் பரிசில்."**
வாசகம் கண்டஅவ் வழிவழிப் பூசகர்
ஈசனின் வாசகம் இன்னதென் றுரைத்து
"ஈசனார் ஈந்தவிப் பொன்னியல் கலத்திளை
மாசிலா மனத்தராய் மனங்குழை உளத்தராய்
ஆசையாய் ஏற்றிட அருந்தக வுடையோர்
நேசமாய்த் தினமும் நண்பகல் நேரம்
வாசலில் நடுவரின் முன்னிலை வந்து
கூசலே இன்றித் தந்தக வுரைக்க வென்று
ஊரெலாம் உணர்ந்திடப் பறையறி வித்தனர்
ஒருமுழு தாண்டாய் ஊரெலாம் வாழும்
திருவரும் தவரும் அறிஞரும் ஆன்றோரும்
பெருவா ரியாகப் பெயர்ந்து நடுவர்முன்
உரைத்தனர் தாம்புரி அறச்செயல் அனைத்தையும்
சிரத்தையாய் அவற்றை நடுக்குழார் கேட்டனர்
உரைகலில் ஒவ்வொன்றையும் உரைத்துப் பார்த்தபின்
உளபொருள் எல்லாம் இல்லோர்க் கீந்த
பெருவளம் நிறைந்தொரு செல்வனே நாட்டில்
பெருமனம் கொண்ட கருணையோன் என்று
ஒருமன துடனே ஒப்பிய நடுவர்
இறைஅளி கலத்தை அவனிடம் கொடுத்ததும்
பெறுமதி அற்றதோர் ஈயமாய்த் தேய்ந்திடச்
சிறுமதி ஆகினோன் சிந்தினன் அதனைப்
பெறுமதி பெற்றது பொற்கலம் ஆயது.
அடுத்த ஆண்டிலும் அண்டினார் பலபேர்
தொடுத்தனர் தம்புகழ், கேட்டனர் நடுவர்
அடுத்தடுத் தவர்கள் மூவருக் கதனை
எடுத்தெடுத் தளித்தும் ஏற்றிலன் இறைவன்.
என்னதான் செய்வதென் றேங்கினர் நடுவர்
இன்னவை கோயிலில் நிகழ்வதை அறிந்த
தின்னலுக் கொன்றிலாத் தீனர்கள் வறிஞர்

# பொன்னின் கலம்

பன்னரும் பசியோர் உறுப்பறை ஆகியோர்
தந்திறம் நிறுவிப் பொற்கலம் பெற்றிட
முன்வரும் கோருநர் முன்னமர்ந் திருப்பார்க்கும்
இன்னலம் செய்ய முந்துவர் என்றெண்ணி
வந்தமர்ந் தனரேஅக் கோயிலின் முன்றிலில்
வந்தவவ் வறிஞர் வழுத்தினார் கடவுளை
இந்நிலை இரப்போர்க்கு இன்னிலை ஆனது
வந்தவக் கோருநர் வழங்கினர் ஆயினும்
எந்தொரு வரேனும் இரங்கிலர் கனிந்திலர்,
நொந்தஅவ் விரப்பரை நோக்கிலர் பரிந்திலர்,
இந்த மாதிரிக் கழிந்தது காலமும்.
இரண்டாம் ஆண்டும் இப்படிக் கழிந்தது
தெரிவிலே வென்றவர் தட்டதைத் தொட்டதும்
தெருவிலே வீழ்ந்தது ஈயமாய் மாறிற்று
அந்த நாளிலோர் அழுக்கிலாக் கிராமியன்
வந்தனன் கோயிலை வணங்கியே போகென
பந்தயப் போட்டியைப் பற்றியே தெரிந்திலான்
வந்தவன் கோயிலைச் சுற்றியே வருகையில்
நொந்தழும் தீனரைக் கண்டவன் கலங்கியே
வெந்தழு தழுங்கையில் கண்டனனே ஆங்கோர்
கண்களும் குருடாய்க் கால்களும் முடமாய்
அந்தரப் படுமோர் அநாதையை அப்பாவியை
கண்டதும் அவனை அண்டியே அணைந்து
மண்டியிட் டமர்ந்தவன் கைகளைப் பற்றிக்
கண்டெனச் சுவைத்திடும் கனிமொழி கூறினன்
தொண்டினன் அப்படித் தேற்றிய பின்னர்
கண்டிடக் கடவுளைக் கோயிலுள் நுழைந்தனன்
அண்டப் புளுகினர் ஆயிரம் பேரங்கு
விண்டுகொண் டிருந்தனர் வீம்புடன் வீரங்கள்
விண்தந்த தட்டினை ஏந்திய பூசகர்
கண்டதும் களங்கற்ற கிராமியக் கர்ணனை
அண்டிவா என்றவர் அவனை அழைக்கவே
தொண்டன் கிராமியன் துணுக்குடன் போயங்கு
மண்டியே பூசகர் அருகினில் நின்றதும்
புங்கவன் பூசகர் பொற்தட்டை அவன்கையில்
தங்கவே வைத்ததும் தகதக என்றது
பொங்கிப் பொழிந்தது வானொளி பலவாய்
அங்கதை ஆவலாய் நோக்கிய பூசகர்
**“இங்கின்று கண்டனம் ஈரத்தின் உருவினை**
**இங்கிது நின்னதே இறைவனின் பரிசிதே”**
என்றவர் கூறியே இதமுற வாழ்த்தினார்
நன்றிகள் நவின்றவன் நாயனார் ஆயினான்.



தமிழில்:
வழக்கறிஞர்
**செல்லத்தம்பி**
***சிறீக்கந்தராசா***



# தீந்தமிழ்ப் புலவர் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமிய் மௌலானா.



ஹிஸாம் ஹிஜாஸ்

இன்பத்தமிழ் வளர்த்த இஸ்லாமியப் புலவர்களுள் சங்கத்தமிழைக் காக்கும் நோக்குடன் நவீன காலத்திலும் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூற்களுக்கான விளக்கவுரைகளையும் இஸ்லாமிய மெய்ஞ்ஞான தத்துவங்களையும், நபிப்புகழ்க் காவியங்களையும் பழந்தமிழில் இயற்றி தேன் தமிழைக் காத்து வரும் 21ஆம் நூற்றாண்டின் தீந்தமிழ்ப் புலவர் தென்னிலங்கை ஜமாலிய்யா **அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமிய் மௌலானா** அவர்களைப் பற்றிய விபரங்களைப் பொதிந்து வரையப்பட்டதே இக்கட்டுரை.

ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா **(ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா)** அவர்கள் ஈழமணித் தீவதன் தென்கரை தன்னிலே விளங்கும் வெலிகாமம் எனும் ஊரில் வெலிப்பிட்டி எனும் கிராமத்தில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் குல வழியில் 34ஆம் தலைமுறை வாரிசாகவும், பிரபல சூ∴பி ஞானியும் ஆன்மீகத் தலைவருமான, **21000 சொற்கள் பொதிந்த முழுமையான அறபு – தமிழ் அகராதியை முதன் முதலில் தமிழ் உலகுக்கு தந்தவரும்**, பக்திப் பாமாலை, நளரிய்யா, யாவனிஉ, கலிமா விருட்சக் கனிந்த கனி போன்ற அறபு மற்றும் தமிழ் இலக்கிய நயத்துடன் கூடிய ஆன்மீகப் புதையல்களை வெளியாக்கிய அறிஞருமான **ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா** அவர்களுக்கும் அன்னை **ஸகர்வான் கண்ணே** அவர்களுக்கும் இளைய மகனாக 1937ஆம் வருடம் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி பிறந்தார்கள்.

## கல்வி

தனது ஆரம்பக் கல்வியை வெலிகமை அறபா வித்தியாலயத்தில் இருந்து துவங்கிய மௌலானா அவர்கள் S.S.C. வரை ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கற்றுத் தேர்ந்தார்கள். பின்னர் தமிழ்மீது அவர்களுக்கு இருந்த தனிப்பட்ட ஆர்வத்தினால் மீண்டும் S.S.C தேர்வை தமிழிலும் எழுதி தேறினார்கள். தமிழ் மீது அவர்களுக்கிருந்த ஆர்வ மிகுதியால் தமிழ் இலக்கண இலக்கியங்கள் மட்டுமல்லாது சங்ககால நூற்களை தாங்களாகவே கற்றுக் கொள்வதில் பேராசை கொண்டு அதில் மகத்தான வெற்றியும் பெற்றார்கள். இதனால் நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், காக்கை படினியம் முதலான பன்னூல்களையும் மிக எளிதில் கற்கும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

1953ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே தமிழ்க் கவிதைகள் எழுதத் தொடங்கிவிட்ட அவர்கள் தினகரன் பத்திரிகையில் அவ்வப்போது தங்கள் கவிதைகளை வெளியிட்டு வந்தார்கள். இவ்வாறு தங்களை வெளியுலகுக்கு அதிகம் அறிமுகம் செய்து கொள்ளாமல் இருந்தாலும் வெளிவந்த கவிதைகளின் உள்ளடக்கம் தமிழறிந்தவர்களால் வியந்து பேசப்பட்டது. S.S.C. தேர்வுக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் அகுரஸ்ஸ எனும் ஊரில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் காலி என்னும் ஊரில் அரசினர் **ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்** சேர்ந்து இரண்டு ஆண்டுகள் படித்து ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் பெற்றார்கள். இங்கு இவர்களுக்கு ஆசிரியராக இருந்தவர் **வித்துவான் பசுபதி கணபதி ஆவர்கள்**. இவர்களின் சொந்தமுயற்சியால் **1960ஆம் ஆண்டு பண்டிதப் பரீட்சை எழுதி தேர்ச்சி பெற்றார்கள்**.மௌலானா அவர்கள் இளம் வயதிலேயே திருக்குர்ஆனை முழுவதுமாக ஓதிமுடித்து விட்டார்கள். திருக்குர்ஆன் ஓத தொடங்கியது முதல் மற்ற எல்லா அறபுக் கலைகளையும் மெய்ஞ்ஞானக் கலைகளையும் அக்காலத்தே நடமாடும் பல்கலைக் கழகமாக திகழ்ந்த அவர்களின் அருமைத் தந்தையாரிடமே முறைப்படி கற்றுத் தேர்ந்தார்கள்.

**சேவை**

1963ஆம் ஆண்டு இவர்களின் ஊரிலே உள்ள அறபா மத்திய கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார்கள். 1963ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரை உள்ள காலப்பகுதியில் வெலிகாமம், சிலாபம், புத்தளம், அனுராதபுரம் ஆகிய இடங்களில் **ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும், வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார்கள். ஆசிரியராக பணிபுரிந்தவேளை ஆங்கிலம், அறபு, தமிழ் இலக்கணம், இலக்கியம், இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம்** போன்ற பாடங்களை மாணவர்களுக்கு போதித்துள்ளார்கள். 1978ஆம் ஆண்டு அனுராதபுரத்துக்கு மாற்றப்பட்டு அங்கு பணியில் இருந்த சமயம் அவர்களுக்கு E.O. (Educational Officer)ஆகபதவி உயர்வு கிடைத்தது. தொடர்ந்து 12 ஆண்டுகள் அங்கு கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்தும் அவர்களுக்கு மாற்றம்கிடைக்காத காரணத்தால் பணியிலிருந்து தம்மை விடுவித்தக் கொண்டார்கள்.

அன்று முதல் ஆதியிறை, அவர்களை ஆன்மீகப் பணிக்கு முற்றிலுமாகத் திருப்பிவிட்டது போலும். தம் தந்தையார் முன்னெடுத்துச் சென்ற மெய்ஞ்ஞான வழியை தம் தந்தையின் மறைவுக்குப் பின்னர் **அத்தரீகத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யா** எனும் ஞானப்பாட்டையின் ஆன்மீகத்தலைவராகப் பொறுப்பேற்று ஞானவேட்கைகொண்டு மெய்ஞ்ஞான அறிவைத்தேடும் மக்களுக்கு மெய்ஞ்ஞான அறிவுடன் கூடிய மானுடப் பண்பை போதிக்கும் சன்மார்க்க மேதையாகவும் திகழ்கின்றார்கள். “மனிதனை மனிதனாக வாழவைப்பதே அற்புதம் அதனையே எம்பாட்டனார் முஹம்மது (ஸல்) அவர்கள் செய்தார்கள் அதுதான்” **ஷரீஅத்** என்றுகூறி ஷரீஅத்தைப் பாதுகாத்து, மெய்ஞ்ஞான நெறிகளை இஸ்லாமியத் தத்துவத்துடன் குழைத்து இலக்கிய மெருகோடு தமிழுலகுக்குத் தந்து இறையுணர்வையும் இலக்கியத்தையும் வளப்படுத்தியுள்ளார்கள்.

**ஏகம் அனைத்தும் ஆகும் அனைத்தும் ஒருடலாகும் அஃதே ஒற்றுமையாகும். இங்கே வேற்றுமையைக் காண்பது எங்கே?** ஆத்ம ஞானக்கலை ஏகக்கலையாகும். ஏகக்கலை மறைந்தமையாலே இன்று எங்கும் மானக்கொலை ஏற்படுகின்றது. நிம்மதி குலைகின்றது. வன்கண்மை நிறைகின்றது. பகை மிகைக்கின்றது. ஆதலினால், ஏகத்துவ ஞானம் எனும் தூயவாளைக்கொண்டு இவைகளை ஒழித்து நபிகள் நாயகத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கும் முகமாக **‘ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை”** என்ற பெயரில் ஓர் ஆன்மீக அமைப்பை நிறுவி அதனூடாக மத்திய ஆசியா, தென்கிழக்காசியா மற்றும் வளைகுடா நாடுகளில் வாழும் தமிழ் பேசும் எண்ணற்ற மக்களுக்கு நல்லொழுக்கத்துடன் பண்பும் மரியாதையும் போதித்து மிக்க சிறப்பான மனித சமுதாயத்தை உருவாக்கி வருகிறார்கள். **மதுரஸ துல்ஹஸனைன்/பீஜாமிஆயாஸீன்** என்ற ஓர் அரபுக் கல்லூரியை திருச்சியில் நிறுவியுள்ளார்கள். ஞானத்தைக் கருப்பொருளாகக் கொண்டு **மறை ஞானப் பேழை** எனும் மாத இதழையும் திருச்சியில் ஆரம்பித்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக நடாத்திச் செல்கிறார்கள்.

1963ஆம் ஆண்டு தனது 25ஆம் வயதில் வெலிகமையைச் சேர்ந்த பிரபல மார்க்க அறிஞரான சகரிய்யா ஆலிம் ஸாஹிபின் மகளாரான மாதரசி ஷாஹிதா அவர்களை மணந்து இல்லற வாழ்வில் இணைந்தார்கள். இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகளை இறைவன் அருளினான்.

**வாப்பா நாயகம்** என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இவர்கள் அறபு மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சம பாண்டித்தியம் பெற்றுத் திகழ்கிறார்கள். இவர்களால் தமிழ், அறபு ஆகிய இரு மொழிகளிலும் எழுதி வெளியிட்ட ஆக்கங்கள் இவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும் அபார அறபு ஆற்றலையும், ஆன்மீக உச்சத்தையும் எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

## தனித்துவ ஆற்றல்

மௌலானா அவர்கள் தங்களின் சொந்த முயற்சியால் தமிழ் மொழியின் உயர் கல்வியைப் படித்து தமிழ் வித்துவான்களும் திகைக்குமளவு தமிழாற்றலை வளர்த்துக் கொண்டதும், **தமிழில் அத்துணை பா வகையிலும் இலக்கணப் பிழையின்றி மரபுக் கவிதைகள் யாப்பதும், இலக்கண விதிகளுக்கமைய புதுப் பாக்களையும்** இயற்றி வருவது இவர்களின் மொழி வல்லமைக்கும் தனித்துவத்துக்கும் எடுத்துக்காட்டாகும்.

"ஞானமொழிகளையும், ஞான சொற்க ளையும், நுண்மான் நொடுகுலப் பண்மான்வாய்ந்த தொடர்களையும் எழுதிக் காட்டுவதில் வாப்பாநாயகத்தினுடைய வல்லமையை நாம்வாழ்த்துவது மட்டுமல்ல**தமிழுக்குகிடைத்த ஒரு பொன்னாரம்**, ஏனென்றால் ஒரே நேரத்தில் எளிமையானவர்களுக்கு எழுதத் தெரிகிற திறமும் **வலிமையான இலக்கிய புலமையோடு செழுமையாக செழுந்தமிழை எப்படி எழுதிக் காட்டலாம் என்பதற்கு சான்றையும் இரண்டு நிலைகளிலும் புலமை பெற்று திகழ்கிற வாப்பா நாயகத்திற்கு இருமொழிப் புலமை மட்டுமல்ல இருவகை திறமையும் இரண்டு பக்கத்திலும் சேர்ந்திருக்கிறது"** என்று முன்னாள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் அவ்வை நடராஜன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இலக்கியம் வெறும் பொழுதுபோக்காய் சில வேளைகளில் இலட்சியமற்ற வாழ்வுக்கு வழிநடத்துவதாகவும் மாறிவிடும், நல்ல இலட்சியத்துக்கு மனிதனை வழிநடாத்தாவிடின் இலக்கியத்தின் இலட்சியம் பூரணமடையாது என **வித்துவான் கே. கணபதிப்பிள்ளை** அவர்கள் குறிப்பிடுகிறார். இதனை மையமாக வைத்து மௌலானா அவர்களின் இலக்கியங்களை நோக்குமிடத்து அவைகள் அனைத்துமே இன மத வேறுபாடுகளைக் களைந்து மனித குலத்தின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும்வழிகாட்டி சமூக, இன நல்லுறவை வலுப்படுத்தி பேதமையை நீக்கி மானுட இனத்தை இலக்கியத்தின் மூலம் செம்மைப்படுத்தி வழிகாட்டுவதாக அமைத்துள்ளது.


**மனிதன் மனிதனாக வாழுவேண்டுமானால், தன்னிடத் தேயுள்ள மிருகத்தன்மையை நீக்கி நல்லெண் ணத்தைப் பதியச் செய்ய வேண்டும். தானும் உள்ளமை தன்னைச் சூழ உள்ளவைகளும் உள்ளமை என்பதை உள்ளார உணர வேண்டுமானால் அவன் தன்னை யாரென அறிந்துகொள்ளல் வேண்டும்.** என்ற மௌலானா அவர்களின் கூற்றுப்படி அவ்வாறு அவன் தன்னை சரிவர அறிந்தால் அவனிடத்தே அறம், பொருள், இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் மிக மகத்தான நிலையில் மனிதநேயத்துடன் ஜொலிக்கும் என்பது யதார்த்த உண்மை. எப்படியும் வாழலாம் என்பதல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்பதுதான் இஸ்லாம். எனவே தான் மானுட வாழ்க்கை, ஆத்மீகம், பண்பாடு, பொருளாதாரம், வேளாண்மை, பழக்க வழக்கம், விஞ்ஞானம், அரசியல் மனித வாழ்வியலோடு தொடர்புடைய இன்னும் பல வாழ்வியல் நெறி களைப் பற்றி கலீல் அவ்ன் மௌலானா அவர்கள் தனது நூல்களிலும், உபதேசங்களிலும் தெளிவாக விளக்கி நேரிய இலட்சியத்தை நோக்கி மக்களை வழிநடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஒரு புலவர் மட்டுமல்ல தற்கலை பீர் முஹம்மத் அப்பா, குணங்குடி மஸ்தான் சாஹிபு போன்ற தமிழில் இஸ்லாமிய சூ∴பி ஞானம் பாடிய ஆத்மீக சித்தர் வரிசயில் வைத்து நோக்கவேண்டிய மெய்ஞ்ஞான தமிழ் சித்தர் என்று கூறின் அது மிகையாகாது.


**வண்டுது வானறையோ வானிழியும் வாரதுவோ**
**கண்டுது காக்கழையோ கானலையுந் – தண்டுது**
**காலதுவோ காமரலர் கானதுவோ காணீரே**
**வாலதுவோ வண்டமிழே வாழ் !**

என சங்ககால தமிழ்நடையில் இன்பத் தமிழை இவர்கள் போற்றிப் பாடும் விதம் சங்ககாலப் புலவர் தற்காலத்திலும் உளரோ என வியந்து பார்க்க தோணுகிறது. தமிழ் உலகம் பயன்பெறும் பொருட்டு இஸ்லாமிய சன்மார்க்க நூல்கள், இஸ்லாமிய இலக்கிய நூல்கள், தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், உரைநடை,மொழிபெயர்ப்பு நூல் கள் என பல துறைகளில் ஆக்கங்களைப் படைத்து வருகிறார்கள்.

**(1)மகானந்தலங்கார மாலை (சித்திரக்கவி)**

ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், அகன்ற யாப்பறிவும் இருந்தா லன்றி சித்திரக் கவிதைகள் எழுதுவது எல்லோராலும் முடியாத காரியமென தமிழ் அறிஞர்கள் கூறுவ துண்டு. 'மகானந் தாலங்கார மாலை" என்னும் பெயரில் சித்திரக் கவிதை யாத்திருப்பது இவர்கள் தமிழில் கொண்டுள்ள தன்னிகரில்லாப் புலமைக்கு சான்றாகும். தென்னிந்தியா கீழக் கரை யில் வாழ்ந்த **முஹம்மது அப்துல் காதிர் (மகானந்த பாபா)** எனும் ஒப்பற்ற சூ∴பி





ஞானி அவர்களுக்கு மணியாரமாக இந்த மாலை புனையப் பட்டுள்ளது. இவருடைய சீடர்கள் அனைத்து மதங்களிலும் இருந்தனர்.ஆன்ம தத்துவ விளக்கம், ஆன்ம இயல்பு, அதன் இயல்பான போக்கைத் தடுக்கும் இடர்கள் ஆகியன சிறப்பாக எடுத்துப் பேசப்பட்டுள்ளன. **சமய ஒற்றுமை இறைநேசத்தின் இன்றியமையாமை இவற்றைப் போதித்த மகானந்தரின்** பெருஞ்சிறப்பு ஆகியவை இந்நூலின் மையக் கருத்துக்களாகும். மாலை மாற்று, நாகபந்தம், மத்தளம், சக்கர பந்தம் ஆகிய சித்திரக் கவிகளுள் **மாலை மாற்று** ஓவியத்தையும், அதற்குள் வடிவமைக்கப்பட்டிருக்கும் **குறள்** வெண்பாவையும் படத்தில் காணலாம். இந்த மாலைமாற்றில் ஓர் வியக்கத்தகு அமைப்பை உற்றுணர்ந்து பார்த்தால் விளங்கி ரசிக்கலாம். இந்த மாலைக்குள் அடங்கியிருக்கும் கவிதையை இடமிருந்து ஒவ்வோர் எழுத்தாகக் கீழிறங்கிப் படித்தாலும், வலமிருந்து இடமாக மேலேவரை படித்து முடித்தாலும், ஒவ்வொரு பூவிலுள்ள எழுத்தையும் எதிர்எதிராகப் படித்தாலும்,

**தாதம தாமே தருதா தமத**
**தாருதமே தாமத தா.**

என்னும் குறள் வெண்பா வந்துவிடும்.

(2) நாயகர் பன்னிரு பாடல். (3) ஈழவள நாட்டிற் பயிர் பெருக்க வாரீர். (4) கஸீததுல் அஹ்மதிய்யா (மற்றும்) கஸீததுல் அவ்னிய்யா. (5) பேரின்பப் பாதை (6) இறைவலிய் ஸெய்யித் முஹம்மது மௌலானா (7)அவன்நாயகர் அருள் மொழிக் கோவை(அமுத மொழித் தொகுப்பு (8) ஹகாயிகுஸ் ஸபா (பரமார்த்தத் தெளிவு), (9)உண்மை விளக்கம், (10), மருள் நீக்கிய மாநபி, (11) ஒளியை மறைக்க துணியும் தூசு, (12) நபி வழி நம் வழி, (13)பதுறு மௌலித் (14) அற்புத அகில நாதர் (15) தாகிபிரபம் (16) இறையருட்பா (17) யாஸீன் மௌலான (18) குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா (கவிதை), (19) துஹ்பதுல் முர்ஸலா (20) ராத்திபதுல் ஹக்கிய்யத்தில் காதிரிய்யா (21) மனிதா! (22) பர்ஸன்ஜிய் மௌலித் (23). குறிஞ்சிச் சுவை: (24) தர்ஜுமதுல் குர்ஆன் மஅத் த.ஃப்ஸீரி வத் தப்ஸீர் (25) பாத்திமா நாயகியார் மாலை (26) அப்பாஸியாக்கள், (27) யாசீன் மௌலானா மௌலிது (அறபு), (28) Water Booth (29)யாஸீன் மௌலான என்பன ஏனையநூல்களாகும்.

## வெளிவர உள்ள நூல்கள்

இஸ்லாமிய தமிழ் உலகுக்கு சீராப் புராணத்தையும், முஹிய்யுத்தீன் புராணத்தையும் தொடர்ந்து இதுவரை பெரிய புராணம் எதுவும் வெளிவர வில்லை. இந்தக் குறையை நீக்க இவர்கள், நபிகள் நாயகத்தின் அன்புத் தோழரும் இரண்டாம் கலீ.ஃபாவுமான உமர் கத்தாப் (ரலியல்லாஹூ அன்ஹூ) அவர்களின் வாழ்க்கை வரலாறை **உமர் (ரலி) புராணம்** எனும் பெயரில் மூன்று காண்டங்களாக இப் புராணத்தை யாத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் **முதலாவது உதய காண்டம்** முடிவுற்று அச்சில் உள்ளது.

தமிழில் இலக்கணப் பிழைகள் மிகைத்து அதன் தனித்துவம் குன்றிப்போகும் இக்காலத்தில், தமிழ் இலக்கணத்தின் பிரதான நூலான **நன்னூலை** மக்கள் இலகுவில் படித்து விளங்கி இலக்கணப் பிழையின்றி தமது படைப்புக்களை படைக்க **"நன்னூலூக்கு விளக்கவுரையொன்றும் யாப்புக்கு ஒரு நூலும் எழுதி வருகிறார்கள்**. ஐங்குறுநூறில் இருந்து பாலைப் பாடல்களுக்கு **பாலை வனம்** என்னும் பெயரின் உரை எழுதியுள்ளார்கள், அது மிக விரைவில் அச்சேற உள்ளது. இதுபோன்று இன்னும் கையேட்டுப் பிரதிகளாக இவர்களின் தந்தையார் எழுதிவைத்த நூற்களையும் இவர்கள் பிரசுரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழம் தந்த புலவர்களுள் தனது 84ஆம் வயதில் காலடி பதிக்கும் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அவர்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். இவர்களின் ஆக்கங்களைப் படிக்கும் அறிஞர் பெருமக்கள் இதை நன்கு உணர்ந்து கொள்வர் என்பது திண்ணம்.

○○○

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர்
துரை மனோகரன்

## மகாகவியின் மனைவி

மகாகவி பாரதி பற்றிப் பல விடயங்கள் பலரும் அறிந்ததே. ஆனால், அம்மகாகவியின் மனைவியான செல்லம்மா பற்றிப் பலருக்கும் தெரிந்தவை சிறிதளவே இருக்கலாம். இம் மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டில், அவரது மனைவி செல்லம்மா பற்றிய தேடலில் இறங்கினேன். அந்தத் தேடலில் எனக்குக் கிடைத்த செய்திகளை ஞானம் வாசகர்களுடன் இம்முறை பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடையம் செல்லப்பா ஐயரின் மகள் செல்லம்மா. 1897 யூன் மாதத்தில் பாரதிக்கும், செல்லம்மாவுக்கும் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதேநாளில் பாரதியின் மூன்று வயதுத் தங்கை லக்ஷ்மிக்கும், செல்லம்மாவின் அக்காளுக்கும் கூடத் திருமணம் நடந்ததாக அறிய முடிகிறது. திருமணம் முடிக்கும்போது பாரதிக்குப் பதினான்கரை வயது. செல்லம்மாவுக்கு ஏழு வயது. திருமணம், செல்லம்மாவின் தந்தையார் செல்லப்பா ஐயரின் ஏற்பாட்டில் தடபுடலாக நடந்தது. திருமணக் கொண்டாட்டங்கள் நான்கு நாட்கள் நடைபெற்றன. "பாரதியாருக்கு பால்ய விவாகத்தில் அவ்வளவாகப் பிரியமில்லாவிடினும், ரசிக்கத் தகுந்த கேளிக்கைகள் மிகுதியாயிருந்தமையால், விவாகத்தில் உற்சாகமாகவே காணப்பட்டார் "என்று செல்லம்மா, தங்களது திருமணம் பற்றிய செய்தியைத் தெரிவித்திருக்கிறார். அவர்களது திருமணத்துக்கு வந்திருந்த அனைவரும் செல்லம்மாவின் தந்தையைப் பாராட்டினர். "மாப்பிள்ளை வாய்த்தாலும் செல்லப்பா அய்யருக்கு வாய்த்ததுபோல் வாய்க்கவேண்டும். மணிப்பயல், சிங்கக்குட்டி!" என்றெல்லாம் அவர்கள் புகழ்ந்தார்கள். "என் தகப்பனார் மாப்பிள்ளையைக் கண்டு உள்ளம் பூரித்து, உடல் பூரித்து மகிழ்ச்சியடைந்தார்" என்று செல்லம்மா, தங்களது திருமண நிகழ்ச்சிகள் பற்றி மனம் திறந்து கூறியிருக்கிறார்.

திருமணமானவுடன் கணவனும், மனைவியும் பேசுவது அந்தக்காலத்தில் வழக்கம் இல்லை. ஆனால், பாரதியோ, எல்லோர் முன்னிலையிலும் தமது புது மனைவியைப் பார்த்து, "தேடக் கிடையாத சொன்னமே - உயிர்ச் சித்திரமே! மட அன்னமே! கட்டியணைத் தொரு முத்தமே - தந்தால் கை தொழுவேன் உனை நித்தமே" என்று காதல் பாட்டுப் பாடத் தொடங்கிவிட்டார். அப்போதைய தமது நிலையைப் பற்றிச் செல்லம்மா பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "நான் நாணத்தால் உடம்பு குன்றி எல்லாரையும் போல் சாதாரணமான ஒரு கணவன் கிடைக்காமல், நமக்கென்று இப்படி ஓர் அபூர்வமான கணவர் வந்து வாய்க்கவேண்டுமா என்று எண்ணித் துன்புறுவேன். கிராமத்தில் பழகிய, ஒன்றும் தெரியாத ஏழுவயதுச் சிறுமிக்குக் கவிஞர்களின் காதல் ரஸ அனுபவம் எப்படிப் புரியும்?"

திருமணம் முடித்து, பின் தந்தையையும் இழந்த பின், பாரதி காசியில் தமது அத்தை வீட்டில் தங்கி, தமது கல்லூரிப் படிப்பையும் மேற்கொள்கிறார். காசியில் இருந்தபோது, அவரது நடையுடை பாவனைகள் எல்லாம் மாறுகின்றன. அவரிடத்தில் தேசபக்தியும் வளர்கிறது. அவரது போக்கு, உறவினர்களிடத்தில் பல்வேறு பயங்களை ஏற்படுத்துகின்றன. ஓர் உறவினர், பாரதியின் வித்தியாசமான போக்கைப் பற்றிச் செல்லம்மாவுக்கு எடுத்துச் சொல்லி, பாரதியை நல்லவழிக்குத் திருப்புமாறு போதனையும் செய்தார். அதனால் பயந்துபோன செல்லம்மா, "உங்களுக்கு என்மேல் அன்பிருந்தால் புறப்பட்டு வந்துவிடுங்கள்" என்று கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தார். அதற்குப் பதிலாகப் பாரதி, 1901இல் செல்லம்மாவுக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்: "எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம். உன் அன்பான கடிதம் கிடைத்தது. நீ என் காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை... நான் எப்போதுமே தவறான வழியில் நடப்பவனல்ல. இதைப் பற்றி உன்னைச் சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன். நீ இந்த மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்."

பாரதி காலமான பின்னர், செல்லம்மா பிறரின் உதவியுடன் பாரதி ஆச்ரமம் என்ற வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கி, பாரதியின் பாடல்களைத் தொகுத்து, ஸ்வதேச கீதங்கள் என்ற பெயரில் 1922இல் இரண்டு பாகங்களை வெளியிட்டார். ஸ்வதேச கீதங்கள் முதற்பாக முன்னுரையில் செல்லம்மா தமது கணவர் பாரதி பற்றி இவ்வாறு எழுதுகிறார்: "எனது புருஷன் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி இந்த நாட்டில் பிறந்தார் வளர்ந்தார் வாழ்ந்தார் இறந்தார். அவருடைய ஸ்தூல தேகத்திற்கு முடிவு நேரிட்டு, ஆத்மா விண்ணுலகம் சென்றுவிட்டது. கடவுளின் திருவிளையாடலில் இப்படி ஒரு ஆத்மா இவ்வுலகத்தில் ஜனித்து, சொற்பகாலம் தங்கி, சிற்சில காரியங்களைச் செய்துவிட்டு, திரும்பப் போய்விடவேண்டுமென்ற கட்டளையின்படி என் புருஷனும் ஜனித்து, செய்யவேண்டிய காரியங்களை அவசரம் அவசரமாகச் செய்துவிட்டு, காலம் சமீபித்தவுடன், இறப்பதுவும் ஒரு அவசரமான கடமையாகக் கொண்டு அதனையும் செய்துமுடித்தார்... எதுவும் யோசித்தாக வேண்டியதில்லை. திடீர் திடீர் என்று எண்ணங்கள் - புதிய புதிய கொள்கைகள் - புதிய புதிய பாட்டுக்கள் - அப்பாட்டுக்களுக்குப் புதிய புதிய மெட்டுக்கள் - எனது இரு காதுகளும் மனமும் ஹிருதயமும் நிரம்பித் ததும்பும் - இந்த ஒரு பாக்கியம் நான் பெற்றேன். இம்மாதிரி பாக்கியம் பெற, எத்தனை கோடி ஜன்மம் வேண்டுமானாலும், திரும்பத் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறேன்..."

செல்லம்மா 1951இல் திருச்சி வானொலியில் பாரதி பற்றிய உரையொன்றையும் நிகழ்த்தியிருக்கிறார். அந்த உரையின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்திருக்கிறது: "இன்று என் கணவரின் புகழ் விண்முட்டிச் செல்கிறது. இன்று மகாகவியின் மனைவியாகப் போற்றப்படும் நான், அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன்... காலையில் எழுந்ததும் கண்விழித்து, மேநிலைமேல் மேலைச்சுடர் வானை நோக்கி வீற்றிருப்பார்... அவருக்குப் பிரியமான பொருளைச் சேகரித்துக் கொடுத்தால், அவரது நண்பர்களான காக்கையும், குருவியும் அதில் முக்கால் பாகத்தைப் புசித்து விடுவார்கள்... புதுவையில்தான் புதுமைகள் அதிகம் தோன்றின.. இத்தனை புதுமைகளும் எழுவதற்கு நான்தான் ஆராய்ச்சிப் பொருளாக அமைந்தேன்." செல்லம்மா தமது கணவர் பற்றிப் பாரதியார் சரித்திரம் என்ற நூலையும் எழுதியிருக்கிறார்.

பாரதி தமது மனைவி செல்லம்மா பற்றிச் செல்லம்மா பாட்டு, ஸ்ரீ செல்லம்மா பாட்டு என இரண்டு பாடல்களைப் பாடியிருக்கிறார். "நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி - செல்லம்மா தன்னையே சசியென்று சரணமெய்தினேன்" என்று தொடங்குகிறது, செல்லம்மா பாட்டு. "பீடத்தி லேறிக் கொண்டாள் - மனப் பீடத்தி லேறிக் கொண்டாள்" என ஆரம்பிக்கிறது, ஸ்ரீ செல்லம்மா பாட்டு. ஆனால், பாரதி பாடல் தொகுப்புகளில் செல்லம்மா என்ற பெயர் கண்ணம்மா என்றே பதிவாகியிருக்கிறது. இதற்கான காரணத்தை, பாரதியின் இளைய மகள் சகுந்தலா என் தந்தை என்ற தமது நூலில் பின்வருமாறு தெரிவிக்கிறார்: "... என் தந்தை, சில காதல் பாட்டுகள் தாமாகவே எழுதினார். 'செல்லம்மா பாட்டுக்கள்' என்று அதில் குறிப்பிட்டிருக்கும். 'செல்லம்மா' என்பது என் தாயாரின் பெயர். தம் மனைவியையன்றி வேறொரு பெண்ணை மனத்தினாலும் நினைக்காத பரிசுத்த எண்ணமுடையவரானதால், காதல் பாட்டுக்கள் தாம் பாடுவது தம் மனைவிக்கு மட்டுமே என்று சொல்வார். 'நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி செல்லம்மா' என்று சிறிதும் சங்கோசமில்லாமல் பாடுவார். ஆனால், அந்தப் பாட்டுக்களைப் பின்னாளில் அச்சேற்றும்போது, அப்பாதுரை மாமா விருப்பப்படி, செல்லம்மா என்று குறிப்பிடாமல், கண்ணனைக் காதலியாக அவர் பலமுறை பாடியிருக்கும் முறைப்படி 'கண்ணம்மா' என்று குறிக்கப்பட்டிருக்கிறது." அப்பாதுரை என்பவர், செல்லம்மாவின் அண்ணன்.

அக்காலத்தில் பிரபல பாடகியாக விளங்கிய டி.கே.பட்டம்மாள், பாரதியார் பாடல்களைச் சில திரைப்படங்களில் பாடியதோடு, தமது இசைக்கச்சேரிகளிலும் பாடிவந்துள்ளார். அவ்வாறு ஒருமுறை பட்டம்மாள், தமது இசைக்கச்சேரியில் பாரதி பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தபோது, அப்போது சபையில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த செல்லம்மா கண்ணீர் விட்டு அழத் தொடங்கிவிட்டார். 1960களில் வெளிவந்த கப்பலோட்டிய தமிழன் திரைப்படத்தில் சசிகலா என்ற நடிகையும், பின்னர் வெளிவந்த பாரதி திரைப்படத்தில் தேவயானியும் பாரதியின் மனைவி செல்லம்மா பாத்திரம் ஏற்று, அருமையாக நடித்திருந்தமையும் நமது மனத்தை விட்டு நீங்காத நிகழ்ச்சிகள்.

○○○

## கலாபூஷணம் கே.பொன்னுத்துரை








**ஞானம் கலை இலக்கியப் பண்ணை நடத்திய 248ஆவது ஞானம் தொடர்பான கலந்துரையாடல்**

*23-01-2021 அன்று நடைபெற்ற இணையவழி கருத்தாடல் இலங்கை நேரம் ஐந்து மணிக்கு ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி கலந்துரையாடலில் இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா, டென்மார்க், இங்கிலாந்து ஜேர்மனி, பிரன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும் வாசகர்களும் கலந்துகொண்டார்கள். முதலில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர், ஞானம் 248 ஆவது இதழில் வெளிவந்த சிறுகதைகள் பற்றிய தனது கருத்தைத்கூறினார். தொடர்ந்து, டென்மார்க் எழுத்தாளர் திருமதி கலாநிதி ஜீவகுமாரன் ஞானத்தில் வெளிவந்திருந்த கட்டுரைகள் பற்றிய கருத்தினை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா ஞானம் கவிதைகள் பற்றிய தனது கருத்தை முன்வைத்தார். நிறைவாக திருமதி அன்ன லட்சுமி இராஜதுரை ஞானம் 248 இதழ்பற்றிய ஒட்டுமொத்த பார்வையை வழங்கினார். தொடர்ந்து பார்வையாளர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். கனடா பேராசிரியர் நா.சுப்பிரமணியன், கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன், டென்மார்க் ஜீவகுமாரன், அவுஸ்திரேலியா பேராசிரியர் ஆசி. கந்தராசா, ஜேர்மனி எழுத்தாளர்சங்கச் செயலாளர் புத்திசிகாமணி அவுஸ்திரேலியா எழுத்தாளர் முருகபூபதி, இலண்டன் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், இலங்கை எழுத்தாளர் சீனா உதயகுமார் உள்ளிட்ட வேறும் பலரும் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தனர். இந்தக் கருத்தாடலை ஞானம் நிர்வாக ஆசிரியர் ஞானம் பாலச்சந்திரன் ஆற்றுப்படுத்தினார்.*

# வாசகர் பேசுகிறார்

ஞானம் 248ஆம் இதழ் கிடைக்கப் பெற்றேன். நன்றி. இவ்விதழின் 18ஆம் பக்கத்தில் காணப்படும் நாட்டிய கலாநிதி திருமதி கார்த்திகா கணேசர் அவர்களின் கட்டுரையில் பௌத்த மதத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் இந்திய மண்ணில் எவ்வாறமைந்தது என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இக் கட்டுரையின் இரண்டாம் பந்தியில் 'சாதி சமயம் உயர்வு தாழ்வு இல்லாத சமுதாயத்தைப் படைப்பதே பௌத்த தர்மத்தின் அடிப்படை இலட்சியம்' என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி கருத்துக்கள் பற்றி எமக்கு எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் பௌத்த மதம் வேரூன்றியுள்ள இலங்கையில் மேற்சொன்ன சமத்துவ இலட்சியம் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளது என்பதிற்தான் சந்தேகமுள்ளது. இலங்கையில் வசிக்கும் சைவ மக்களைப்போலவே பௌத்தர்களும் சாதியும் சாதகமும் பார்த்துத்தான் தமது பிள்ளைகளின் திருமணங்களை நிச்சயிக்கின்றார்கள். சைவ மக்கள் வணங்கும் ஆதித் தெய்வமான சிவனை அவர்களும் சிவ தெய்யோ என்று சொல்லி வழிபடுகின்றார்கள். சைவமக்கள் வழிபடும் முருகனை அவர்கள் கத்தறகம தெய்யோ என்று சொல்லி வணங்குகின்றார்கள். கண்ணகியைப் பத்தினி தெய்யோ என்று வணங்குகின்றார்கள். இரண்டு இனங்களுமே இலங்கை வேந்தன் இராவணனைத் தமது முன்னோடி என்று உரிமை கோருகின்றனர். இரண்டு இனங்களுமே இலங்கையின் பழங்குடிகள் என்று ஆய்வாளர்களும் ஆதாரங்களை முன்வைத்துள்ளார்கள். இவ்வாறு நெருங்கிய உறவுகளைக் கொண்ட இரு இனங்களுக்கிடையே ஏன் இன்றுவரை சமத்துவத்தை நிலைநாட்ட முடியவில்லை என்பது ஒரு பெரிய கேள்விக்குறி ஆகும். உண்மையான பௌத்த கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தி இலங்கையில் உள்ள இனங்கள் மத்தியில் சமத்துவம் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த முடியுமானால் இலங்கை மக்கள் அனைவரும் அதுபற்றி மிகவும் மகிழ்ச்சி அடைவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஞானம் சஞ்சிகையிற் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வரும் நாட்டிய கலாநிதி திருமதி கார்த்திகா கணேசர் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

**கலைமாமணி கா.தவபாலன், தம்பசிட்டி பருத்தித்துறை**

●●●

ஞானம் ஜனவரி 2021 (248) இதழ் குறிப்பிட்ட காலத்திலேயே கிடைக்கப்பெற்றேன். அதன் ஆசிரியர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அச்சுக்கூலி அதிகரிப்பு உட்பட அத்தனை பிரச்சினைகளை நாங்களும் நன்றாக ஊணர்கிறோம். இத்தனை சிக்கல்களுக்கு மத்தியிலும் ஜனவரி இதழ் எனக்கு ஜனவரி 5ஆம் திகதியே தபாலில் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் அந்த இதழில் உள்ளடக்கப்பட்ட கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் பத்தி எழுத்து நூல்விமர்சனம் அத்தனையும் சிறப்பாக இருந்தன. வாழ்த்துக்கள்! பாராட்டுக்கள்! நிலைமை சீரானவுடன் ஞானம் மாத இதழ் மாதம் இருமுறை இதழாக மாறி வார இதழாக மாறி மிகச்சிறப்பாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு!

**இணுவை ஆ. பாலஶ்ரீதரன், கொழும்பு –06**

●●●

ஞானத்தின் சிறுகதைகள் பல மெச்சத்தக்கனவாகவே உள்ளன. அதுபோல ஏனைய பலவகை விடயங்களும் நன்றே உள்ளன. உங்கள் பணிபாராட்டுக்குரியதே. நீங்களும் மகனும் மனைவியும் ஏனையோரும் ஞானத்தினை தொடர்ந்து கொணர 2021இல் மீண்டும் வாழ்த்துகிறேன்.

**மொழிவரதன். கொட்டகலை.**

●●●

ஞானம் சஞ்சிகை -248 படித்தேன். அனுப்பி வைத்ததற்கு நன்றி!

ஶ்ரீரஞ்சனி, மற்றும் ராணி சீதரன் எழுதிய சிறுகதைகள், ஈழத்தின் பிரசுர களத்தில் வீறுநடை போட்ட வீரகேசரி நாவல்கள் (என். செல்வராஜா) பௌத்தம் எவ்வாறு இந்தியக் கண்டத்திலின்றும் வெளியேறியது-(கார்த்திகா கணேசர்) கட்டுரைகள் சிறப்பாக இருந்தன **– தர்மினி**

●●●

வீரகேசரி பிசுரவரிசையில் பெருவாரியான நாவல்கள் வெளிவந்ததன் பின்னணியில் மூலவிசையாக இயங்கியவர் வீரகேசரி நிறுவனத்தில் பொதுமுகாமையாளராகப் பணியாற்றிய சிற்றம்பலம் பாலச்சந்திரன் என்பது இலக்கிய உலகில் பலருக்கும் தெரிந்த விடயம். நூலகர் என். செல்வராஜாவின் கட்டுரையில் அது குறிப்பிடப்படாதது குறையாகத் தெரிகிறது.

**புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

●●●

ஞானம் 248ஆம் இதழ் 08-01-2021 கிடைக்கப்பெற்றேன் நன்றி. கொரோனா போராட்டத்துக்குள்ளும் ஞானம் தன்னைச் சதாகரித்துக் கொண்டுள்ளமைக்கு வாழ்த்துக்கள், எனினும் ஞானம் தனது எடையில் நிறைவைக்குறைப்பது வருத்தந்தான். இப்போ காலம் அறிந்து பயணிப்பதின் கட்டாயம் புரிகிறது. ஈழத்தின் பிரசுரகளத்தில் வீரகேசரியின் வகிபாகம் பற்றிய நூலகலாளரின் நினைவூட்டல் ஞாபக மலர் ஆகிறது.

கலாநிதி கார்த்திகா கணேசர் அவர்களின் கட்டுரை படித்தேன் நன்று. எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி பௌத்தம் வெளியேறியதா? வெளியேற்றப்பட்டதா? மிகத்துன்பகரமான முடிவாகத்தான் அது இருந்தது என்பதுதான் உண்மை. பல உயிரிழப்புகள் நடந்தேறிய கதையைப் படிப்பவர்களுக்கு பார்க்க முடியாமல் இந்திய வரலாற்றாசிரியர்கள் மறைத்துவிட்டார்கள் என்பதும் உண்மை. இந்துத்துவா அத்துணை பலமானது.

'மகாயானம்' அது புத்தரின் உண்மையான சிந்தனை. 'தேரவாதம் (அல்லது ஈன ஞானம்) தேவதத்தனின் வழிகாட்டலில் முகிழ்ந்தது. முற்று முழுதான வைஷ்ணவத்தின் ஆதிக்க வெறியானது சாதியத்தை சாமர்த்தியமாக சாதிப்பதற்காகவே பிரபாகரரும் ஆதிசங்கரரும் தோன்றினர். காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் கோயில் வெளிமதிலில் ஐந்து புத்த உருவங்கள் இப்போதும் உண்டு. (கிருஷ்ண தேவராயர் கி. பி. 1509இல் இக்கோயிலை அமைக்க உதவினார்) இவைகள் இடித்துக் கொண்டுவரப் பட்ட கற்கள். மௌரியப் பேரரசின் காலத்தின் பின் தோன்றிய சுங்கத் கோத்திர அரசன் புன்னிய மித்திரன் ஒரு புத்த துறவியின் தலைக்கு நூறு பொற்காசுகள் பரிசளிக்க அறிவித்திருந்தமை வரலாற்றில் உண்டு. அறிஞர் மயிலை சீனி வெங்கடசாமி அவர்களின் தொகுப்பான 'பௌத்தமும் தமிழும்' ஆய்வுத் தொகுப்பில் இடம் பெற்று உள்ளதும் உண்மை. மயிலை சீனி வெங்கடசாமி அவர்கள் மகாகவியின் மைத்துனர். பாரதிபற்றிய முழுவரலாற்றை நமக்குத் தந்தவர். புத்தமதம் இலகுவாக வெளியேற்றப்படவில்லை. வைஷ்ணவத்தின் கொடூர கொலை வெறிக்குப்பின்பே மகாயானம் மறைந்தது என்பதுதான் உண்மை.

ஐயா, எரிமலை இன்னும்பல ஏற்றங்களைக் காணும். ஏனெனில் அது நாவல் என்பதைக் கடந்து வரலாற்று ஆவணமாகப் பதிவாகிறது. காலங்கள் கனிவாகும்.

**மா. குலமணி, 4ஆம் வட்டாரம் நயினாதீவு**

●●●

தி. ஞானசேகரன் ஐயா அவர்களின் ' எரிமலை நாவல் பற்றி ரஞ்ஜனி சுப்பிரமணியம் அவர்கள் மிக அருமையாக விமர்சனம் எழுதியிருந்தார். எத்தனையோ பாராட்டுகளும் கௌரவங்களும் விருதுகளும் பெற்ற கதைச்சித்திரம்தான் அது. என்றாலும் அதற்கான காரணத்தை தகுந்த முறையில் விளக்கம் கொடுத்து எழுதியுள்ளார். ஈழத் தமிழினத்தின் ஒடுக்கு முறையை ஆரம்பத்திலிருந்தே சொல்லி, அகிம்சைப்போராட்டம் தோல்விகண்டு, தமிழினம் அழிந்து கொண்டே வருவதை பொறுக்காதுதான் ஆயுதப் போராட்டம் வெடித்துக்கிளம்பியது என்ற நியாயத்தன்மையையும் சுட்டிக்காட்டியுள்ளார். எரிமலை பற்றி எவ்வளவோ வியந்துரைத்த அவர் தமிழினம் பற்றி தன் அபிப்பிராயத்தை இப்படிச் சொல்லியுள்ளார்.

"சக மனிதரிடையே சாதிப்பாகுபாடற்ற சமத்துவத்தைக்காட்டாத ஒரு இனம், சகபோராளிகளிடையே கூட ஒற்றுமை புரிந்துணர்வு என்பவற்றின் வலிமையை உணராத இயக்கங்கள், ஒன்றிணைந்து உரிமைகளுக்காக போராடாத அரசியல் வாதிகள் என பாகுபாடுகளையே தகுதிகளாகக் கொண்டு வாழும் தமிழ்ச் சமூகத்தினராகிய நாம், இலங்கையில் பெரும்பான்மையினராக இருந்திருந்தால் இங்கு வாழும் சிறுபான்மை இன, மத மக்களுக்கு நியாயமாக நடந்திருப்போமா?"

அரசியல் வாதிகள் போராளிகள் உள்ளிட்ட ஒவ்வொரு தமிழனும் கருத்தில் எடுக்கவேண்டிய கருத்துரைதான் இது! ஒற்றுமையில்லாத இந்த இனம் மீட்சிபெற வழியே இல்லை!

**சூசை எட்வேட், திருகோணமலை**

○○○